Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூன் 25-ஜூலை 01, 2000

வாரமலர்

தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 362

யாழ் மக்கள்....
யுத்தத்தின் கைதிகள்

கண்களின் புருவங்களும் பெண்களின் குணங்களும்

முத்தம் பாடல்

அஜித் எடுக்கும் அவதாரங்கள்

-சிம்லா வித் சுசீலா-

பட்டுக்கோட்டை பிரபாகரின் விறுவிறு தொடர்

முரசம்

இந்தியாவின் பங்கு

அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.

இந்திய
வெளி நாட்டமைச்சரின்
இலங்கை விஜயத்தின்
அரசியல் முக்கியத்துவம்
என்ன என்பது
அக்கறைக்குரிய
விடயமாக உள்ளது.

தனது விஜயம் குறித்து
அவரே கூறிய கருத்தில்
மூன்று நோக்கங்களைச்
சுட்டிக் காட்டியிருந்தார்.

இலங்கையின் இறைமையிலும்
பிரதேச ஒருமைப்பாட்டிலும்
இந்தியா கொண்டுள்ள
உறுதியான
கடமைப் பொறுப்பை
மீண்டும் வலியுறுத்தவும்
இலங்கை நெருக்கடியில்
சமாதானத் தீர்வைக்
காண்பதற்கான
தனது அக்கறையை
எடுத்துரைக்கவும்
தமிழ் மக்களின்
அபிலாஷைகளை
நிறைவு செய்யக்கூடிய
தீர்வு ஒன்றுக்கான
அரசியல் பேச்சுவார்த்தைகள்
மிக விரைவில்
ஆரம்பிப்பதை
உறுதிப் படுத்தவுமே
தனது விஜயம்
மேற்கொள்ளப்பட்டதாக
அவர் தெரிவித்தார்.

அதேவேளை
இலங்கை அரசாங்கத்துக்கு
100 கோடி அமெரிக்க
டொலர்களை
மனிதாபிமான
உதவியாக
இந்தியா வழங்க
முன்வந்துள்ளது.

நேரடியாக
இராணுவ ரீதியில்
தலையிடப் போவதில்லையென
திரும்பத் திரும்பக்
கூறிவரும்
இந்தியா
ஆபத்து நேரத்தில்
காத்திரமான
உதவிகள் எதையும்
செய்யவில்லையென்று
இலங்கைக்கு இருந்த
மனக்குறையை
நீக்கும் பொருட்டே
இத்தகைய உதவியை
வழங்க முன்வந்திருப்பதாக
உணர முடிகிறது.

அத்தோடு
இலங்கை விஜயத்தில்
எதிர்க்கட்சியுடனும்
தமிழ்க்கட்சிகளுடனும்
யஷ்வந்த்சிங் மேற்கொண்ட
சந்திப்புக்கள் மூலம் அனைத்துத்
தரப்பிலிருந்தும்
இந்தியாவின் பங்களிப்பு
வலியுறுத்தப் படுவதை
உணர்த்தியுள்ளார்.

இலங்கைப் பிரச்சனையில்
அரசியல் தீர்வைக்
காணுவதற்கு இந்தியா
தற்போதைக்கு
மத்தியஸ்தம் எதையும்
வகிக்கப் போவதில்லை
என்று தெரிவித்திருக்கும்
யஷ்வந்த்சிங்
அதேவேளை
அரசியல் தீர்வுக்கான
ஆலோசனைகளுக்கு
இந்தியா உதவுமெனவும்
கூறியுள்ளார்.
இந்திய அரசாங்கத்தின்
இத்தகைய
அரசியல் ஆலோசனைகளுக்காக
விசேட பிரதிநிதியொருவர்
நியமிக்கப்படுவாரெனவும்
தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை நெருக்கடியில்
இரு பிரதான விடயங்கள்
கோலோச்சுகின்றன.

ஒன்று,
ஏற்புடைய
அரசியல் தீர்வொன்றை
எட்ட முடியாத
அரசியல் முட்டுக்கட்டைகள்.

இரண்டாவது யுத்தம்.
அரசியல் தீர்வானது
மிக அவசரத் தேவை.
குறிப்பாக் கூறப்போனால்
எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு
முன்னதாக
இந்தத் தீர்வு
காணப்படாவிட்டால்
அது
மீண்டும் பின்தள்ளப்பட்டு
நீண்டகாலம் இழுபடும்
வாய்ப்புகள் உள்ளன.

அரசியல் தீர்வில்
இந்தியாவின் ஈடுபாடு
எத்தகையதாக இருந்தாலும்
இந்தக் காலக்கெடுவுக்குள் தீர்வு
ஒன்றை
நிறைவான வடிவில்
வெளிக் கொணர
முடியுமா என்பதிலேயே
அதன் வெற்றி
தங்கியுள்ளது.

அவ்வாறான
அரசியல் தீர்வு
யுத்தத்துக்கும்
முடிவு கட்டக் கூடியதாய்
அமைவதே அவசியம்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

பத்து அருள் கட்டளைகள்

ஆன்மீகம்

* காலையில் எழுந்தவுடன் கடவுளை இரண்டு நிமிடங்களாவது மனதில் நினைத்து பிரார்த்தனை செய்க.
* அன்றைய நாள் நல்ல நாளாக அமைய வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்க.
* புண்ணிய நதிகள், கோமாதா, சிரஞ்சீவிகள், சப்தகன்னியர்கள் முதலியவர்களைக் குறைந்தபட்சம் ஒரு நிமிடமாவது நினைக்க வேண்டும்.
* வாரத்தில் ஒரு நாளாவது அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட வேண்டும்.
* உன்பக்கத்தில் வாழ்பவர்களையும், மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்.
* சாப்பிடும் முன்பு மிகுங்களுக்கோ, பட்சிகளுக்கோ ஆகாரமளித்துவிட்டுப் பிறகு சாப்பிடவும்.
* அன்றாடம் குறைந்த பட்சம் சக்திக்கேற்றபடி இயன்ற தர்மம் செய்க.
* நெற்றியில் தவறாது 'திலகம்' வைத்துக் கொள்க.
* உறங்கச் செல்லுமுன் அன்றைய நாளில் நீ செய்த நல்லவை கெட்டவை எதுவாயினும் எண்ணிப்பார்க்கவும்.
* ஆண்டவன் நாமத்தை நூற்றியெட்டுத் தரம் உச்சரித்து விட்டு பின்பு உறங்குக.

மேற்கூறப்பட்ட பத்து அருள் கட்டளைகளையும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மக்களின் அன்றாட நல்வாழ்வுக்கு அருளியுள்ள அமுதத் துளிகள்.

அ.அரசரெத்தினம்-சேனையூர்-06.

மன்னித்தலே சிறந்தது

நம்மில் பலர் மற்றவர்களின் குற்றங்களை மனப்பூர்வமாக மன்னிப்பது கிடையாது. எதிராளிகள் கஷ்டப்பட வேண்டும் என்று கர்த்தரை நோக்கி ஜெபம் செய்கிறவர்களும் நம்மிடையே காணப் படுகின்றனர்.

ஆனால் இயேசு கூறுகிறார்: "மனுசருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் மன்னியாதிருந்தால், உங்கள் பரமபிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்!" (மத் 6:14:15)

மன்னித்தல் என்பது இரக்கம் இல்லாதவர்களால் செய்ய முடியாத காரியம். மற்றவர்களுடைய பலவீனங்களை உணர்ந்து அவர்களுக்காக இரக்கப்படுகிறவர்கள்தான் மன்னிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம்.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்!" (மத் 6:12)

என்று இயேசு ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார். மற்றவர்களை மன்னிக்காத நாம் இந்த ஜெபத்தை ஜெபித்தால், நாங்கள் செய்யும் குற்றங்களும் மன்னிக்கப்படுமா? மாட்டாது தானே?

கர்த்தரின் இரக்கத்தினால் மன்னிப்பைப் பெற்ற நாங்கள், மற்றவர்கள் மேலாகவும் இரக்கம் காட்டி அவர்களை மன்னிப்போம்! நாமும் மன்னிக்கப்படுவோம்.

எம்.வேதமாணிக்கம்-கொழும்பு 06.

பேராசைப் பேரழிவைத் தரும்

இன்று நம்மவர் மத்தியில் அனேகமானோர் உலகாய மோகமும் பொருள், உடமை ஆகியவற்றின் மீதுள்ள பேராசையும் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இது நம்மை எண்ணற்ற பாவங்களைச் செய்வதற்கும் மறுமையின்மீது அக்கறையற்றவர்களாக ஆக்கி விடுவதற்கும் தீனுல் இஸ்லாத்தின் கொள்கை வழியில் தியாகங்கள் புரியவிடாமல் தடுப்பதற்கும் ஆணிவேராக இருந்து இறுதியில் நரக நெருப்பில் தள்ளிவிடுகிறது.

நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள் "பேராசை கொள்வதிலிருந்து உங்களைப் பாது காத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பேராசை உங்களுக்கு முன்தோன்றிய மக்களை நாச மாக்கியிருக்கிறது. மனிதர்களின் இரத்தத்தை கொட்டவும் அல்லாஹ்வால் தடை செய்யப்பட்டவற்றை ஆகுமானது எனக்கொள்ளவும் பேராசை அதனை ஊக்குவிக்கிறது." (முஸ்லிம்)

எனவே, இன்றிலிருந்தாவது நமது உள்ளத்தில் படர்ந்த இருள்களாக காட்சிதரும் பேராசை எனும் கொடிய அரக்கனை விரட்டியடிக்க ஒவ்வொருவரும் முயல்வோமாக

உதவி: "நாளும் பழக நபிமொழி நாற்பது"

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

கவிதைப் போட்டி இல.362

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 01.07.2000

கவிதைப் போட்டி இல.362
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

கவிதைப் போட்டி இல.359

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

வாழ்க்கை

உங்களுக்கென்ன
மீன்களே....
நீங்கள்
தண்ணீருக்குள்;
எம்மவர்
இங்கே நிதம்-
கண்ணீருக்குள்!

கொஸ்லாந்தையூர்-
அஞ்சன்.

வேகமாய் வா

காதலியே
வா ஓடலாம்
எமக்கு வேண்டாம்;
இந்தப் பயங்கரப்
பாக்கு நீரிணை....!

என்.முதல்வன்-
கொழும்பு 13.

பரிசுக்குரிய கவிதை

மனிதர்களல்ல...!

சென்று வென்று
வருவோம்
கண்டு கொண்ட
நிலைக்கு;
கடுகளவும் நாம்
சண்டையிடுவதில்லை;
ஏனெனில், நாங்கள்
மனிதர்கள் இல்லை!

ஜனபா அஸ்மாஹன்-
போத்தலப்பிட்டி.

கொ(தி)ண்டாட்டம்

மீன்பிடித்தடையால்
உங்கள்பாடு
கொண்டாட்டம்.....!
எங்கள் பாடு
திண்டாட்டம்!

சிவஸ்கந்தா சசிதரன்-
கொழும்பு-13

நிம்மதி

நிம்மதியற்ற உலகில்
எங்கள் வாழ்க்கைப் பயணம்!
நிம்மதி உள்ள கடலில்
உங்களுக்கு என்ன கலக்கம்!
ஓ.... துப்பாக்கியின் ஓசை
கேட்டா?

பி.ராம்குமார்-கொழும்பு 15.

ஆபத்து

ஏய் மீன்களே!
நாடு இருக்கும்
நிலை தெரியாது
கூட்டில் இருக்கும்
குருவி போல்நீ பறக்க
ஆசைப்படுகிறாயா?
வேண்டாம்
அது உன் உயிருக்குத்தான்
ஆபத்து!

ரி.றதீஷன்-யாழ்ப்பாணம்.

அழியா அன்பு

அன்பினால் அலைமோதிய
காலமெல்லாம்,
அன்பே! உன் உள்ள
உணர்வுகள்
வாழ்க்கைக் கரையிலே
அலைமோதுகின்றதே!

இருதயராணி தம்பிராசா-
கொழும்பு-13.

சுதந்திரம்

இவைகளுக்கிருக்கும்
சுதந்திரம் கூட-இங்கு
தமிழனுக்கில்லையே....!

சி.நந்தகுமார்-ஆரையம்பதி 02.

சொந்தம்!

பூமிக்கு
மழை நீர் சொந்தம்;
மீனுக்கு
தண்ணீர் சொந்தம்;
தமிழனுக்கு
கண்ணீர் சொந்தம்!

அ.யாழினி-
மட்டக்களப்பு.

முன் எச்சரிக்கை

அன்று! துள்ளித் திரிந்த
இளைஞர்கள்-சிறையில்!
இன்று! துள்ளித்திரியும்-
நீங்கள்
எதிரி வலையில்
சிக்கலாம்!

ஏ.எச்.முகம்மட் அனீத்-புதிய காத்தான்குடி-03.

வாழ்க்கை

மனிதா!
நாங்கள் தண்ணீரில்
வாழ்கின்றோம்!
நீயோ-தினம்
கண்ணீரோடல்லவா
வாழ்கின்றாய்!

மொஹமட் இர்ஷாத்-
காத்தான்குடி-05.

உண்டு...

நீயோ....!
மனிதரையும் மகிழ்வித்து
அவருயிரும் காப்பாயாம்....
ஆனால் மாந்தரிலே உண்டு
தம்மையே தாமழிக்கும் பலர்!

சி.மதியழகன்-திக்கம்.

'க்ளிக்'

நீருக்குள் வாழ்ந்தபோது
கிடைத்த நிம்மதி,
நிமிடத்திற்கு மேலே
வந்ததும் போய்விடுகிறதே!

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

வாசக(ர்)சாலை

தித்திக்கும் முரசே!,

அன்பான இரசிகர்களுக்காக நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்துமே அருமை. 'இடி அமீன்' அதிர வைத்தார்.

ஈட்டி போல் மனதில் பாய்கிறாள். 'மோனிக்கா' உள்ளத்தை மகிழவைக்கும், 'பாப்பா முரசு' ஊரை உலகைச் சுற்றி வரும் 'ஸ்போர்ட்ஸ்' எல்லோரையும் கவரும். 'சினிவிசிட்' ஏங்கவைக்கும் தொடர்(கள்) கதை ஐந்தாம் பக்கம் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' அனைத்துமே சூப்பர். ஒவ்வொரு வாரமும் என் கைகளில் தவழும். ஒங்கி உயர்ந்த முரசே நீ வாழ்க... வாழ்க.. உன்னைக் கண்டதும். எநதப் பக்கத்தை முதலில் படிப்பது என்று சில நொடிகள் தடுமாறுகின்றேன். வாரமதோறும் உன்னை எதிர்பார்த்து காத்திருப்பவள்-

எஸ்.சுதாசினி-கம்பளை.

என் இதயம் கவர்ந்த இனிய முத்தான முரசே! நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் ஒரு புதுரகம். அதில் 'சினிவிசிட்', 'தேன் கிண்ணம்', 'எக்ஸ்ரே ரிபோர்ட்' ஆகியவை தனிரகம், என் இதயத்தை கொள்ளை கொண்ட அன்பின் தமிழ் முரசுக்கு, பாவை இவளின் கோடானு கோடி வாழ்த்துக்கள்.

எம்.றிஸ்வானா-
புதியகாத்தான்குடி-01.

அன்புள்ளம் கொண்ட எனது முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. எனது முழு முச்சு உனது முரசைப் படிப்பது தான். அதிலும் 'பாப்பா முரசு' கவிதைவரிகள். 'மன்னாதி மன்னன்' போன்ற அம்சங்கள் மிகவும் சுவையானவை ஆகவே உங்கள் தமிழ்பணி தொடர வேண்டும் தமிழ் நெஞ்சங்கள் தொடர்ந்து உங்களுக்கு தங்கள் விமர்சனங்களை அள்ளி வழங்க வேண்டுமென்று இறைவனிடம் மண்டாடுகின்றேன்.

எஸ்.தேவகுமார்-செட்டிக்குளம்.

அன்புள்ளம் கொண்டவர்களே,

மே 28 ஜூன் 03 தினமுரசு, வாரமலரில் 'புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் 14 நூல்கள் ஒரே மேடையில் வெளியீடு' எனத்தலைப்பிட்டு புகைப்படத்துடன் செய்தியை வெளியிட்டுப் பெருமைப்படுத்தியமைக்கு நெஞ்சார்ந்த நன்றி!

டாக்டர் இந்திரகுமார் அவர்களின் முழுப்பேச்சை வெளியிட்டு, நிறைய புதிய செய்திகளை வாசகர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அறியும்படியாகச் செய்திருக்கிறீர்கள். உலகின் பல பகுதிகளிலிருந்தும் இச்செய்திகளைப் படித்துவிட்டு எங்கள் எழுத்தாளர்களும், நண்பர்களும் தொடர்ந்து மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார்கள்.

மீண்டும் நன்றி சொல்லி இக்கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புடன்,
ரவிதமிழ்வாணன்,
நிர்வாக இயக்குநர்-மணிமேகலைப் பிரசுரம்,-சென்னை 17.

நான் விரும்பும் தினமுரசே!

நீ தமிழப் பத்திரிகைக்கெல்லாம் அரசே! உன் சுவாரசியம் அத்தனையும் ஒரு தினுசே! உனைக்கானாவிட்டால் தாங்கிடுமோ என் மனசே!

ஏ.சி.நளீம்-சாய்ந்தமருது-03.

அன்பின் முரசே...!

வழி மேல் விழி வைத்து காத்தி ருப்பேன் உன்னைக் கண்டதும்தான் எங்கள் இதயங்கள் மலரும்.... நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எங்களை மகிழ்ச்சிப் படுத்துகின்றன. மேலும் மேலும் உன் பணி தொடர என்றென்றும் வாழ்க! வளர்க வாழ்த்துகின்றேன்.

ஏ.தர்ஷா-தேற்றாத்தீவு-02

முத்து முத்தான அம்சங்களை,

தித்திக்கும் வகையில் தாங்கிவரும் என் இனிய முரசே.... வீரப்பனுக்கு மகள் வித்தியாராணி எழுதிய பாச மடலைப் படிக்கும் போது அந்தப் பிஞ்சு வயதின் உள்ளக் குமுறல்கள் எம் கண்முன்னே காட்சி அளிப்பவையாக இருந்தன. இருவாரத் தொடரான 'இர்விங் வாலஸின் சகலமும் நானே!' தொடர் மிகவும் சுவாரசியமாக இருந்தது.

அதுபோலவே.... 'தேன் கிண்ணம்', 'சிறுகதைகள்', 'கவியரசு கண்ணதாசனின் அரங்கம் அந்தரங்கம்', 'ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி எஸ்.டி.சிவநாயகம்' போன்ற பல அம்சங்களை முரசுமூலம் அறிந்து மகிழ்ச்சியடைவதில் வாசகர்களான எங்களுக்கும் மனமகிழ்ச்சிதான். உன் சேவை நீடூழி வாழ வாழ்த்து மழை பல.

என்.எல்.முஸம்மில்-புதிய காத்தான்குடி06.

அன்பின் தினமுரசே!

நீ தாங்கி வரும் அத்தனை செய்திகளும் அற்புதம். உன்னை ஆக்கியோனுக்கு நேர்ந்த நிலையை இட்டு அவருக்கு எனது ஆழ்ந்த இதய அஞ்சலியைக் காணிக்கை ஆக்குகின்றேன். கத்தி முனையில் நின்று பேனா முனையால் முகமூடிகளின் முகத்திரை கிளித்த அந்தப் பேராளன், மக்களால் மறக்கப்பட முடியாதவன் என்பது திண்ணம். ஆனாலும் தளர்ந்து விடாது முரசே! நீ அறையும் முரசு ஏழேழு உலகமும் பாய்ந்து சங்கத் தமிழன் பரம்பரை ஒன்று சாவில் நின்று தவிப்பதை இன்றே... திக்கெட்டும் முரசறைந்துதினம் தினம் உரைத்து விடு! எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப.சசிகுமார்-விசுவமடு.

தித்திக்கும் செய்திகளை திக்கெட்டும் பரப்பி எத்திக்கும் புகழோடு என்றுமே திகழும் ஒப்பற்ற தினமுரசே!

வாரமோரு முறை வாசகர் நெஞ்சங்களில் இளந்தென்றலாய் வீசி எல்லையில்லா உள்ளங்களைக் கொள்ளை கொண்ட உந்தன் சேவை என்றென்றும் எமக்குத் தேவை. உன் வசந்த வருகை எமக்களிக்கின்றது உவகை. என்றுமே 'உன் வழி தனி வழி' என்பதை நான் சொல்லி இந்நாளிலும் அறியவேண்டியதில்லை. உன் பணி தொடர வாழ்த்தும் இவன்.

மொஹமட் இர்ஹாம்-காத்தான்குடி-05.

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப்பிழையோ, அல்லது ஏதாவது பக்கதில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவெண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

நோர்வேயின் சமரச முயற்சிகள் கைவிடப்படவில்லை!

இருதரப்புடனும் தொடர்புகள் இருந்தே வருகின்றன

நோர்வே இராஜதந்திரி கருத்து

"இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பான மத்தியஸ்த நடவடிக்கைகளில் நோர்வே எவ்விதத்திலும் மனந்தளர்ந்துவிடவில்லை. தீர்வு முயற்சிகள் சம்பந்தப்பட்ட தொடர்புகளை நோர்வே இருதரப்பினருடனும் கொண்டிருந்தே வருகின்றது." என்று இலங்கையிலுள்ள நோர்வே இராஜதந்திர வட்டாரம் முரசுக்குத் தெரிவித்துள்ளது.

நோர்வேயின் சமரசமுயற்சிகளில் அண்மைக்காலங்களில் நிலவும் அமைதி நிலை தொடர்பாகக் கேட்டபோதே கொழும்பிலுள்ள சிரேஷ்ட நோர்வே இராஜதந்திரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; "நோர்வே எவ்வகையிலும் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிட விரும்பவில்லை. அது எமது வேலையுமல்ல.

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொண்டதையடுத்து அவர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கமுன்வந்தனர்.

அதன் அடிப்படையில் நாம் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட இருதரப்பினருடனும் எமது சமரச முயற்சிகள் குறித்த தொடர்புகளைக் கொண்டிருக்கவே செய்கின்றோம்.

இவ்விருதரப்பினரும் எம்முடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஆனால் ஒரு பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான சூழல் ஏற்படும்வரைதான் காத்திருக்கிறோம்.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் நிலவரங்களை உன்னிப்பாக நோக்கிவருகின்றோம். இலங்கையில் தனது சொந்த நலன்கள் எதனையும் முதன்மைப்படுத்தும் நோக்கத்தை நோர்வே கொண்டிருக்கவில்லை.

அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் எமது சமரச முயற்சிகளை ஏற்றுக் கொண்டுள்ளன. நாமும் எமது நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களுக்கு அறிவித்தே வருகின்றோம்.

இருந்தபோதிலும் சமரசமுயற்சிகள் தொடர்பாக அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கவோ அல்லது, தேவையற்ற தகவல்களை வெளியிடவோ நாம் விரும்பவில்லை.

நோர்வே தனது சமரசமுயற்சிகளைக் கைவிடவில்லை என்பதையே உறுதியாகக் கூறுகிறோம்." என்று அந்த அதிகாரி 'தினமுரசு'க்குத் தெரிவித்துள்ளார். ■

'இரகசிய ஒப்பந்தங்கள் எதுவும் வேண்டாம்!'

4 தொழிற்சங்கங்கள் கூட்டறிக்கை!

மலையகத் தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சனை பல வருடங்களாக திட்ட வட்டமான முடிவினை எட்ட முடியாமல் இழுபறிபட்டுக் கொண்டே வருகிறது. இப்பிரச்சனையில் அரசாங்கமோ ஜனாதிபதி அவர்களோ போதுமான அக்கறைக்காட்டி வருவதாகத் தெரியவில்லை. இந்த நாட்டின் அந்நியச் செலாவணியை பெருமளவில் ஈட்டிக் கொடுப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்குபவர்கள் தோட்டத் தொழிலாளர்களே என்பதை மனதிற் கொண்டு அரசாங்கம் இதில் அதிக சிரத்தைக் காட்ட வேண்டும். ஆனால் அரசாங்கமோ தோட்ட முதலாளிகளையும் தொழிலாளர்களையும் தங்களுக்குள்ளாகவே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தோரணையில் இருந்து வருகிறது. இதன் பயனாக முதலாளிமார் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கையை புறக்கணித்து தங்களது அதிக வருமானத்தையே அதற்காக கொண்டுள்ளனர். இன்றுள்ள நிலையில் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையையிட்டு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலையில் சிலமணிநேரம் பிரார்த்தனையில் ஈடுபடும் ஒருவகைப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதனால் தொழிலாளர்களே தங்களுடைய அன்றாட வருமானத்தில் ஒரு பெரும் பகுதியினை இழந்து விடக் கூடிய அச்சம் எழுந்துள்ளது.

காலம் கடந்து கொண்டு போவதால், இத்தகைய பிரார்த்தனைகள் பற்றி தொழிலாளர்கள் நம்பிக்கையிழந்து விட்டதாகவும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்.எஸ்.செல்லசாமி மாகாணசபை உறுப்பினர், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மனோ கணேசன் மா.ச. உறுப்பினர் அவர்களும் அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அஸீஸ் அவர்களும் கூட்டாக இணைந்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

ஊ.பா.குழுவினர் தமிழ் ஊடகவியலாளர் சந்திப்பு

அண்மையில் இலங்கை வந்திருந்த ஊடகவியலாளர்களை பாதுகாப்பதற்கான குழுவின் பிரதிநிதிகள் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினர். கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது தொடரும் அச்சுறுத்தல்கள் பற்றி இக்குழுவினர் கேட்டறிந்தனர்.

தமிழ் ஊடகவியலாளர்களை அரச விரோதிகள், தேசத் துரோரிகள் என்று குறிப்பிட்டு எச்சரிக்கை விடுத்து வரும் அமைப்புக்கள் பற்றியும் அக்குழுவினரிடம் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

வியட்நாம் போராட்டத்தின்போது போர் முனையில் முன்னணியில் நின்று தகவல்களைச் சேகரித்த துணிச்சலுக்காக 'புலிட்சர்' விருது பெற்ற பீற்றர் ஆர்னட், இக்குழுவின் ஆசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான கவிதா மேனன் மற்றும் இக்குழுவின் இணைப்பாளராக பேங்கொக்கில் இருக்கும் லின் நீயுமன் ஆகியோரும் இங்கு வந்திருந்தனர்.

அடிக்கடி அமைதிகாக்கும் மூதூர் தொலைபேசிகள்?

மூதூர் பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஜின்னா நகர், பாலத்தடிச்சேனை ஆகிய உபதபாலகங்களின் தொலைபேசிகள் அடிக்கடி பழுதடைவதாக அப்பகுதி மக்கள் முரசுக்குத் தெரிவிக்கின்றனர்.

17 கிராமங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் மக்களுக்கு இவ்விரு தொலை பேசிகளை விட்டால் வெளித் தொடர்புகளுக்கு மூதூர் நகரத்துக்கே வரவேண்டியிருக்கிறது. இதனால் வீண் பொருள் செலவுகளும் வேண்டாத சிக்கல்களும் ஏற்படுகின்றன என அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஒரு கிராமவாசி இது பற்றிக் கூறுகையில், "மூதூருக்கு வருவதாக இருந்தால் நூறு ரூபா தேவைப்படுகிறது. போக்குவரத்துச் சீராக இல்லை. இளம் பிள்ளைகளை நம்பி அனுப்பமுடியாது. அப்படி அனுப்பினால் அவர்கள் கைதாகி விடக்கூடும். பிள்ளைகளின் அலுவல்களை நாங்களும் பார்க்க முடிவதில்லை. இதனால் கஷ்டப்படுகிறோம்" என்றார்.

உபதபாலதிபர்களுடன் தொடர்பு கொண்ட போது "ஸ்ரீ லங்கா ரெலிகொம் விளம்பரங்களைக் கவர்ச்சிகரமாகச் செய்தாலும் சேவை திருப்தி தருவதாக இல்லை. சில வேளைகளில் எங்கள் தொலைபேசிகள் வாரக்கணக்கில் கூட பழுதடைந்த நிலையில் இருக்கின்றன!" என்று தெரிவித்தனர்.

இதே வேளை திருக்கோணமலை ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் ஊழியர்கள் மேலதிக நேரக் கொடுப்பனவு சம்பந்தமாக எழுந்த பிரச்சனையில் விடுமுறை நாட்களில் கடமைக்குச் செல்வதில்லை என்று முடிவெடுத்திருப்பதாக அறியப்படுகிறது. இம் முடிவு மாற்றம் பெறாவிட்டால் தொலை பேசிப் பாவனையாளர்கள் கஷ்டப்பட நேரிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

'ஏசியா வீக்' தெரிவுக்கு வலுவடையும் கண்டனம்!

ஆசியாவிலேயே மிகவும் சக்தி வாய்ந்த 50 பேரின் பட்டியலில் 48வது நபராக புலி இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

'ஏசியா வீக்' எனும் ஆங்கில சஞ்சிகை கணனி அமைப்பில் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ உலகில் ஆபத்தான இயக்கம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதன் தலைவர் பிரபாகரனை ஆசியாவிலேயே அதி சக்தி வாய்ந்தவர்களின் பெயர்ப் பட்டியலில் ஏசியா வீக் சஞ்சிகை தெரிவு செய்திருப்பது குறித்து இலங்கைப் பெரும்பான்மை சமூகத்திடமிருந்து கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

ஏசியா வீக் தெரிவு செய்த பெயர்ப் பட்டியலிலிருந்து பிரபாகரனின் பெயரை நீக்கிவிடவேண்டும் என்று எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றன.

பெரும்பான்மைச் சமூக மக்களைக் கொண்ட அமைப்பொன்று இந்த விடயம் குறித்த கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

"அறுபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாவதற்கும், உடமைகள் அழிவதற்குக் காரணமாக இருந்து தமிழ் மக்களை முளைச் சலவை செய்து மனித வெடிகுண்டுகளாக மாற்றும் பிரபாகரன், கடந்த 17 வருடங்களாக இலங்கையில் இரத்தக் களரிக்கு வித்திட்ட ஒருவர்

இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா கொலை, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களின் கொலைக் குற்றங்களுக்காக அவர் தேடப்பட்டு வருகிறார்.

எனவே இத்தகைய போக்குள்ள ஆபத்து நிறைந்தவரை ஆசியாவின் அதி சக்தி வாய்ந்தவர்கள் பெயர்ப்பட்டியல் தெரிவிலிருந்து ஏசியா வீக் சஞ்சிகை நீக்கி விட வேண்டும்" என்ற கூறப்பட்டுள்ளது. ●

நீண்ட காலம் பணியாற்றிய ஓய்வு பெறும் அஞ்சல் அத்தியட்சகர்

திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு.எஸ்.நல்லதம்பி நாற்பது வருடச் சேவையின் பின் ஜுன் 18ம் திகதி தொடக்கம் ஓய்வு பெறுகிறார்.

1960ல் பொலன்னறுவை அஞ்சல் திணைக்களத்தில் சேவையை ஆரம்பித்த திரு.நல்லதம்பி புத்தளம், வல்வெட்டித்துறை, நீர்கொழும்பு, நெடுங்கேணி, றம்பொட, அனுராதபுரம் ஆகிய இடங்களில் அஞ்சல் அதிபராகப் பணியாற்றியுள்ளார். நுண்ணாய்வுப் பரிசோதகராக 1986ல் பதவி உயர்வு பெற்ற இவர் கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களில் நுண்ணாய்வுப் பரிசோதகராகக் கடமையாற்றினார்.

1995ல் கிழக்குப் பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றிய பின் 1995 தொடக்கம் ஓய்வு பெறும் வரையில் திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகக் கடமை புரிந்தார்.

திருக்கோணமலை அஞ்சல் திணைக்கள வரலாற்றில் நீண்ட காலமாக அஞ்சல் அத்தியட்சகராகப் பதவி வகித்தவர் என்ற பெருமையைப் பெறும் இவர், தனது பதவிக் காலத்தில் நிலாவெளி, புல்மோட்டை ஆகிய இரு உபதபாலகங்களைத் தபால் அலுவலகத் தரத்துக்கு உயர்த்தியதுடன், பல உபதபாலகங்களுக்குத் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுத்தும், புதிய உபதபாலகங்களை அமைத்தும், இயங்காமல் இருந்த உபதபாலகங்களை இயக்கவைத்தும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

இவரது இடத்துக்கு மன்னார் அஞ்சல் அத்தியட்சகர் திரு.ஏ.ஆர்.துரைராஜா மாற்றலாகி வருகிறார். ●

எல்லைக்கிராமத்தில் நெருக்கடிக்குள்ளாகும் முஸ்லிம்கள்

பொலன்னறுவை-குடாப்பொக்குண எல்லைப்புறக் கிராம முஸ்லிம்களிடம் பல்வேறுவிதமான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலன்னறுவை-திருமலை, மட்டக்களப்பு எல்லைப் புறத்தில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது.

இங்கு வாழும் முஸ்லிம்கள் அனைவரும் இரண்டு இலட்ச ரூபா நிதி சேகரித்துத் தரவேண்டுமென்று இரவில் ஆயுதங்களுடன் நடமாடும் ஒரு குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர்கள் தங்களை புலிகள் எனக் கூறி இனம் காட்டிக் கொண்டு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த தகவல் சீருடையினருக்கு எட்டியதைத் தொடர்ந்து புலிகளுக்கு நிதி சேகரித்தார்கள் எனக் கூறி சீருடைத் தரப்பினரால் கிராம முஸ்லிம்கள் நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே இந்தக் கிராம மக்கள் புலிகள் உட்பட பல்வேறு தரப்பினராலும் பல இழப்புக்களைச் சந்தித்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ●

திருமலை புதிய சந்தைக் கட்டடம் விற்பனைக்கு வருமா?

திருகோணமலை நகராட்சிமன்றத்தால் அமைக்கப்பட்டு இதுவரை இயங்க முடியாமல் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் சார்ச்சைக் குரிய புதிய சந்தைக் கட்டடத்தை விற்று விடுவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

இச் சந்தைக் கட்டடம் பெ.சூரியமூர்த்தி தலைவராக இருந்த காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கருத்திற்கொண்டு தந்தை செல்வா வீதியில் அமைக்கப்பட்ட இச்சந்தையை பேரினவாதிகள் தங்கள் அதிகார பலத்தைக் கொண்டு சட்டத்துக்கு முரணான வகையில் இயங்க விடாமற் தடுத்தனர்.

தற்போது இச்சந்தைக் கட்டடத்தில் வடபகுதிப் பயணிகள் இலவசமாகத் தங்கியுள்ளனர். இந்த நிலையில் நகர அபிவிருத்தி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் ஜூன் 6ம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுக்கு இக் கட்டடத்தைக் கையளித்து விடுவதென்றும் அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு தற்போதைய சந்தையை நவீனமயப் படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இக் கட்டடத்தில் அமைச்சர் இந்திக குணவர்த்தன, செயலாளர் ஆனந்த எஸ் குணசேகர, மேலதிகச் செயலர் எம்.எம்.சி. பெர்னாண்டோ, நகர அபிவிருத்திச் சபைத் தலைவர் பேராசிரியர் நிமல் டி சில்வா ஆகியோர் உட்பட நகராட்சிமன்ற விசேட ஆணையாளர் வி.வேலும்மயிலும், நகரசபை செயலர் ஏ.சோதிலிங்கம். மரக்கறிச்சந்தைச் சபை செயலாளர் எல்.பி.ஜயரத்ன, திருகோணமலை சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தயானந்த ஜயவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவர்கள் போகிற போக்கைப் பார்த்தால் நாளை நகரசபையையே விற்று விடுவார்கள் போலிருக்கிறது என்கிறார் முன்னாள் நகராட்சிமன்ற உறுப்பினர் ஒருவர். ●

மேடையேறிய நடனம் மீண்டும் போட்டியில்!

கல்முனை மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் ஏற்கனவே அமைச்சர் அஷ்ரஃப் முன்னிலையில் மேடையேற்றப்பட்ட நடன நிகழ்ச்சியொன்றுக்கு முதலாமிடம் வழங்கப்பட்டுள்ளது. இது அநீதி என இருபாடசாலைகள் எழுத்து மூல முறைப்பாட்டை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனவாம்.

ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தநிகழ்ச்சியும் ஏற்கனவே மேடையேற்றப்பட்டிருக்குமானால் அவை மீண்டும் மேடையேற்றப்படலாகாது என்பது தமிழ்த்தினப் போட்டி விதி என்பது குறிப்பிடத்தக்கது. மாகாணமட்ட போட்டிகளும் பல குறைபாடுகளுக்குமத்தியில் நடந்தேறியதாம். எதிர்காலத்தில் தமிழ்த்தினப் போட்டியை இல்லாமல் செய்யும் உபாயங்களாக இவை அமையுமோ என அஞ்சப்படுகிறது.

மீனவர்கள் கடத்தப்பட்ட செய்தியில் உண்மையில்லை! கடலில் தத்தளித்தவர்களில் ஒருவர் ஊர் சேர்ந்தார்!

சில தினங்களுக்கு முன்பாக காணாமல் போயிருந்த ஓட்டமாவடி முஸ்லிம் மீனவர்களில் ஒருவர் ஊர் திரும்பியுள்ளார்.

காணாமல் போனமீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டு விட்டார்கள் என்று வெளியான செய்தியில் எவ்வித உண்மையுமில்லை என்று இப்பொழுது தெரிவிக்கப்படுகிறது.

நடந்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்கள் மூவர் படகில் கடலுக்குச் சென்றிருக்கிறார்கள். இயந்திரக் கோளாறு காரணமாக திசை தடுமாறி கடலில் தத்தளித்து நடுக் கடலை அடைந்திருக்கிறார்கள்.

அவ்வேளையில் கடலில் வந்த வேறொரு படகைக் கண்டு உதவி கோரியிருக்கிறார்கள். உதவி ஏற்பாடுகளைச் செய்து, தத்தளிக்கும் படகை மீட்டதுடன் தத்தளித்த படகிலிருந்த மூவரில் ஒருவர் ஏறிக் கரை வந்து சேர்ந்து விட்டார்.

பின்னர் நடந்த சம்பவத்தை அறிந்து இருவரையும் படகையும் அப்பகுதிக் கடலில் தேடியும் அவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிட்டவில்லை.

இந்த முஸ்லிம் மீனவர்கள் புலிகளால் கடத்தப்பட்டு விட்டதாக திரித்துக் கூறப்பட்ட செய்திகள் மீனவர்கள் காணாமல் போன உடனேயே வெளியாகியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. ●

தகவல் வழங்கியவருக்குத் தண்டனை! புலி உறுப்பினர் இருவர் பலி!

மட்டக்களப்பு-வாழைச்சேனையைச் சேர்ந்த தி.விஜயன் (25) என்பவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சீருடையினருக்குத் தகவல் வழங்குபவர் என்று குற்றஞ்சாட்டியே புலிகள் இவரைத் தீர்த்துக் கட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனைவியின் பிரசவத்தைக் கவனிப்பதற்காக வீட்டுக்கு வந்திருந்த வேளையில், அவர் இழுத்துச்செல்லப்பட்டிருந்தார். பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனிடையே வந்தாறுமூலையில் ஓரிடத்தில் நோட்டமிட்டு மறைந்திருந்த படையினர் தகவல் அறிந்து சுட்டதில் புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் இருவர் பலியானதாகவும், அவர்களிடமிருந்த இரு கைக்குண்டுகள், சயனைட் வில்லைகள் என்பன மீட்கப்பட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் இரண்டையும் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக ஏறாவூர் வைத்தியசாலையில் கையளித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் அம்பாறையில் கடத்தப்பட்ட வாகனங்கள் உப்போடை வழியாகக் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

மேலும் கடத்தலைத் தடுக்குமுகமாக உப்போடைப் பாதையிலிருந்த இரண்டு மதகுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் பொதுமக்களுக்குப் பெருஞ்சிரமம் ஏற்பட்டுள்ளது. ■

பொசன் தினத்தில் இறைச்சிக் கடைகள் முற்றுகை

மட்டக்களப்பு-ஓட்டமாவடி வாழைச்சேனை முஸ்லிம் பகுதிகளிலுள்ள இறைச்சிக்கடைகளில் பொலிஸார் திடீர் பாய்ச்சல் நடத்தி அங்கு விற்பனைக்கிருந்த பெருமளவு இறைச்சியைக் கைப்பற்றினர்.

பொசன் முழு நோன்மதி தினத்தன்று இறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்ததற்காகவே பொலிஸாரால் இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதால் முழுநோன்மதி தினத்தன்று இறைச்சிக் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அரசினால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பொலிஸார் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் போது வாழைச்சேனையிலும் ஓட்டமாவடியிலுமாக 09 இறைச்சிக்கடைகள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு இறைச்சி கைப்பற்றப்பட்டன. அவற்றின் உரிமையாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்கள். ●

பெண்கள் கல்லூரியில் ஆண் உடற்கல்வி ஆசிரியரா?

கல்முனையிலுள்ள பிரபலமான பெண்கள் பாடசாலையொன்றில் உடற்கல்வி ஆசிரியராக ஆண் ஒருவர் செயற்பட்டு வருவது குறித்து பெற்றோர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வயதுவந்த மாணவிகளின் காலை நேர அப்பியாசத்திற்கும் இந்த ஆண் ஆசிரியரே பொறுப்பாகவிருப்பது, டிசிபிளினுக்கு பொறுப்பாகவிருப்பது அநீதியானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தனைக்கும், அதேபாடசாலையில் உடற்கல்விக்காக நியமிக்கப்பட்ட பெண் ஆசிரியை ஒருவரும் இருக்கிறாராம். இனியாவது பெண்கள் விவகாரத்தில் இந்த ஆண் தலையிடாதிருக்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைவிடப்பட்டுள்ளது. ■

3வது பிறந்தநாள் வாழ்த்து

கல்வியங்காட்டைச் சேர்ந்த சுதன்-சந்திரா தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் துவாரகன் தனது 3வது பிறந்தநாளை 24-06-2000 அன்று 17/1, சந்தை வீதி, நல்லூர் இல்லத்தில் கொண்டாடுகிறார். துவாரகனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா,அம்மப்பா, அம்மம்மா மாமாமார், மாமிமார்,பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்திமார், வாவா சித்தி, கவிஅக்கா, தர்ஷன் அண்ணா, நிரோஷன்அண்ணா,

செல்வன் சுதன் துவாரகன்

24-06-2000

விசாகன் அண்ணா, விதுஷன் மச்சான், சறோ மாமி, தேவி. மச்சாள், தேவகி மச்சாள், குமாரதாஸன் மாமா, பொலிஸ் அப்பப்பா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல பேத்தி ஆச்சியின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : *M.P.COLLIN*
Colombo 0 12.

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :

MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி–0142552036

மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்

நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD.ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆடருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகலாவிய ரீதியில் பிரத்தியேகமாக அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832 இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் கெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தாண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி

Dr. P. K. Samy (J.D.G.A.N) JP

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk

இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனித்த்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரனத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

அயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயனதரும் தெய்வீக மருந்து பொருட்களை தபால் மூலம் பெற்று தம எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE"

மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலைவிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

கொழும்பில் மே 21 முதல் 28 திகதி வரை

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 · செல்டெல்: 072-609388

கல்முனையில் ஜூன் 03. 04ம் திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

வவுனியாவில் ஜூன் 10,11 திகதிகளில் சந்திக்கலாம்

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.

மரண அறிவித்தல்

தோற்றம்
04.02.1973
✦
மறைவு
31.05.2000

மயிலிட்டி வேளாங் கன்னி வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது மட்டுவில் தெற்கில் வசித்தவருமாகிய நளாயினி (வினோ) செல்வறட்ணம் அவர்கள் 31.05.2000 புதன்கிழமை அன்று உருத்திரபுரத்தில் மரணமடைந்தார். அன்னார் செல்வ றட்ணம் (நளாயினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), சந்திரவிமலா ஆகியோரின் பாசமிகு

செல்வி நளாயினி செல்வறட்ணம்

(மட்டுவில் தெற்கு)
(சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவியும், யாழ் வெளிவாரி பட்டதாரி மாணவியும்)

மகளும், தயாழினி (தயா), பிரதீஸ்(பிரபு-கனடா), நவதீஸ்(நவம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், பூமணி, கந்தசாமி, அரியநாயகம் ஆகியோரின் அன்பு பேத்தியும் காலஞ்சென்ற பூபாலச்சந்திரன், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சந்திரமலர் சந்திர வதனாவின் அன்பு பெறாமகளும், ராதா, வனிதா, கிருபா (கனடா), சிவகடாட்சம், குகதாஸ், பிரதீசன், கலைச்செல்வி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும். ஞானம், நாதன், றமணன், ஸ்ரீதேவி, ஆகியோரின் மைத்துனியும், பிரசாந்தி, நிஷாந்தி, ஞானகா, அனுஷன், லக்ஷன், பூஜா, மதுஜா, அபிஜா ஆகியோரின் ஆசை அன்ரியும், கஸ்தூரி, காவேரி, கௌதமி, ஆகியோரின் ஆசை அத்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.06.2000 வியாழக்கிழமை கிளி நொச்சியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும், ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
செ.நவதீஸ் (நவம்) சகோதரன்,
எஸ்.சுந்தரமூர்த்தி, பெரிய தகப்பன்
156/50, டொக்யாட் றோட், திருகோணமலை.

தொடர்புக்கு:
சகோதரன்- செ.பிரதீஸ் (பிரபு) கனடா.
T.P (416) 929-3057)

—கவலை வேண்டாம்—

உங்கள் சங்கடம் எதுவாயினும் உடன் வெற்றி காண்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்.காதல் விவகாரங்கள்; தொழில் விருத்தி; பாலியல் குறைபாடுகள்; திருமண-பிரயாணத்தடங்கல் முதலானவற்றை விசேடமாய் தீர்வு காணும்; மட்டு நகர்-மலையாள மணி மாந்திரீகச் சித்தர் "கலாநிதி-சக்தி சரவணா" உங்களை நிச்சயம் வெற்றிபெற வைப்பார். மற்றும் எண்சோதிடம், நினைத்தகாரியம், ஜாதகபலன் முதலான சோதிட அருள்வாக்கும் பெற்று பூரணபலன் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேடதுரித சேவை உண்டு. நேரில் (வியாழன்விடுமுறை) காலை 8.00 முதல் மாலை 3 மணிவரை.

தொடர்பு:
"DR.SHAKTHY SARAVANA"
48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA. T.P 723646

வியாழன் விடுமுறை.

மரண அறிவித்தல்

திருமதி முருகையா மகேந்திரராணி

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 56 மத்திய வீதி, உவர்மலை, திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட வருமாகிய திருமதி.மு.மகேந்திரராணி.03.06.2000 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.மு.முருகையாவின் (மின்சார பகுதி, திருமலை நகரசபை) அன்பு மனைவியும், திரு. திருமதி தம்பிஐயா அவர்களின் புத்திரியும், காலஞ்சென்ற திரு.முத்துப்பிள்ளை, திருமதி முத்துப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், தனரூபராணி (சுபா) (கனடா), (தர்ஷி) சந்திரவதனி அவர்களின் பாசமிகு தாயாரும், சண்முகராஜா (கனடா), சுஜந்தன் (லண்டன்) அவர்களின் மாமியாரும், இரத்தினசிங்கம் (ஜேர்மனி), விக்கினேஸ்வரி (கனடா), வைத்திய கலாநிதி சுவர்க்கலோகநாதன் (Dr. லோகநாதன்) (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) இந்திரபகவான் (கனடா), ஆறுமுகதாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்புச்சகோதரியும், வினோதா (கனடா)வின் ஆசைபேத்தியுமாவர்.

அன்னாரின் பூதவுடல் இல. 56, மத்தியவீதி, உவர்மலை, திருகோணம்லை இல்லத்திலிருந்து 04.06.2000 மாலை 4 மணியளவில் திருமலை இந்து மயானத்தில் ஈமக்கிரியை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி : 026 2286

தகவல் - குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

தோற்றம் 14✧04✧1926



மறைவு 26✧05✧2000

அமரர் அரியநாயகம் கந்தசாமி

(மயிலிட்டி)

காங்கேசன் துறையை பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது மட்டுவில் தெற்கில் வசித்தவருமாகிய அரிய நாயகம் கந்தசாமி அவர்கள் 26.05.2000 வெள்ளிக்கிழமை அன்று மறவன் புலவில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, பாக்கியத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமியின், அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தங்கம், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற அன்ன பூரணம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சரவணமுத்து, நாகம்மாவின் மைத்துனியும், சந்திரமலர், சந்திர விமலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பூபாலச்சந்திரன், செல்வறட்ணத்தின் மாமியும் காலஞ்சென்ற புத்திசிகாமணியின் சின்னம்மாவும், சிவகடாட்சம்-ஸ்ரீதேவி, ஞானம்-ராதா, நாதன்-வனிதா, றமணன்-கிருபா(கனடா) காலஞ்சென்ற நளாயினி, தயாழினி, பிரதீஸ்(கனடா) நவதீஸ் ஆகியோரின் பேத்தியும், பிரசாந்தி, நிசாந்தி, ஞானகா, அனுஷன், லக்ஷன், பூஜா, மதுஜா, அபிஜா, கஸ்தூரி, காவேரி, கௌதமி, ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.05.2000 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் : செ.நவதீஸ் (பேரன்)

தொடர்பு : பிரதீஸ் (பிரபு)-பேரன்
(416) 929-3057.

யாழ் மக்கள்....
யுத்தத்தின் கைதிகள்

-நரன்-

யுத்தத்தால் வேலியிடப்பட்ட திறந்த சிறைக்கூடமாகி விட்டது யாழ்ப்பாணம். உள்ளே அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் மக்களுடன் பரிமாறப்படும் ஒரே பாஷை வெடியோசை! அச்சத்தின் மேல் அச்சமும் அவலத்தின் மேல் அவலமுமாய்ப் பீடித்து மனித வாழ்வுக்குரிய எந்த இலட்சணமுமற்ற ஈனப் பிறவிகளாகத்தள்ளப்பட்ட இம் மக்களைக் காப்பாற்றத்தான் இந்த யுத்தக் கெடிபிடிச் சட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றனவென்று விளங்கிக் கொள்வது தான் வேதனை மிக்க வேடிக்கை.

இந்த யுத்தம், தமிழ் மக்களை விடுவிக்கவே என்றும், சமாதானத்துக்கான யுத்தமென்றும் கூறிக் கொள்ளப்படுகின்ற போதும், தமிழ் மக்களை யுத்தத்தின் கைதிகளாகவே ஆக்கியுள்ளது குறிப்பாக இப்போது யாழ் மக்களை!

சமாதான முயற்சிகளால் சமாதானம் ஈட்டப்படுவதற்குப் பதிலாக, யுத்தத்தால் சமாதானத்தை ஈட்டலாமென்றும் புதிய தத்துவத்தின் விஷப் பரீட்சை, தமிழ் மக்களைத் தான் பிரிசோதனை எலிகளாக்கியுள்ளது. அதன் பெறுபேறாக இன்று யாழ் மக்களின் நிலை அச்சமும் பீதியும் கலந்த அதி இக்கட்டான வாழ்க்கையாக மாறி விட்டது. யாழ் நகரத்து வாசல்களை யுத்தம் தட்டுகின்றபோது பொறிக்குள் அகப்பட்ட எலி வெளிக் கதவில் தட்டப்படும் ஒவ்வொரு ஓசைக்கும் வெகுண்டடிப்பதைப்போல, அம் மக்கள் நிதமும் நிகழும் ஒவ்வொரு சம்பவத்தாலும் கலங்கித் தவிக்கிறார்கள். என்ன நிகழுகிறது, என்ன நிகழப் போகிறது என்று ஒவ்வொரு கணமும் அவர்கள் நெஞ்சு பதைபதைக்க வினவிக் கொண்டுதான் நேரத்தைக் கழிக்கிறார்கள்.

ஒரு வெடியோசைக்கும் மறு வெடியோசைக்கும் இடைப்பட்ட கணங்களை அவர்கள் தம் இதயத் தடிப்பால் அளவிட்டபடி போக்கும் அம் மௌனித்த வேளைகள் யுத்த முழக்கங்களைவிடப் பயங்கரமானவை.

மகிழ்ச்சி, அவர்களின் முகங்களைவிட்டு என்றோ விடைபெற்றுச் சென்றுவிட்டது. அரசியல் குரலிழந்தவர்களாக, அன்றாட வாழ்வுக்கு மன்றாடும் அகதிகளாக, சமூகமென்ற அந்தஸ்துக்கு அப்பால் வெகுதூரம் தள்ளிச் செல்லப்பட்டு சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயங்களற்ற வாழ்க்கை முறைக்குள் வாழப் பழக்கப்படுத்தப்பட்ட- ஆன்மா இழந்த ஒரு சடத்துவச் சமூகமாக, நிவாரணப் பொருட்களினாலேயே நித்திய வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்ட இரண்டாம் உலகமாகாயுத்தத்துப் பஞ்சப் பிரதேசிகளின் நிலைக்கு உள்ளாக்கப் பட்டு வருகிறார்கள் யாழ்மக்கள்.

இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியில் வாழவேண்டியவர்களாகிவிட்ட யாழ் மக்களுக்கு வெளியுலகம் இருட்டு. இப்போதுள்ள கடுமையான செய்தித் தணிக்கைக்கு மத்தியில் அங்கிருந்த பத்திரிகையொன்றும் தடை செய்யப்பட்டதன் மூலம் நிலமைகளை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் முடக்கப்பட்ட நிலையில், உண்மைகளைவிட வதந்திகள் தான் அங்கு செய்திகளை ஆக்கிரமித்து நிற்கின்றன. யாழ்நகருக்குள் நிகழும் பல விடயங்கள் கொழும்புக்கும், வெளி நாடுகளுக்கும் தெரிய வந்திருக்க, யாழ் மக்களுக்கு பக்கத்து ஊரில் நிகழ்ந்ததுவும்கூடத் தெரியாதிருக்கிறது.

இந்நிலையில் ஆனையிறவு இராணுவ முகாம் வீழ்ந்த பின்னர் அடுத்து என்ன நிகழ்கிறது என்று மிக உச்சக்கட்டத்துத் திகிலில் நின்ற வேளைகள் யாழ்ப்பாண மக்களை மிகவும் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டிருந்தன.

பரபரப்பான இராணுவ நகர்வுகள் ஒரு புறம், தென் மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களின் நகர்வுகள் மறுபுறம், புலிகளின் தாக்குதல்கள் இன்னொரு புறமுமாகப் பெரும் களேபரத்தை ஏற்படுத்திய வேளையில் யாழ் மக்கள் என்ன செய்வதென்றே புரியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஷெல் விச்சுகள் பொதுமக்களின் வாழ் விடங்களில் விழுந்து வெடித்தன. பலர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயப்பட்டனர். வைத்திய சாலைகள் அமளி துமளிப்பட்டன. மருந்துகள், இரத்தச் சேகரிப்புகள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றில் இக்கட்டு நிலை தோன்றியது.

இவற்றையடுத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் புலிகள் முன்னேறத் தொடங்க நிலைமை மேலும் மோசமாகியது. புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் விழுந்து வந்த பகுதிகளிலிருந்த மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்கு உள்ளாகினர். ஒருபுறம் புலிகள் அவர்களை வன்னிக்கு வருமாறு அழைக்கிறார்கள். மறுபுறம் இராணுவம் யாழ் நகருக்குத் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும்படி அழைக்கிறார்கள். ஒரு சில குடும்பங்களின் அவலநிலை என்னவென்றால், அவர்களில் சில குடும்ப அங்கத்தவர்கள் வன்னிக்கும் மறு குடும்ப அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் இடம் பெயர நேர்ந்தமையே. பலருக்குத் தமது வீடு, வாசல், காணி, கமம், தொழில் யாவற்றையும் கைவிட்டுச் செல்வது ஜீரணிக்க முடியாத வேதனை. ஆனால் யாரிடம் செல்லி அழுவது? சூழ்நிலை விரட்டிய திக்கில் ஓட வேண்டியதே செய்யக்கூடிய ஒரே காரியமாக இருந்தது.

நிலைமை எந் நேரத்தில் எப்படி மாறுமோ வென்று தெரியாதபடியிருக்கும் இன்றைய யுத்த நிலைமையில் யாழ் மக்களும் தமது எதிர்காலத்தின் போக்குப்பற்றிய பலத்த நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறார்கள்.

அதில், இந்தியப்படை வருமா, யுத்த நிறுத்தம் வருமா, இலங்கைப் படைகள் வெளியேறுமா, அவர்களோடு சேர்ந்து யாழ் மக்களும் வெளியேற்றப் படுவார்களா, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமா, அமெரிக்கா நெருக்குதல் எழுமா என்றெல்லாம் பல்வேறு அபிப்பிரயங்கள் எழுந்து ஓய்ந்த வேளையில் யாழ் மக்கள் மிருந்த குழப்பத்துக்கு உள்ளாக்கப் பட்டிருந்தார்கள். யார் சொல்வதைக் கேட்பது என்பதே அவர்களுக்கு எழுந்திருந்த நெருக்கடி.

யாழ் மக்களைப் பொறுத்த வரையில் அண்மைய காலமாக அரசியல் பார்வைகளை விட வாழ்வியல் தேவைகள்தான் முன்னிலைப் படுத்தப்பட்டு வருகின்றன. அண்மைக்கால அரசியலில் திடமான ஓர் அரசியல் போக்கைக் கடைப்பிடிக்காமல் ஒத்தோடும் பண்பைத்தான் வெளிக்காட்டியுள்ளார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மற்றைய தமிழ்ப் பிரதேசங்கள் போலன்றி வடக்கு கிழக்கில் ஆளும் கட்சிக்கு அதிகப்படியாக வாக்களித்த ஒரேயொரு பிரதேசமாக யாழ்குடாவே அமைந்திருந்தது. அதற்கு முன்னைய உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் புலிகளின் விருப்பத்துக்கு மாறாக ஓரளவு வாக்களித்திருக்கவே செய்தனர். இதற்கு பிரதான காரணம் அவர்களின் சமூக வாழ்வு பாரியதோர் குழப்பத்துக்கு உள்ளானதே.

யாழ் மக்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான சாத்வீகப் போராட்டமாக இருந்தாலும் சரி ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் சரி, அவற்றுக்கான அத்திவாரமாக விளங்கியவர்கள் அவர்களே. இவற்றிற்கான தலைமைப் பாத்திரத்தையும் இவர்களே வகித்தனர். ஏனைய தமிழ் பிரதேசங்கள் இவர்களின் முன்னெடுப்பை அடியொற்றியே பின் தொடர்ந்தன. 1977ல் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த தனிநாட்டுக் கோரிக்கைக்கு அமோக வாக்களித்த பிரதேசமும் அதுவே. அந்த மக்களாணையை தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொண்டதேயன்றி செயற்படுத்த முனையவில்லை. அதிலிருந்து பின்வாங்கி, தற்போது ஒற்றையாட்சியின்கீழ் சத்தியப் பிரமாணம் எடுத்துள்ள போதிலும் முன்னர் தான் பெற்ற மக்களாணையைக் கைவிடுவதற்கான அங்கீகாரத்தை மக்களிடம் கோரவில்லை என்பது மற்றொரு விடயம்.

எனினும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மாகாணசபைத் தீர்வை முன்வைக்கச் செய்துகொண்டு இலங்கை வந்த இந்தியப் படைகளின் வரவை ஆரம்பத்தில் இம்மக்கள் வரவேற்கவே செய்தனர். ஆனால் பின்னர் அதுவே ஒரு கொடிய யுத்தமாக உருப்பெற்றதையடுத்து பெரும் இம்சைக்குள்ளானார்கள்.

ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணம் இராணுவ நடவடிக்கைகளால் அனர்த்தங்களுக்குள்ளாக்கப் பட்டபோதிலும், பிற்காலத்தில் நேரடிப் பாதிப்புக்கு அதிகம் உள்ளாகவில்லை. கிழக்கு மாகாணம் மற்றும் வன்னிப் பகுதிகளே பெருமளவு நேரடிப் பதிப்புகளுக்கு உள்ளாயின. காரணம், யாழ் குடாவினுள் இராணுவ நடமாட்டம் படிப்படியாக மட்டுப்படுத்தப்பட்டு ஒரு கட்டத்தின்பின் முகாம்களுக்குள் முடங்கியிருக்குமாறு ஆக்கப்பட்டு விட்டது. பொலிஸ் நிலையங்கள் ஏறத்தாழ முற்றாக மூடப்பட்டிருந்தன. ஆனால் கிழக்கிலும், வன்னியிலும் அப்படியிருக்கவில்லை. அதிலும் கிழக்கில் மூவின மக்களும் இருக்கும் சமூக அமைப்பும், கிழக்கு மாகாண நில அமைப்பும், அப்போது விடுதலை இயக்கங்களின் வளர்ச்சி குன்றிய நிலையும், வடக்கு, கிழக்கு பயண மார்க்கங்களிலும் பரிவர்த்தனை மற்றும் தொலைத் தொடர்புகளில் விடுதலை இயக்கங்களுக்கிருந்த இடையூறுகளும் இத்தகைய ஒரு நிலையை அங்கு சாத்தியமாக்கவில்லை.

இதேபோல் இனக்கலவரங்களுக்கும் குடாநாட்டு மக்கள் முகம் கொடுக்கவில்லை. ஏனைய பிரதேசங்களிலேயே இவற்றின் வேதனைகளைத் தமிழ் மக்கள் அனுபவித்தார்கள். குடாநாடு அப்படித் தாக்கத்துக்களான ஏனைய தமிழ் மக்களுக்கு அபயமளிக்கும் காப்பரணாகவே விளங்கியது.

எனவே ஆரம்ப காலத்தில் படைகளின் அடக்குமுறைகளைச் சந்தித்தாலும் இடைக்காலத்தில் யாழ் மக்கள் இவ்வின்னல்களை நேரடியாக முகம் கொடுக்கவில்லை. எனினும் இனப் பிரச்சனைக்குரிய அரசியல் அம்சங்களின் நெருக்கடியை விதிவிலக்கற்று அவர்களும் முகம் கொடுக்கவே வேண்டியிருந்தது.

ஆனால், இந்தியப் படைகளோடு 1987ல் மோதல்கள் வெடித்தபோதுதான் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளின் நேரடித் தாக்கங்களை யாழ் மக்கள் அனுபவிக்க நேர்ந்தது. அதன்போதுதான் முதன் முதலாக யாழ் மக்கள் பெருவாரியாகத் தற்காலிக அகதி முகாம்களுக்குச் சென்று தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்போது யாழ் சமூகத்தின் உயர் மட்டம் கீழ் மட்டம் என்ற வேறுபாடில்லாமல் சகலரும் ஒன்றாகவே இன்னல்களை முகம் கொடுக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்புக்கருதி கொழும்புக்கு இடம் பெயர்ந்த மறுதலையான பெயர்ச்சியை அப்போதுதான் வரலாற்றில் முதல் தடவையாகக் காண நேர்ந்தது. வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அனுசரணையாகக் கட்டப்பட்ட ரி.என்.ஏ. எனும் இராணுவ அமைப்பில் தமது பிள்ளைகள் பலாத்காரமாகச் சேர்க்கப் படுவதிலிருந்து தப்புவதற்காக யாழ் மக்கள் அப்போது மேற்கொள்ளப்பட்ட விமான சேவையில் 1000 ரூபா கட்டணம் செலுத்தி தமது பிள்ளைகளை சாரிசாரியாக கொழும்புக்கு அனுப்பினர்.

எனினும் ஐ.பி.கே.எ.ப். காலம் அதிகம் நீடிக்கவில்லை. புலிகளுடன் பிரேமதாசா அரசுக்கு ஏற்பட்ட தற்காலிக உடன்பாட்டையடுத்து யாழ்குடாநாடு மீண்டும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

பிரேமதாசா அரசாங்கத்துடன் மீண்டும் மோதல் ஆரம்பித்த போதும் யாழ் குடாநாட்டை புலிகளின் கட்டுப் பாட்டிலிருந்து அசைக்க முடியவில்லை. அதனால் ஏனைய பிரதேசங்களில் மோதல்கள் நிகழ்ந்தாலும் யாழ் குடாநாட்டுக்குள் இருந்த மக்கள் மோதல்களின் பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

தொடர்ந்து தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தபோதும் ஆரம்பத்தில் சமாதானப் பேச்சுக்கள் நடந்து பின்னர் மோதல்கள் வெடித்தன. அம் மோதல்களிலும் கூட ஏனைய தமிழ் பிரதேசங்கள் போலன்றி யாழ் குடாநாடு சிலகாலம் பாதிப்புறாமலே இருந்தது.

இவ்வாறு இருந்தபோதும் 1995ல் யாழ் குடாவைக் கைப்பற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரிவிரச இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணத்தை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தன்வசப் படுத்தியது. இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கைகளால் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களைப்போல் அதிகம் பாதிக்காமல் தப்பித்து வந்ததற்கெல்லாம் வட்டியும் முதலுமாக யாழ் மக்கள் அப்போதுதான் பெரும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தனர்.

அவர்கள் குடாநாட்டை விட்டுமுற்று முழுதாக வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்போது தாம் பரம்பரை பரம்பரையாகச் சேர்ந்த அசையாச் சொத்துக்களையும் அசையும் சொத்துக்களில் கணிசமானவற்றையும் கைவிட்டுவிட்டு வெளியேற வேண்டியிருந்தது. இதை அம் மக்கள் திடீரென மேற்கொள்ள நேர்ந்தபோது பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாயினர். இப் பெயர்வு அவர்களை மனோரீதியாகப் பெரிதும் பாதிக்கச் செய்தது.

அதுமட்டுமன்றி தென்மராட்சிக்கும், வன்னிக்கும் புலம் பெயர்ந்தவர்களால் நெடுநாள், கடினமான வாழ்வைத் தாங்கி நின்று பிடிக்க முடியவில்லை. இக் கடின வாழ்வைச் சாதகமாக்கிக் கொண்டு இலங்கை இராணுவம் அவர்களைத் திரும்பி வரும்படி அழைத்தபோது புலிகள் தடுத்தும் கேளாமல் பெருமளவான யாழ் மக்கள் குடாநாட்டுக்குத் திரும்பி வந்தனர். ஒரு கணிசமான பகுதியினர் புலிகளுடன் வன்னியிலேயே தங்கிக் கொண்டனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து மீண்டும் திரும்பிய யாழ் வாசிகளுக்கு ஒருவகை விரக்தி மனோபாவம் பிடித்துக் கொண்டது. திரும்பி வந்தவர்கள் வெவ்வேறு பிரதேசங்களில் தேவைக்கேற்ப குடியேறிக் கொண்டதால் முன்னைய சமூக அமைப்புக் குலைவு கண்டது. அதனால் ஒருமித்த அரசியல் முன்னெடுப்புகள் இன்றுவரை சாத்தியமாகவில்லை. அங்கு நிலமைக்கேற்பத் தப்பி வாழும், ஒத்தோடும் போக்குகள் தலைதூக்கின. அத்தோடு அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கான தங்கி வாழும் சூழ்நிலை நிலவியது. அச் சூழ்நிலையே அம் மக்களை தங்கிவாழும் சமூக மனப்பான்மையையும் வளர்த்தது. அதனால் போர்க் குணாம்சம் மங்கிச் செல்லலாயிற்று.

இத்தகைய காரணத்தினாலேயே தற்போதைய குடா நாட்டு மக்கள் அரசியலைவிட வாழ்வியல் தேவைகளை முதன்மைப்படுத்த நாட்டம் கொண்டவர்களாக உள்ளனர்.

எனவேதான் தற்போது மீண்டும் இடப் பெயர்வுக்கான அத்தகைய தொரு சூழ்நிலை தோன்றிவிடுமோ என்று பீதியடைந்துள்ளனர். புலிகள் கைப்பற்றிய பகுதிகளில் உள்ள மக்களை, அவர்கள் வன்னிக்கு அழைக்கும்போது ஒருபகுதியினர் சென்றாலும் மற்றொரு பகுதியினர் படையினரின் கட்டுப் பாட்டிலுள்ள பகுதிகளுக்கு இடம் பெயருகின்றனர்.

தற்போது யாழ் யுத்த நிலைமை முடிவு தெரியாத ஒரு கட்டத்தில் உள்ளது. இன்னும் சிறிது கால இடைவெளியின்பின் புலிகள் பாரியதொரு தாக்குதலைத் தொடுத்து குடாநாட்டைத் தம்வசப் படுத்துவார்களா, அல்லது இப்படியே யுத்த நிலைமையைப் பேணி வருவார்களா, இல்லையேல் பின்வாங்கிவிடுவார்களா என்று கணிக்க முடியாத நிலையில் யாழ் மக்கள் உள்ளனர். எப்படியான நிலைமை உருவாகும் என்பதற்கமைய தமது வாழ்க்கையை அனுசரிக்க எண்ணும் மனோபாவமே இவர்களுக்கான சுமையாக இப்போது மாறி விட்டது. ■

செய்திச் சிதறல்

★ எண்ணெய் வள நாடுகள் மசகு எண்ணெயின் விலையை மளமளவென்று உயர்த்திக் கொண்டே போகின்றன. மே மாதம்தான் சமையல் வாயுவின் விலையை இதே வருடத்தில் இரண்டாவது முறையாக ஷெல் கம்பனி உயர்த்தியது. இதனைத் தொடர்ந்து ஜூன் 12ம் திகதியன்று டீசல் எண்ணெயின் விலையை அரசாங்கம் 20% உயர்த்தியது. ஜூன் 19ம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்களும் உயர்த்தப்பட்டன. இதன் பயனாக அன்றாட மக்கள் தேவைக்காக பயன்படுத்தப்படும் பண்டங்களின் விலைகளும் கிடுகிடுவென்று உயர்ந்து வருகின்றன. உலகச் சந்தைவிலை எப்படி இருப்பினும் அதைப்பற்றிச் சிந்திக்க முடியாத பொதுமக்கள் அரசாங்கத்தையே கண்டிக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

★ அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள செய்தித் தணிக்கை ஆகஸ்ட் 21ம் திகதி நீக்கப்பட்டு விடுமென்று தகவல் துறை அமைச்சர் அண்மையில் தெரிவித்தார். அமெரிக்க நியூயோர்க் நகரை தலைமைப் பீடமாகக் கொண்ட, ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் சமரவீர இத்தகவலை வெளியிட்டார். அமைச்சரைச் சந்தித்த இக் குழுவைச் சேர்ந்தவர்கள், யுத்தச் செய்திகள் பற்றிய உண்மையை பொதுமக்களிடம் மறைப்பதனால் தீமை ஏற்படுமே தவிர அரசாங்கத்துக்கோ வேறு எவருக்குமோ எத்தகைய நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

★ இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் பாக்கு நீரிணைக் கடலில், இரு நாடுகளுக்குமிடையில் சிறியதும் பெரியதுமாக பல மணற் திட்டுக்கள் காணப்படுகின்றன. இதனை இராமரணை என்று கூறுவார்கள். வட புலத்தில் இடம் பெறும் மோதல்களிலிருந்து உயிர்தப்புவதற்காக மீன்பிடிப் படகுகளில் பல அதிகதிகள் இந்தியாவுக்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கில் செல்கின்றனர். மேற்படி திட்டுக்கள் சில இந்திய எல்லைக்குள்ளும் மற்றும் சில இலங்கை எல்லைக்குள்ளும் காணப்படுகின்றன. அகதிகளை ஏற்றிச் செல்லும் இலங்கைப் படகுகளைச் செலுத்திச் செல்வோர், இந்தியக் கடற்கரைக் காவல் படையினருக்குப் பயந்து அகதிகளை இலங்கையைச் சேர்ந்த திட்டுக்களில் இறக்கிவிட்டுத் திரும்பி விடுகின்றனர். குடிப்பதற்கு தண்ணீர் கூடக் கிடைக்காத அம் மணற் திட்டுகளில் இறக்கி விடப்படும் அகதிகள் பெரும் துன்பங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்தியாவுக்குச் சொந்தமான மணற் திட்டுகளில் இறக்கி விடப்படுபவர்களை இந்தியக் கடற்படையினர் அழைத்துச் செல்கின்றனர். அண்மையில் இலங்கைக்குரிய திட்டு ஒன்றில் இறக்கி விடப்பட்ட 47 அகதிகள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னாரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

★ திருக்கோவில் ஆலய வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி அமிர்த்த குமார கிளைமோர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். 18ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்தில் பொது மக்கள் சிலரும் காயமடைந்தனர்.

★ களுத்துறைச் சிறையில் புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைதாகி பல வருடங்களாக விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு சட்ட உதவிகளை வழங்குவதற்கு நோர்வேயின் 'நோராட்' நிறுவனம் பண உதவிசெய்ய முன்வந்திருக்கிறது.

★ சுவிற்ஸர்லாந்தில் தஞ்சம் கோரி மறுக்கப்பட்ட 3000 இலங்கை அகதிகளை அந்நாட்டு அரசாங்கம் திருப்பி அனுப்பக் கூடாதென சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இவர்கள் திருப்பியனுப்பப்பட்டால் அவர்கள் இந் நாட்டில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டி வரும் என்று அச்சபை சுட்டிக் காட்டியுள்ளது.

★ வடகிழக்கு மகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மட்டுமே இச்சபையில் அங்கம் வகிக்கும் என்று கூறியுள்ள ஜனாதிபதி, புலிகள் இயக்கத்தினர் தேசிய நீரோட்டத்தில் இணைந்தால் மட்டுமே அவர்களுக்கும் இச்சபையில் இடந்தரப்படும் என்று வலியுறுத்தியுள்ளார். ■



∴பிஜியின் கதை

கடந்த சில மாதங்களாக ஊடகங்களில் பத்திபத்தியாகப் பிரசுரமாகும் ∴பிஜியின் பிரச்சனைகள் தொடர்பான தகவல்களின் பின்னணியை எமது வாசகர்களுக்கு விளக்கும் கதை இது....



கொடிய வன விலங்குகளும் நச்சுப்பாம்புகளும் குடியிருந்த அடர்ந்த காடுகளை வெட்டி வளம் நிறைந்த கழனிகளாக்கி, கரும்புச் செடிகளை நட்டு, கரும்புச் சாற்றைக் கறந்து ஆலைகளில் அவற்றைச் சீனியாக்கித் தந்தவர்கள் இன்று அந்த நாட்டை விட்டே ஓட்டப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

தென்பசுபிக்பெருங்கடலில் அவுஸ்திரேலியாவுக்குக் கிழக்கே சுமார் 800 தீவுக் கூட்டங்கள். இவை தான் இன்று பல சிக்கல்களுக்குள் சிக்கிச் சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கும் ∴பிஜித் தீவுகள்.

ஆசிய, தென் ஆசிய மற்றும் தூரகிழக்கு நாடுகளில் வர்த்தகப் போர்வையில் நுழைந்த வெள்ளையர், இந்த ∴பிஜித் தீவுகளையும் கண்டனர். அங்கு வாழ்ந்த நாகரிகமற்ற பூர்வ குடிகளை மிரட்டி, 1874ல் முழுத்தீவுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டனர். இயற்கை வளமும் நீர் நிலச்சிறப்பும் கொண்ட அத்தீவுகளைச் சீராக்கிச் செப்பனிட 1879ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கப்பல்களில் ஏற்றிச் சென்று குவித்தனர்.

இந்தியத் தொழிலாளர்களோ எண்ணற்ற கொடுமைகளைச் சகித்து ∴பிஜித்தீவுகளை இன்று பொன் கொழிக்கும் பூமியாக்கித்தந்தனர்.

அன்று வெள்ளையர்கள் இந்தியத் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்தி கொத்தடிமைகளாக்கி கசக்கிப் பிழிந்தனர்.

∴பிஜித்தீவுகளில் இந்தியத் தொழிலாளர்கள் பட்ட துயரைக் கேள்வியுற்ற மகாகவி பாரதி அன்று பாடிய பாடல் வரிகளில் சிலவற்றைப் பார்த்தால் அவர்கள் பட்ட துயரம் துலக்கும்.

கரும்புத் தோட்டத்திலே-அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து
விழும்படி வருந்து கின்றனரே;

மாகடலுக்கு நடுவினிலே-அங்கோர்
கண்ணற்ற தீவினிலே-தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார்.

இவ்வாறு சொல்லொணாத் துயரத்தைச் சுமந்து அந்நாட்டைக் சொர்க்க புரியாக்கினர். அவர்களுடைய வழித்தோன்றல்கள் இன்று ∴பிஜியின் மக்கள் தொகையில் 46 சத விகிதத்தினர். 1874ல் ∴பிஜியை நாடிவந்த வெள்ளையர், 1970ல் நாட்டை விட்ட கன்றனர். 48 சத வீதமான ∴பிஜி நாட்ட வருடன் இணைந்து வாழும்படிதான் விட்டுச் சென்றனர். அன்றையத் தொழிலாளர்களின் வாரிசுகள் கல்வியிலும் உழைப்பிலும் ஓங்கி வளர்ந்தனர். 'உழைப்பால் உருவாக்கிய நாட்டின் நிர்வாகத்தில் எமக்கும் பங்குண்டு! என்று எண்ணி ∴பிஜி நாட்டுச் சுதேசிகளுடன் சேர்ந்தே வாழ்ந்தனர்.

ஆனால் அந்த எண்ணத்தில் சில சுயநலமிகள் மண்ணை வாரி இறைத்தனர். இதன் விளைவுதான் இன்று அந்நாட்டில் வெடித்த பூகம்பத் துக்குகாரணம்.

அலைகடல்கள் சூழவர குமுறி மோதினாலும் அந் நாட்டு மக்கள் அமைதியாகவே வாழ்ந்தனர். அரசியல் ஆதிக்க வெறி ஆவேசமாகச் சீறத்தொடங்கியது. அமைதி குலைந்தது; அகோர வெறி தலை விரித்தாடுகிறது.

முறையாக நடந்த பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை பாராளுமன்றத்தையே சிறைக்கூடமாக்கிய சிலர், அவர்களை அடைத்து வைத்துச் சித்திரவதை செய்கின்றனர்.

இக்கொடுமையை உலகம் இன்று 'தெருச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்று பார்த்து இரசிக்கிறது.

∴பிஜி நாட்டைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் சூழ்நிலை ஏற்பட்டமைக்கான காரணம் என்ன...?

அதுதான் ∴பிஜியின் கதை.

(அடுத்த வாரமும்)

தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் பிரதமர் பதவியை ஏற்று ஓராண்டு நிறைவு விழாவில் திளைத்திருந்து, கலகக்காரர்களால் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டுள்ள ∴பிஜியின் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த

-மகேந்திர சவுத்திரி-

சுக்கிராச்சாரியார்

∴பிஜியின் இன்றையப் பிரச்சனைக்கான மூலகாரணகர்த்தா இவர்தான். இவர் ∴பிஜி இனத்தவர்; ஒரு வர்த்தகர். எதிர்க்கட்சித் தலைவரின் மகன்-

-ஜோர்ஜ் ஸ்பைபட்-



முன்னாள் பிரதமரான இவர் 1987ல் நாட்டில் கலகத்தைக் தூண்டி விட்டு, ஆட்சியைக் கைப்பற்றியவர். இப்பொழுது ஜோர்ஜ் ஸ்பைட்டைத் தூண்டி விட்டு நாட்டில் மேலும் சிக்கலை ஏற்படுத்தும்

-ரபுகா-



∴பிஜி நாட்டின் முறையான அதிபர். இராணுவம் இவருடைய பதவியைப் பறித்துவிட்டது. அவர் எங்கோ தலைமறைவாகி விட்டார். இவருடைய மகள் பணயக் கைதியாக்கப்பட்டுள்ளார்.

-அதிபர் மகிசெசே மாரா-

∴பிஜி அதிபரைப் பதவியிலிருந்து இறக்கிய இராணுவத் தளபதி இவர். நாட்டின் நிர்வாகம் இப்பொழுது இவர் கையில் தானிருக்கிறது.

-∴பிராங் பைனிமராமர்-

வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் பகுதியை கடந்த வாரம் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.

மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு

திருப்பி அனுபப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 02

நாட்டிலிருந்து திருப்பி அனுப்படுவோர் கொழும்பு நகரை வந்தடைந்ததும், அவர்கள் பலபிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். முதலாவதாக, சோதனைச் சாவடிகளில் மீண்டும் மீண்டும் அவர்கள் கைது செய்யப்படலாம். அவர்களிடம் பெரும்பாலும் கடவுச்சீட்டு அல்லது தேசிய அடையாள அட்டை போன்றவை இருப்பதில்லை. வெளிநாடுகளில் உள்ள சிறிலாங்கா உயர்ஸ்தானிகராலயம் அல்லது தூதரகம் இவர்கள் கொழும்புக்கு வந்து சேர்வதற்கு அவர்களுக்கு வழங்கும் ஆவணங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்திலுள்ள குடிவரவு அதிகாரிகள் எடுத்து வைத்துக் கொள்வார்கள். திருப்பி அனுப்பப்பட்டவருக்கு சில குறிப்புகளுடன் ஒரு துண்டை மட்டும் வழங்குவார்கள். ஆகவே அவர் கொழும்பு வந்து சேரும் நேரத்தில் அவரிடம் கடவுச்சீட்டோ தேசிய அடையாள அட்டையோ இருப்பதில்லை. அந்நபர் தமிழராக இருந்தால் அவர் ஒரு புலிப்படையைச் சேர்ந்தவர் என்று சந்தேகத்தின் பேரில் உடனடியாகக் கைது செய்யப்படுவதற்கு வாய்ப்புண்டு.

பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் இலங்கையைச் சேர்ந்த ஒவ்வருவரிடமும் தேசிய அடையாள அட்டை கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று விதித்துள்ளனர். அவர்கள் தமிழராக இருக்கும் பட்சத்தில், பொலிசில் பதிவு செய்ததற்கான அறிக்கையின் ஒரு பிரதியாவது, அவர் எங்கு சென்றாலும் அவர் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார். இலங்கையின் வட கிழக்கைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழர்கள்-முக்கியமாக கொழும்பிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் வசிக்கும் தமிழர்களிடம் இந்த ஆவணம் எப்போதும் கைவசம் இருப்பது அவசியமாகின்றது. தமிழினத்தைச் சேர்ந்த எத்தனையோ பேர் சோதனைச்சாவடிகளில் மேற்படி இரு ஆவணங்களையும் காண்பிக்க முடியாத நிலையில் இருந்தமையினால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் பதிவு என்பது சட்டப்படி விதிக்கப்பட்ட ஒன்றல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட தமிழர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் தனது பெயரைச் பதிவுசெய்யச் சென்றபோது கைதான ஒரு சம்பவத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந் தக் கைது தொடர்பாக மனித கௌரவத்திற்கான மன்றத்தின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் விடுத்த அத்தாட்சிப் பத்திரத்தை இங்கு காணலாம்.

* யாழ்ப்பாணம், வேலணை, சரவணை கிழக்கைச் சேர்ந்த அம்பலவாணி குருபரன் என்பவரை நான் நன்கு அறிவேன்.

அவர் ஜெர்மனியில் தஞ்சம் கோருவதற்காக 03.11.1991ல் பயணமானார். அவர் அங்கிருந்து 02.09.1998ல் திருப்பியனுப்பப்பட்டார். அவர் விமானநிலையத்தில் வந்திறங்கியதும், குற்றப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர். 04.09.1998ல் நீர்கொழும்பு நீதவான் அவருக்கு பிணையில் செல்ல அனுமதித்தார். பின்னர் 10.09.1998ல் ரூபா 10,000/- அபராதம் செலுத்தப்பட்டதும் அவர் விடுதலை செய் யப்பட்டார்.

இந்நபருடைய சகோதரர் திரு. நல்லையா ஸ்ரீமயன் என்பவருடன் இவர் 17.09.1998ல் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு தன்னுடைய பெயரைப் பதிவு செய்வதற்காகச் சென்றார். இவர்கள் இரு வரும் அப்போதே கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள மகஸீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். கொழும்பு கோட்டை நீதி மன்றத்தில் இவர் மீதான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவருடைய விசாரணை 01.10.1998க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கைதுகள்

மகேஸ்வரி வேலாயுதம் (செயலாளர்)

தமிழர்கள் வெறுமனே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவதுதான் அவர்கள் எதிர்நோக்கும் பேரபாயமாகும். இக் கைது சட்ட ரீதியானதல்ல. ஒருவர் கைது செய்யப்பட்டால், அவர் என்ன காரணத்துக்காகக் கைசெய்யப்படுகிறார், என்பதை அவரைக் கைது செய்பவர் அவருக்குக் கூறியாக வேண்டும். இதனை சட்டம் தெளிவாக வலியுறுத்துகிறது. இந்த நடைமுறை கடைபிடிக்கப்படுவது பெரும்மாலும் குறைவு. வெளி நாடுகளில் இருந்து திருப்பியனுப்பப்படும் தமிழர் ஒருவர் மேற்காணப்படும் மூன்று வகையான சட்ட விதிகளின் படிதான் கைது செய்யப்பட வேண்டும்.

01. குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்படலாம்.

02. பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைக்கப்படலாம்.

03. அவசரகாலச் சட்டவிதிகளுக்கு அமைவாகக் கைது செய்து தடுத்து வைக்கப்படலாம்.

01. <u>குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்</u>

இலங்கைக்குத் திருப்பியனுப்படுபவர், அவர் ஒரு தமிழராக இருந்தால் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளே அவரைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பார்கள்.

தமிழ்ப்பயணிகளைப் பொறுத்தவரையில் குடிவரவு தொடர்பான விசாரணைகள் சுலபமாக முடிவதில்லை. சில மணி நேரங்களோ அல்லது சில நாட்களோ தொடரலாம் திருப்பி அனுப்பப்படுவார்கள் கைது செய்யப்படுவதுடன் முடிவடைந்து விடுவதில்லை. அவர்கள் பலவகையான துன்புறுத்தல்களுக்கு ஆளக்கப்படுகின்றனார், என்பதற்கான பல சான்றுகளும் உள்ளன.

விமானத்தில் இருந்து விமான நிலையத்தில் இறங்கியதும் குற்றபுலனாய்வுத் துறை பொலிஸாரினால் அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அதன் பின்னர் நீர் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் படுவார்கள். குடிவரவு மற்றும் குடியகல்வு திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் இது நடைபெறுகிறது. இங்கு இச்சந்தேக நபர்கள் ரூபா 1,00,000/- அபராதம் செலுத்த வேண்டும் அல்லது ஒரு வருடக் கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்.

(மேலும் வரும்)

அலசுவது - இராஜதந்திரி

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம்?

இன்றைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைகின்றது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க எவ்விதத்திலும் பாராளுமன்றத் தேர்தல்களை ஒத்திப்போடப்போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றப் பொதுத்தேர்தல்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இத்தருணத்தில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக மொன்றை ஏற்படுத்துவது பற்றிய பேச்சும் அடிபடத் தொடங்கியுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994ம் ஆண்டு பாராளுமன்றத்தைக் கைப்பற்றியது. அதன் பின்னர் இருதடவைகள் ஜனாதிபதி ஆட்சியையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இது தவிர கடந்த ஆறுவருடகால ஆட்சியில் பொது ஜன ஐக்கிய முன்னணி மாகாணசபைத்தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பவற்றையும் நடத்தியிருந்தது.

அத்தேர்தல்களின் போதெல்லாம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஓர் உறுதியான அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தியிராத ஆட்சியாளர்கள் தற்போது அம்மாகாணத்தில் இடைக்கால நிர்வாகம் என்ற புதிய விடயத்தைப் பேசத் தொடங்கியிருப்பது

வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையடுத்து வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத்தீர்வுகாணும் வகையிலேயே மாகாணசபை நிர்வாகம் அறிமுகமானது.

ஆனால் இந்த நிர்வாகம் வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களிலேயே தற்போது இருந்து வருவதுடன், கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக அரசியல் ரீதியான நிர்வாகமெதுவுமின்றி வடக்கு-கிழக்குப் பிரதேசம் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இன்றைய முக்கிய அரசியல் பிரச்சனையாக வடக்கு-கிழக்கு விவகாரமே இருந்து வருகின்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படுவதன் அவசியம் பெரிதும் உணரப்பட்டதுடன், அம்மாகாணங்களுக்கான அதிகாரப்பரவலாக்கம் விரிவாக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாடு வலுப்பெற்றதாகவுமிருந்தது.

இருந்த போதிலும் வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தின் அரசியல் முக்கியத்துவம் நிலைதளர்ந்த நிலையில் தற்சமயம் அம்மாகாணத்தில் ஆளுநர் மூலமான நிர்வாகத்தையே ஆட்சியாளர்கள் நடத்தி வருகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு மாகாணசபையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வுத்திட்டம் ஏற்புடையதாக இருக்குமென்றே கருதப்பட்டது. ஆயினும் காலப்போக்கில் அத்தீர்வுத்திட்டம் ஒரு நீண்டகால அடிப்படையில் வடக்கு-கிழக்கு தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யப்போவதில்லை என்பதையே தமிழ் அரசியல் கட்சிகள் உணர்ந்து கொள்ளலாயின.

இதனையடுத்தே வடக்கு-கிழக்கு பிரச்சனையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த சில காலமாகவே ஆளுந்தரப்பும், எதிர்க்கட்சியும் நாட்டின் இன்றைய நெருக்கடி தொடர்பாக பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தன.

எதிரும், புதிருமாக நின்று வாதப் பிரதிவாதங்களை நடத்திவந்த ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சனை என்ற பொது விடயத்தைக் கையாளுவது தொடர்பாக தம்மிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் விதத்திலேயே பல சுற்றுப் பேச்சுக்களை கடந்த சில காலமாக நடத்தியிருந்தன.

இருந்தபோதிலும் தற்போது இப்பேச்சுக்களின் வெளிப்பாடாக இடைக்கால நிர்வாகம் என்ற விடயத்தை ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியன தெரிவித்திருப்பது, வடக்கு-கிழக்கு மக்களைப் பெரிதும் குழப்பத்திலாழ்த்துவதாகவே இருக்கின்றது.

இந்த இடைக்கால நிர்வாகமென்ற அம்சத்தைநோக்கும் போது, ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இனப்பிரச்சனை விடயத்தில் தொடர்ந்து ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகளாகவே இருப்பதைக்காணமுடிகிறது.

பெயரளவில் இருபிரதான கட்சிகளும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரு வேறு பிரிவுகளாக இருக்கின்றன. ஆனால் இனப்பிரச்சனை என்ற பொதுப்பிரச்சனையைக் கையாளுவது தொடர்பாக இருதரப்பும் ஏறத்தாழ ஒரே கண்ணோட்டத்தையே கொண்டுள்ளன, என்பதையே இடைக்கால நிர்வாகம் என்ற விடயம் வெளிப்படுத்துகின்றது.

கடந்த கால அரசியல் வரலாற்றை எடுத்த நோக்கும்பட்சத்தில் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் எதுவுமே இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உறுதியான பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை.

பிரச்சனையை எதிர்நோக்கும் வடக்கு-கிழக்குத் தமிழ்மக்களின் எதிர்பார்ப்பினை பூர்த்திசெய்வதைவிடுத்து தமது நலன்களைப் பாதுகாப்பதிலேயே தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் முனைப்பாக இருந்தன.

அவ்வப்போது சில அரைகுறைத்தீர்வுத் திட்டங்களை மட்டுமே அமுலாக்குவதில்பிரதான கட்சிகள் ஆர்வங்காட்டியிருந்தன.

ஒரு நிரந்தரத்தீர்வை ஏற்படுத்தும் விதத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் எப்போதுமே நிராகரிக்கப்பட்டே வந்திருந்தன.

தற்போது கூட பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்தே வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைப்பொறுத்தவரை தற்போது நிரந்தரமாகவே தீர்வு காணப்படவேண்டியதே இன்றியமையாததாகின்றது.

ஏனெனில் கடந்த பல தசாப்தங்களாகவே ஓர் ஆரோக்கியமான அரசியல் தீர்வை எட்டுவதற்காக வடக்கு-கிழக்கு மக்கள் பலத்த இழப்புக்கும், அவலங்களுக்கும் முகங்கொடுத்துள்ளதையே காணமுடிகின்றது.

இதுவரை காலமும் அவர்களது பிரச்சனையைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தீர்வு யோசனைகள் 'யானைப்பசிக்குச் சோளப்பொரி' போன்றே இருந்தன.

எனவே தற்போதைய இடைக்கால நிர்வாகம் என்ற அறிவிப்புக் கூட வடக்கு-கிழக்கில் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அப்பிரதேசத்தில் பாராளுமன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு பிரயத்தனமோ? என்றே எண்ணவேண்டியுள்ளது.

தற்போதைய சூழலில் இடைக்கால நிர்வாகம் என்ற விடயம் வடக்கு-கிழக்கில் எவ்வித பயனையும் அளிக்கப்போவதில்லை என்பதே உண்மை.

ஒரு முற்றுமுழுதான யுத்தச் சூழலுக்குட்பட்ட பிரதேசமாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இருந்து வருகின்றன.

கடந்த ஒரிருவருடங்களாக வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாகவே இடம்பெற்றுவரும் மோதல்கள் அப்பிரதேச மக்களை வெகுவாகவே சிதறடித்துவிட்டுள்ளது.

யுத்தநிலபரங்கள் சூடுபிடித்து அப்பாவிமக்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும் தறிகெட்டுத் திரிந்த சமயம் உறுதியாக எதனையும் அரசியல் ரீதியாகச் செய்யமுடியாதிருந்தது.

இந்நிலையில் தற்போது வடக்கு-கிழக்கில் நிலமை மேலும் மோசமடைந்த நிலையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் அறிவிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ள தருணத்தில் இடைக்கால நிர்வாகத்தினால் அரசியல் ரீதியாக எதனைச்சாதிக்கமுடியுமென்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இடைக்காலநிர்வாகம் என்ற விடயத்தை அமுல்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தோன்றியிருக்கவே செய்தன.

காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சியிலேயே வடக்கு-கிழக்கின் மாகாணசபை நிர்வாகம் அஸ்தமனத்துக்கு வந்தது.

இதனிலிருந்து இலங்கையின் ஆட்சியாளர்களால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர் ஒருவரின் நிர்வாகத்தின் கீழேயே ஓர் அரச நிர்வாகம் வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வருகின்றது.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வருமுன்பிருந்தே இந்த ஆளுநர் ஆட்சி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகளை ஆரம்பிப்பதாகக்கூறி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை தமது ஆட்சியின் ஆரம்பத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆரம்பித்தது. ஆனால் அப்பேச்சுக்கள் முறிவடைந்தநிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்சனையை அரசியல் ரீதியாக அணுகுவதை ஆட்சியாளர் தவிர்த்தே வந்தனர்.

இதன்காரணமாக வடக்கு-கிழக்கு நிலபரம் என்பது பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் கூட ஒரு கெடுபிடி யுத்தத்தை எதிர்நோக்கியதாகவே மாறியிருந்தது.

எனவே வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பாக கடந்த ஆறு ஆண்டுகால பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயற்சிகள் நத்தைவேகத்திலேயே அமைந்திருந்தன.

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே வடக்கு-கிழக்குப் பிரச்சனைகுறித்து கருத்து முரண்பாடுகள் பலமடைந்திருந்த அதேசமயம், தமிழ் அரசியல் கட்சிகளிடையே கூட ஒரு காத்திரமான புரிந்துணர்வைக் கட்டியெழுப்பமுடியாத நிலையே காணப்பட்டது.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிஜமாகவே அரசியல் ரீதியான ஓர் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் ஆர்வமிருந்திருந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணி அதனை எப்பவோ செய்திருத்தல் வேண்டும். சில தமிழ் அரசியல் கட்சிகள்கூட அத்தகைய இடைக்கால நிர்வாகத்துக்கு உதவமுன்வந்திருந்தன.

இதுதவிர கடந்த வருடங்களில் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை வடக்கு-கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய மாகாணங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணி நடத்தியிருந்தது.

அப்போதெல்லாம் வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பற்றியோ அல்லது அங்கு ஓர் அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்துவது பற்றியோ பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் கடந்த ஆறு வருடங்களில் படிப்படியாகவே மூர்க்கமடைந்துவந்த மோதல் நிலபரங்களைக் காரணங்காட்டி அம்மாகாணத்தில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வையோ அல்லது இடைக்கால நிர்வாகத்தையோ ஏற்படுத்துவதில் ஆளுந்தரப்பு பாராமுகமாகவே இருந்துவந்தது.

ஆனால் தற்போது பொதுத் தேர்தல்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது ஒரு ஜேப்படி வித்தை? என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இன்றைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்கில் ஓர் இடைக்கால அரசியல் நிர்வாகமென்றால் நிச்சயம் அந்த நிர்வாகம் வடக்கு-கிழக்கு மக்களின் நிரந்தர அரசியல் நலன்கருதியதாக இருக்குமென ஒருபோதும் கருதிவிடமுடியாது.

இந்த இடைக்கால நிர்வாகமென்பது ஆளுங்கட்சியும், அதனோடிணைந்து எதிர்க்கட்சியும் தமது தேர்தல் நலன்களை வடக்கு-கிழக்கில் உறுதிப்படுத்த ஒன்று சேர்ந்து வீசமுயலும் வலையோ என்றே கருதவேண்டியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சனையோடு ஒன்றிப்பிணைந்து, அதனோடு ஒரு நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிகூட இந்த இடைக்கால நிர்வாகம் அர்த்தமற்றதென்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஒரு முக்கிய ஆயுதப்போராட்ட அமைப்பாக இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தாத பட்சத்தில் வடக்கு-கிழக்கில் ஓர் அரசியல் நிர்வாக இயந்திரத்தை இயக்க முடியாதென்பதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே இலங்கையின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பன கடந்த காலங்களில் வடக்கு-கிழக்கில் புரிந்து வந்த தவறுகளை எதிர்காலத்திலும் புரியாது இருக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் என்று தெரிவிக்கப்படும் போது இரு நோக்கங்களைப் பெருங்கட்சிகள்

எட்டமுயலுகின்றனவோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

ஒருபுறத்தே அண்மைக் காலங்களில் சர்வதேச ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வு குறித்து ஆர்வங்காட்டிவரும் உலக நாடுகளுக்கு அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது போன்று காண்பிப்பது.

மறுபுறத்தே வடக்கு-கிழக்கில் தேர்தல்களை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளுக்கு களமிடுவது போன்ற இரு நோக்கங்களுமே இந்த இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சில் தொனிப்பதை உணரமுடிகின்றது.

வடக்கு-கிழக்கு பிரச்சனை தொடர்பாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவற்றுக்கிடையே கருத்தொருமிப்பு ஏற்பாடுவது மிகவும் அவசியமானதாகும். இதனையே இலங்கை விவகாரத்தில் ஆர்வங்காட்டிவரும் அனைத்துத்தரப்புமே எதிர்பார்க்கின்றன.

இருந்தபோதிலும் இக் கருத்தொருமிப்பு என்ற விடயத்தை பெருங்கட்சிகள் இரண்டும் தமது சொந்தநலன்களைப் பாதுகாப்பதற்காக இடைக்கால நிர்வாகம் போன்ற குறுகிய வட்டங்களுக்குள் வைத்துக் கொண்டால் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்குரிய நிரந்தரத் தீர்வு கூட ஒரு கானல் நீராக இருக்குமென்றே கருதலாம். ○

அதிரடி அய்யாத்துரை

எல்லாம் வல்ல அம்மையாருக்கு சபாஷ் போடலாம். இரத்மலானைச்சம்பவத்தின் பின்னர் நடந்த இறுதிச் சடங்குகளைச்சாட்டாக வைத்து குழப்பம் போடகாடைக்கூட்டம் திட்டம் போட்டது. சில தமிழ் வீடுகளுக்கு கல்வீச்சுக்களும் நடந்துள்ளன. அப்பாவிகள் மிரட்டப்பட்டிருக்கினம் அம்மையாருக்கு தகவல் எட்டியதும் இரத்மலானைப் பட்டணத்துக்கு பட்டாளம் உடனடியாகவே விரைந்துள்ளது. கட்டாக்காலிக்கும்பல் பெட்டிப்பாம்பாகச் சுருண்டு போயிருக்குது. இந்த உடன் நடவடிக்கைக்கு அம்மையாருக்கு ஆயிரம் சல்யூட் அடித்தாலும் தகும்.

யாழ்ப்பாணத்தில் பிரபல கலையரங்காக இருந்த கட்டிடத்தையே களஞ்சியமாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்குது. திருட்டுக்கும்பல்கள் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி ஏற்கனவே இருந்த உணவுக்களஞ்சியங்களை உடைத்திருக்கினம். கஷ்டத்தின் விளிம்பில் யாழ்ப்பாணம் இருக்கும் போது களஞ்சியங்கள் சூறையாடப்பட்டிருக்குது. இதனால் எஞ்சிய பொருட்களை கலையரங்காக இருந்த யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு மாற்றியிருக்கினம். இப்போ ஒரு கலையரங்கு களஞ்சியமாகியிருக்குது.

இரத்மலான குண்டு வெடிப்பையடுத்து அப்பகுதியிலிருந்த பிரபல தமிழ் பத்திரிகையாளர் ஒருவரும் கலங்கிப் போயுள்ளார். குடும்பத்தவர்களைச் சொந்த ஊருக்கு அனுப்பி விட்டு தமது தட்டு முட்டுச் சாமான்களையும் அவர் இடம் மாற்றி அகன்றுள்ளார். ஏதோ பெரும் விபரீதமின்றி அவர் தப்பியுள்ளதற்கு சிவனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

அண்மையில் தந்தை செல்வாவின் மருமகன் பேராசிரியர் வில்சன் காலமாகியிருந்தார். அவருக்கு அஞ்சலியாக ஒரு நல்ல கட்டுரையை சிங்களக் கல்விமான் ஒருவர் ஆங்கில நாளிதழொன்றில் எழுதியிருந்தார். பேராசிரியர் வில்சன் கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர். அக்கல்லூரியில் தந்தை செல்வாவின் மூத்த புத்திரரும் பயின்றுள்ளார். அவருடன் லலித் அத்துலத்முதலி ஒன்றாக, ஒரே வகுப்பில் படித்துள்ளார். கலாநிதி நீலன் திருச்செல்வம், குமார் பொன்னம்பலம், அண்மையில் இறந்த சி.வி.குணரட்ண ஆகியோரும் றோயல் கல்லூரி பழைய மாணவர்கள். இவர்களிடையே வயது வேறுபாடு இருக்கலாம். ஆனால் இவர்கள் அனைவரும் ஒரு சமகாலத்தைச் சேர்ந்தவர்களாக அக்கல்லூரியில் இருந்துள்ளார்கள். அக்காலத்தை ஒரு பொற்காலமென்கிறார் பேராசிரியர் வில்சனைப் பற்றி எழுதிய சிங்களக் கல்விமான். உண்மைதான்!! -ஆனால் அப்பொற்காலத்தை இடித்துச்சிதைத்து இன்றைய சந்ததியை கற்காலத்துக்கு கொண்டு வந்து விட்ட பெருமை சிங்களம் மட்டுமே சட்டத்தைச் சாரும் என்றால் அது மிகையாகாது.

இலங்கை ஆயுதப்படைகளில் அடிமட்டத்தில் ஆட்பற்றாக்குறை. மேல்மட்டத்தில் அனுபவசாலிகளுக்குப் பற்றாக்குறை. இந்த இரண்டுங்கெட்டான் நிலைமையைச் சமாளிக்க புதிய நடைமுறைகள் உருவாக்கப்படுகின்றன. புராண, இதிகாச யுத்தங்களில் போன்று மூத்த தளபதிகளே யுத்தகளத்தில் நேரடியாகப் படை நடத்த வேண்டியிருக்குது. தலைநகரச் சொகுசுச் சூழலில் இருந்து உத்தரவுகளைப் போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ள முடியாமல் இருக்கினம் படைத்தளபதிகள். □

நடந்த கதை

மணக்க விரும்பாத (வெள்ளை) மங்கை 03

புஷ்பா தங்கத்துரை

உண்மையில் நடந்த கதை
(3 வாரங்கள் மட்டும்)

ஆராய்ச்சிக்கு வந்த வெள்ளைக்காரப் பெண்ணை விரும்பினான் அந்தக் கிராமத்து இளைஞன். அவளும் அவனை அணைத்தாள். ஆனால் அவனை தன் வாழ்க்கைத் துணையாக்க அவள் விரும்பவில்லை.

"பிரபு! அந்தப் பையனைக் கவனிச்சியா-?" என்றார் பதி.

"ஆமாம் சார்! வெள்ளைக்காரங்களைப் பத்திப் பேச்சு எடுத்தா, பெரிசா முழிச்சான்."

"கவனிச்சேன்! இவனுக்கு ஏதாவது தெரிஞ்சிருக்கணும்."

"விசாரிக்கலாமா?"

"இரு, முதல்ல ஆளைக் கொஞ்சம் கவனி! வெளியிலே புறப்பட்டானே! எங்கே போயிருப்பான்? இந்தப் பக்கம் தானே போயிருப்பான்?"

எதிரே ஒரு ஆட்டுக்காரப் பையன் வர அவனிடம் "தம்பி! சீனிவாஸ் இந்தப் பக்கம் போறதைப் பார்த்தியா?" என்று கேட்டார் பதி.

"தோட்டம் பக்கம் போனாரு!" என்றான் பையன்.

கிராமத்தின் கீழ்ப்பகுதியைச் சுற்றிக் கொல்லைப்புறத்துக்கு வந்தார்கள்.

ஏற்கனவே அந்தத் தோட்டங்கள் நிறைந்த பகுதி வழியாக பதியும், பிரபுவும் போயிருந்தார்கள்.

இப்போது மீண்டும் சென்றார்கள்.

'டப்... சப்...' என்று ஏதோ சத்தம் கேட்டது! கற்களைத் தண்ணீருக்குள் வீசுவதுபோல் சத்தம்!

மெல்ல நடந்து சத்தம் வந்த பகுதிக்கு வர, அங்கே கண்ட காட்சி அவர்களைத் திகைக்க வைத்தது.

ஒரு நீர்நிலையில் சீனிவாஸ் நின்று கொண்டிருந்தான். வெறிபிடித்தவன் போல் அங்கிருந்த கற்களைத் தூக்கி நீருக்குள் எறிந்து கொண்டிருந்தான்.

சற்று பெரிதான நீர்நிலை! அதன் நட்ட நடுப்பக்கம், பாசிபோல ஏதோ மிதந்தது. அலைகள் அங்குமிங்கும் தள்ளாடின!

இருவரும் அவன் அருகில் போனதும் அவன் திடுக்கிட்டான்.

"என்ன தம்பி, கல் எறியறீங்க!" என்றார் பதி சிரித்துக்கொண்டு.

ஆமாம் என்பது போல் தலையசைத்தான் அந்தப் பையன்.

"ஏன் இப்படித் தண்ணிக்குள்ளே போடறீங்க?"

"சும்மா வேடிக்கைக்குத்தான்."

"ஆழம் எவ்வளவு இருக்கும்?"

"தெரியாது!"

அந்தக் குளத்துள் இறங்குவதற்கு ஒரு வழி பண்ணியிருந்தார்கள்.

பதியும், பிரபுவும் அதில் இறங்கினார்கள்.

"சார்! அந்தப் பக்கம் போகாதீங்க! என்றான் சீனிவாஸ்!"

இருவரும் நின்றார்கள்.

"இது எங்களோட குளம்! அங்கே கை கால் கழுவக்கூடாது!"

"கழுவவில்லையே! சும்மாதானே போய் நிற்கிறோம்?"

அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

பதி வேண்டுமென்றே அங்கே நிற்க, "ம்! சீக்கிரம்! வேலை ஆச்சா இல்லையா?" என்றான் சற்று கோபமாக.

பதி முகத்தில் சிவப்பு ஏறியது! "-பிரபு! பையனை ஒரு பிடி பிடிக்கணும்."

இருவரும் மேலே வந்தார்கள்.

அவன் பக்கத்தை அடைந்து, "என்ன தம்பி! முறைக்கிறே?" என்றார் பதி!

"அங்கே போகக்கூடாதுன்னா போகக் கூடாது!" என்றான் சீனிவாஸ் கோபமாக.

"ஏன், குளத்தில் என்ன இருக்கு?" என்று பதி கேட்க, அவர் மூளையில் ஏதோ பளிச்சிட்டது.

"இந்தா பிரபு குளத்திலே இறங்கு!" என்றார்.

"கூடாது! ஆமாம்!" என்று இரைந்தான் அந்தப் பையன் சீனிவாஸ்.

பதி சட்டென்று அவன் கைகளைப் பற்றினார்!

திமிறப் பார்த்தான்.

"தம்பி! பேசாமல் இரு! இல்லாட்டி ஒரு போடு போடுவேன்! நாங்க போலீஸ்!" என்றார் தோரணையோடு.

சீனிவாஸ் நாடிகள் தளர்ந்தன.

பதி நீருக்குள் இறங்கினார். இடுப்பு வரை ஆழம் என்றான்.

"பிரபு! நடுவிலே என்னவோ மிதக்குதே அதைப் பாரு!"

பிரபு நீருள் கையைவிட்டுக் கற்களை எடுத்து, அந்த மிதக்கும் பாசி மீது விட்டெறிந்தார்.

'ணக்' என்று சத்தம்! பாசி இல்லை அது! 'ஏதோ' உலோகத்தில்பட்டதுபோல் சத்தம்!

"பிரபு! நீந்திப் போ! அது அந்த மோட்டார் வேன்தான்" என்றார் பதி!

இப்போது சீனிவாஸ் திமிறினான். கையை விலக்கிவிட்டு ஓட ஆரம்பித்தான்.

பதி விடவில்லை. இரண்டு தாவில் அவனைப் பிடித்தார். இரண்டு கராத்தே வெட்டு போட்டு கீழே தள்ளினார். ஒரு உலுக்கு உலுக்கி மேலே தூக்கினார்.

சீனிவாஸ் கலங்கிவிட்டான்.

அவன் ஆத்திரங்கள் மறைந்துவிட்டன!

பிரபு நீச்சல் அடித்து நடுப்பகுதிக்குப் போனார். அது மோட்டார் வேன் என்று தெரிந்தது. முழுவதுமாக மூழ்கியிருந்தது.

பிரபு திரும்பி வர, இருவரும் சீனிவாசை ஒதுக்குப்புறமாகத் தள்ளிக்கொண்டு பயமுறுத்தி விசாரித்தார்கள்.

உண்மைகள் வெளிவந்தன.

போராசிரியர் லிவிங்ஸ்டனையும், மார்கோவையும் அடிக்கடி சந்தித்திருக்கிறான் சீனிவாஸ். மார்கோ அவனோடு நெருங்கிப் பழகியிருக்கிறாள். அவள் மீது அவனுக்குப் பெரிய காதல் ஏற்பட்டது.

அவளை அணைத்து முத்தமிட்டு உலுறவு கொள்ளும் அவளவுக்கு அவன் போய்விட்டான்.

அவளும் உல்லாசமாக எல்லாவற்றுக்கும் சம்மதித்துவிட்டாள்.

ஒரு மாதம் தங்கள் ஆராய்ச்சியை முடித்த பிறகு, வெள்ளையர்கள் கிளம்பிவிட்டார்கள்.

"ஊருக்குப் போகாதே, என்னை மணந்து கொள்!" என்று அவளைக் கேட்டிருக்கிறான் சீனிவாஸ்.

"அய்யோ! நான் உன்னைக் காதலிக்கவில்லை. உன்னோடு உறவு கொண்டதெல்லாம் ஒரு தமாஷ்!" என்று சொல்லிமிருக்கிறாள்.

அவர் சிரித்துக்கொண்டே, "நீங்க இருவரும் உடல் தொடர்பு கொள்வதை, நான் தூரத்திலிருந்தே பைனாகுலரின் மூலம் பார்த்திருக்கிறேன்! மார்கோ ஒரு ஜாலியான பெண்! போற இடங்களிலெல்லாம் இது போன்ற சல்லாபங்கள் வைத்துக்கொள்வாள்!" என்று சொல்லிமிருக்கிறார். அவன் அதில் திருப்தி அடையவில்லை.

புறப்படும் அன்று, திரும்பவும் வந்து மார்கோவிடம் கேட்டிருக்கிறான். அவள் திருமணத்திற்கு மறுத்திருக்கிறாள். அவனால் தாங்கமுடியவில்லை. அவளை உடனே கத்தியால் குத்தியிருக்கிறான். அவள் துடித்து விழ, சீறி வந்த லிவிங்ஸ்டனையும் தாக்கிக் குத்தியிருக்கிறான். இருவரும் இறந்து விட்டார்கள். சடலங்களை வெகுதூரத்தில் கொண்டு போய்ப் புதைத்து விட்டான். மோட்டார் வேனை என்னசெய்ய? அதை எப்படி மறைப்பது?

நண்பர்களுடன் அதை இழுத்துப்போய்க் குள்துக்குள் தள்ளிவிட்டான்.

அனால், அது முழுவதுமாக மூழ்கவில்லை. மேல் பகுதி போசிபோல் நடுத் தண்ணீரில் தெரிந்தது.

பதியும், பிரபுவும் அதைப் பார்த்துவிடக் கூடாது என்று நினைத்து நீரின் மட்டத்தை உயர்த்த எண்ணி கற்களைக் குளத்துள் எறிந்திருக்கிறான் சீனிவாஸ்.

பதி அதைப் பார்த்துவிட்டார்.

சீனிவாசுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது.

(நடந்த கதை தொடரும்)

அடுத்த தேர்தலில் கவர்ச்சி முதல்வர்

இந்தியாவின் பிகார் மாநில முன்னாள் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் ஒன்றும் சாதாரண தலைவர் அல்ல. ஊழல் வழக்குகளில் சிக்கியிருக்கும் லல்லுவின் முதல்வர் பதவி மனைவி ரப்ரிதேவிக்குச் சென்றுள்ளது.

இப்போது முதல்வராக இருக்கும் ரப்ரிதேவி இந்தப் பதவிக் காலத்துடன் போதும் என்ற முடிவுடன் அடுத்த தேர்தலில் இவர், மகள் மிசா பாரதியை முன்னிறுத்தப் போகிறார்.

இதற்காக மிசா பாரதிக்கு முதல்வர் பதவிக்கான பொறுப்புகளை எல்லாம் இப்போதே கற்றுக் கொடுக்கிறார் லல்லு. இப்போது பெரும்பாலும் பாட்னாவின் தலைமைச் செயலகத்தில் தான் இருக்கிறார் மிசா பாரதி.

அரச கோப்புக்களை எல்லாம் பார்வையிடுவது எல்லாம் இவர்தான். கையெழுத்து மட்டும் தான் ரப்ரி தேவியினுடையது.

மிசா பாரதி அடுத்த முதல்வராக வருவதற்கு ஒரே ஒருவர் மட்டும் தான் தடையாக இருந்து வருகிறார். அவர் மாநில ராஷ்டிரிய ஜனதா தளத்தலைவர் ரஞ்சன் பிரசாத் யாதவ்.

இவரை இப்போதே கட்சியை விட்டு ஓரம் கட்டும் வேலையைத் தனக்கு நெருக்கமான தலைவர்கள் மூலமாகத் துவங்கி விட்டார் லல்லு பிரசாத் யாதவ்.

வாய் பிளக்க வைக்கும் கண்டுபிடிப்பு



பிரிட்டிஷ் மற்றும் இஸ்ரேல் நாட்டு ஆய்வாளர்கள் ஒரு மாத்திரை அளவு வீடியோ கமராவைக் கண்டுபிடித்துள்ளனர். இது வயிறு சம்பந்தப்பட்ட எந்த நோயையும் கண்டுபிடிக்க உதவும்.

நோயாளிகள் இந்தச் சிறிய கமராவை விழுங்கினால் போதும். (அது வயிற்றில் இருப்பதே தெரியாது). ரேடியோ ட்ரான்ஸ்மீட்டர் மற்றும் வீடியோ கமரா மூலம் வயிற்றில் என்ன கோளாறு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அதற்கு உதவியாக நோயாளி தனது இடுப்புப்பட்டியில் ஒரு சின்னத் திரையை அணிந்து கொள்ள வேண்டும். இதனால் எந்தப் பின் விளைவுகளோ பாதிப்புக்களோ ஏற்படாதாம். இதை மறுபடி வயிற்றிலிருந்து இலகுவாகவும் எடுத்து விடலாம்.

நோயாளிகள் இதை விழுங்கி 24 மணி நேரத்தில் வயிற்றில் உள்ள எல்லாக் கோளாறுகளையும் காட்டி விடுகிறது. அது அனுப்பும் சிக்னல் மூலம் வயிற்றில் எந்தப் பகுதியில் கமரா இருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளமுடியும்.

வயிற்றில் எந்த இடத்தில் புற்றுநோய் இருக்கிறது என்பதையும் உடனே காட்டி விடுகிறது. இந்தக் கண்டுபிடிப்பை 10 பேர்களிடம் சோதித்துப் பார்த்ததில் வெற்றி காணப்பட்டுள்ளது.

இதை இஸ்ரேலைச் சேர்ந்த ஒரு கம்பனி தயாரித்து அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது.

ரம்பாவின் வளர்ப்பு நாய்

நடிகை ரம்பா வளர்த்த நாய் இறந்து போன செய்தி தமிழகப் பத்திரிகைகளல் முக்கிய செய்தியாக இடம்பிடித்திருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இந்தச் சுவாரஸ்யமான செய்தியை நீங்களும் படித்துத்தான் பாருங்களேன்.

ரம்பா வீட்டில் சுமார் 15 நாய்களை வளர்த்து வருகின்றார். அவற்றில் டாமி என்ற பெரிய நாய் மீது மட்டும் ரம்பாவுக்கு கொள்ளைப்பாசம்.

30 ஆயிரம் இந்திய ரூபாய் கொடுத்து அந்த நாயை ரஷ்யாவில் இருந்து வாங்கினாராம்.

ரம்பா வீட்டில் வேலை பார்க்கும் வெள்ளைச்சாமி என்பவருக்கும் அந்த நாய்க்கும் ஆகாது. எப்போதும் வெள்ளைச்சாமியைக் கடிக்க வரும் அந்த நாய்க்கு ஒரு நாள் வெள்ளைச்சாமி அடித்துவிட்டார். விஷயம் ரம்பா காதுக்குப் போக திட்டித்தீர்த்து விட்டாராம்.

அதன் பின் ஒரு நாள் வெள்ளைச்சாமி அந்த நாய்க்கு சாப்பாடு வைக்கும் போது அது வெள்ளைச்சாமியை கடித்து விட்டது. பார்த்தார் வெள்ளைச்சாமி கோபத்தில் அதற்கு விஷம் வைத்துக் கொன்றுவிட்டார்.

நாய் இறந்த செய்தி கேட்டு ஆந்திராவில் இருந்து வந்தது ரம்பா கதறி அழுதபடி வந்தாராம். அது மட்டுமா? அதற்குச் சில வாரங்கள் முன்பு ரம்பாவின் தாத்தா இறந்தபோது ரம்பா அழவே இல்லையாம்.

இறந்த நாயை நினைத்து ரம்பா எதுவும் சாப்பிடாமல் துக்கம் அனுஷ்டித்து வருகிறாராம். தன் பிழைப்பைக் கெடுக்கப் பார்த்த நாயைக் கொன்ற பாவத்திற்காக இப்போது வெள்ளைச்சாமி பொலீஸில் உள்ளார்.

ரம்பாவின் நாய் டாமி சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கிளின்ரன் எதிர்நோக்கும் பிரச்சனை



அரசியல்வாதிகளின் ஆட்சிக்காலம் முடிந்ததும் அவர்கள் பிரச்சனையில்லாமல் நிம்மதியாக வாழலாம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் உலகின் வல்லரசான அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் பல வருட பதவிக்குப் பின் எதிர்நோக்கும் பிரச்சனையைப் பற்றிப் பாருங்களேன்.

அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்கு முன் கிளின்ரன் ஒரு வழக்கறிஞர். சட்டப் படிப்புப் படித்து ஆர்கான் சாஸ் மாநிலத்தின் சட்டக்கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறவிருக்கும் கிளின்டன், அதன் பின் மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்றலாம் என்று முடிவு செய்திருந்தார்.

இப்போது அதற்கும் வந்துவிட்டது வினை

கிளின்டன்-பவுலா ஜோன்ஸ் வழக்கின் போது, அதில் வெள்ளை மாளிகையின் முன்னாள் பணியாளர் மோனிக்கா லெவின்ஸ்கி பிரச்சனையும் சேர்ந்த போது, தனக்கும் மோனிக்காவுக்கும் காதல் தொடர்பு இல்லை என்று முதலில் கிளின்ரன் மறுத்திருந்தார்.

ஆனால் பின்னர் கிளின்ரன்-மோனிக்கா உறவு ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் பொய் சொன்னவர் கிளின்ரன், அப்படிப்பட்டவர் வழக்கறிஞராகப் பணியாற்ற வருவதை அனுமதிக்க முடியாது' என்று ஆர்கான் சாஸ் மாநில உச்சநீதிமன்ற ஆய்வுக்குழுவினர் முடிவு செய்துவிட்டனர்.

பாதை மாறிய வண்ணம்

← கனடா ரொரண்டோ நகர வீதிகளில் வேகமாக ஓடிவந்த இந்த வாகனம் சம்மர்ஹில் பாதையிலுள்ள சம்மர்ஹில் சந்தையின் மர வேலியை உடைத்துக் கொண்டு மக்கள் குடிமிருப்புகளுக்கிடையிலுள்ள பாதையில் பாய்ந்து அந்தரத்தில் தொங்குகிறது. வேடிக்கை என்னவென்றால் இவ்வாகனத்தைச் செலுத்தி வந்த (படத்தில் காணப்படும்) பெண்ணுக்கு ஒரு சிறு சிராய்ப்புக் கூட ஏற்படவில்லையாம்.

இவ்வண்டியை எப்படி வெளியே எடுப்பது என்பது பற்றி தீயணைப்புப்படையைச் சேர்ந்த ஒருவர் மேலே நின்றவாறு திட்டமிடுகிறார். இருட்றக் வண்டிகள் மூலம் இவ்வாகனம் பத்திரமாக மீட்கப்பட்டது. ■

தகவல் பெட்டி

லியோ டெ

↓ இந்தக் குழந்தையை பயங்கர மீன் ஒன்று விழுங்குகிறதே என்று நீங்கள் பதற்றப்படுகிறீர்களா? அதுதான் இல்லை.

பெரிய மீன் ஒன்றின் வாயினுள் குழந்தைகளை வைத்துப் படம் பிடிப்பதற்காக பிளாஸ்டிக்கி னால் செய்யப்பட்ட மீன் தான் இது.

வெளிநாடுகளில் பெரிய மீன்கள் மற்றும் சில உயிரினங்களை பயங்கரமாக பிளாஸ்டிக்கினால் செய்து, அவை விழுங்குவது போலவும், கடிப்பது போலவும் படமெடுப்பது இப்போது அங்கு சர்வ சாதாரணம்.

'எத்தனை நாட்களுக்குத்தான் ஃபோட்டோவுக்கு சாதாரணமாக நின்று போஸ் கொடுப்பது? கொஞ்சம் வித்தியாசமாக போஸ் கொடுப்போமே' என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

விழுங்கும் மீன்

துதிக் 'கை' வண்ணம்

← யானைகளுக்கு அருகே நிற்கும் அழகி அணிந்திருக்கும் ஆடை விசேடமானது. ஜெருசலம் நகரப் பூங்காவில் சமீபத்தில் நடந்த கண்காட்சியில் இந்த ஆசிய யானைகள் ஓவியம் வரைந்தன. யானைகளின் துதிக்கை வண்ணம் கொண்ட ஆடைகளைத்தான் இந்த அழகி அணிந்துள்ளார்

மர்லின் மன்ரோவின் முத்து மாலை

↓ படத்தில் இருப்பது உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நடிகையான மறைந்த மர்லின் மன்றோவினுடைய முத்துமாலை.

அவரது கணவர்களில் ஒருவரான பேஸ் போல் வீரர் ஜோ டிமாகியோ 1954ம் ஆண்டு மார்லினுக்கு அளித்த தேனிலவுப் பரிசு இது.

அண்மையில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த நகைக் கண்காட்சியில் இந்த அரிய முத்துமாலை வைக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த மாலையின் பெறுமதி சுமார் 7 இலட்சம் ரூபாய்.

பால்ய விவாகம்

↑ இந்தியாவில் பால்ய விவாகம் 'சாரதாச் சட்டம்' மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் ஒன்றும் தெரியாத பாலகர்களை திருமணப் பிணைப்பில் இணைத்து வைக்கும் நடைமுறை இன்றும் நடக்கத்தான் செய்கிறது.

இங்கே ஆறு வயதான ராதா பத்து வயதான சுந்தருக்கு மணமகளாக இணைத்து வைக்கும் காட்சியே பார்க்கிறீர்கள். "ஓடியாடி விளையாடித் திரிந்த என்னை இங்கே கொண்டு வந்து வைத்து என்னென்னமோ செய்கிறார்களே!" என்று அக் குழந்தை வாய்விட்டு அழுவதையும், வயோதிய மாது ஒருவர் இந்தக் காட்சியைப் பார்த்து மணப் பெண்ணின் பின்புறமாக நின்று இரசித்துச் சிரித்து மகிழ்வதையும் பார்க்கிறீர்கள்.

மணமகனின் வலது கையில் மணமகளின் வலது கை பிணைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். இந்தியாவின் வடமேற்கு மாநிலமான ராஜஸ்தானில் ஜோட்பூர் நகரின் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் அண்மையில் இந்தப் பால்ய விவாகம் நடைபெற்றுள்ளது. ■

முரளி-ஜோதிகா நடிக்கும் 'கந்த வேல்'

சென்னையில் இருக்கும் மிகப் பெரிய திரையரங்கமான உதயம் கொம்பினேக்ஸ் உரிமையாளர்களில் ஒருவரான என் தாராயணபிள்ளையின் பேரன் விஜய் பிரபு படங்களை விநியோகம் செய்தவர். இவர் முதன் முறையாகத் தயாரிக்கும் படம் கந்தவேல்.

இதில் முரளி-ஜோதிகா ஜோடியாக நடிக்கிறார்கள். இவர்களுடன் ரகுவரன், வடிவேல், அபிதா, ஸ்ரீமன், மனோரமா, சரண்ராஜ் உட்பட பலர் நடிக்கின்றனர்.

கவியரசு வைரமுத்து பாடல்களுக்கு தேவா இசையமைக்கிறார். ஒளிப்பதிவு விஜய் மில்டன்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் புதுவரவான ரூக் குமு. இவர் வியாகத் அலிகான், ஆர்.கே.செல்வமணி ஆகியோரிடம் இணை மற்றும் துணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

கே.எஸ். ரவிக்குமார் சொன்ன கதை கேட்டு அருண்குமார் கண்ணீர்

தென்னிந்தியாவின் மிகப் பெரிய [illegible] இயக்குநராக இருப்பவர் கே.எஸ். ரவிக்குமார். அவர் ஒரு பெரிய நடிகை [illegible] மிகப் பெரும் செலவில் ஒரு படத்தை தயாரித்து இயக்கவிருந்தார்.

அந்தப் படத்திற்காக இசையமைப்பாளராக அறிமுகமாகியிருக்கும் அருண்குமாரிடம் பாடல் பதிவின்போது, கதையை உணர்ச்சிபூர்வமாகக் கூறிக் கண்கலங்க இப்படத்தான் பாடல்கள் வேண்டும் என்று சொல்லி [illegible] சொன்னபடி ரவிக்குமார்.

அதைக் கேட்ட அருண்குமார் தேம்பித் தேம்பி அழுதார். தனது வாழ்க்கையில் நடந்த மாதிரியே அந்தக் கதை இருப்பதை அறிந்த அருண்குமார் அழ, தனது கதை அந்தளவு பாதிப்பை ஏற்படுத்தி [illegible] என்று நினைத்து ரவிக்குமார் மகிழ்ந்தார்.

இந்த சுவாரசியச் செய்தியால் பேசப்பட்ட படத்திற்காகப் பாடல்களை இசையமைப்பாளராக அருண்குமாரும் இயக்குநராக கே.எஸ். ரவிக்குமாரும் நடித்தனர்.

பிரகாஷ்ராஜ்–சுஹாசினி நடிக்கும் 'உன்னில் என்னைக் கண்டேன்'

'நந்தினி' படத்தை அடுத்து பிரகாஷ்ராஜ்-சுஹாசினி இணைந்து நடிக்கும் படம் 'உன்னில் என்னைக் கண்டேன்'. இதை ரோயல் சன்யு என்ற புதிய நிறுவனம் தயாரிக்கிறது.

இப்படத்தில் பிரகாஷ்ராஜ்-சுஹாசினியுடன் நவீன், மந்த்ரா, கமிதா, ராம்ஜி, சங்கீதா, மாஸ்டர் மகேந்திரன் உட்பட பலர் நடிக்கின்றனர். மணிசர்மா இசையமைக்க, ரவீந்திரன் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தை சுரேஷ் என்ற புதியவர் இயக்குகிறார்.

கன்னையே உலகமாக எண்ணி [illegible] வரும் இளைஞனைக் கிறுக்கி, அவனது பலவீனங்களை ஒதுக்கி, பலங்களைக் கட்டுக்காட்டி நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் ஒரு பெண்ணைப் பற்றிய கதைதான் இப்படத்தின் கரு.

அஜித் எடுக்கும் அவதாரங்கள்

'வாலி' படத்திற்குப் பின் தனக்கு [illegible] போடும் வாய்ப்பைத் தடுக்கும் அரசியல் படத்திற்குப் பின் விக்கியாகாமல் [illegible] கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார்.

அண்மையில் இவர் நடித்த 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' என்னை கொடு உன்னைக் தருவேன்' ஆகிய இரு படங்களும் வெளியாகின. இறுதியில் 'என்னை கொடு உன்னைக் தருவேன்' சறுக்கி விட்டாலும் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' வெற்றிபெற்றுவிட்டது.

பல கதைகளைக் கேட்டு அதிக [illegible] கொண்டுள்ள படங்களில் ஒன்று தான் 'சிட்டிபாபு'. இதில் அதிக முதல் முறையாக [illegible] அகலில் நடிக்கிறார். இதில் [illegible] கடுமையான நிறைந்த [illegible] அம்சம்.

இதுவரை உலகமுழுவதும் ஒரே [illegible] வருமானவரிகளில் ஒன்றான [illegible] ஒரு [illegible] முதலுபெற்ற [illegible] படத்தில் கலந்து [illegible] அதிகமாக [illegible] அகலில் [illegible] செய்துள்ளார்.

[illegible] உதவியாளராக இருந்த [illegible] என்ற புதியவர் இயக்க, 'வாலி', 'முகவரி' [illegible] படங்களைத் தயாரித்த [illegible] சூர்யா [illegible] இப்படத்தைத் தயாரிக்கிறார். இது [illegible] ஆயுதத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சின்னத் திரையிலிருந்து பெரிய திரைக்கு

[illegible] இயக்குநர் [illegible] சிவாஜி [illegible] சந்திரலேகா மீனாட்சி [illegible] தயாரித்த [illegible] தொடரைக் [illegible] தொடரை மிக விறுவிறுப்பாக இயக்கியவர் தாகா.

ஒளிப்பதிவாளராக அறிமுகமான தாகா, முதன் முதலாக அமிதாப்-ஜூஹி சாவ்லா நடித்த 'கிஸ்கி கே யாரத் கே' என்ற இந்திப் படத்திற்கு உதவி ஒளிப்பதிவாளராகப் பணியாற்றினார்.

மீனாட்சி பாலாசந்தரின் சிவாஜிராவ் தொடர்களுக்கு ஒளிப்பதிவாளராக இயக்குநரானார்.

இவர் இப்போது பெரிய நிறுவனங்கள் படமெடுக்க இயக்கும் ஆக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளார். இப்படங்களை [illegible] தயாரிக்கிறார்.

முதல் பாடல்

அமர்க்களம் படத்தில் சிரித்துக் கொண்டே பாட என்று தொடங்கும் பாடலை ஷாலினியைக் கொண்டு பாட வைத்தவர் அமர்க்களம் இயக்குநர் சரண். இவர் இப்போது பிரசாந்த் நடிக்கும் [illegible] படத்தை இயக்கி வருகிறார். இப்படத்திற்காக அனாமிகா பிரசாந்தைக் கொண்டு ஒரு பாடலைப் பாட வைத்துள்ளார்.

'ஹா எனது உலகம்
நான் மனதில் வருதேன்
நாளையிரவு வருடம் வாழ
நான் ஆசை கொண்டேன்'

என்ற கவிஞர் வைரமுத்துவின் பாடலை பாடகர் இளையராஜா பாடினார். பிரசாந்த் சினிமாவுக்காக பிரசாந்த் சொந்தக் குரலில் பாடிய முதல் பாடல் இது என்பது தனிப் பிரத்தியேகம்.

அம்மன் வேடத்தில் மீனா

[illegible] முதல் முறையாக அம்மன் வேடத்தில் நடிக்கும் படம் [illegible] அம்மன். இதில் மீனாவுடன் [illegible] உள்ளனர். [illegible] அம்மன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

[illegible] இயக்க [illegible] ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்கதை, வசனம் அமைத்து படத்தை இயக்கி தயாரிக்கிறார் [illegible] நாராயணன்.

[illegible] அம்மன் படத்தில் அம்மன் வேடம் [illegible] மீனா [illegible] என்ற படத்தில் [illegible] அம்மனாகத் தோன்றுகிறார்.

காதோடு சொல்லுகிறோம்

இளம் நடிகர்களோடு கலைச்சேவை செய்ய வெளிநாடு சென்ற கதாநாயகி கோட்டை கட்டிய நடிகை. போன இடத்ில் பண்ணிய கொள்ளை தாங்க முடியவில்லையாம். திகுதகிளை ஏற்பாடு செய்த இளம் நடிகரின் தங்கைக்கு நடிகையால் டென்ஷனின் உச்சத்திற்கு சென்று விட்டாராம்.

விவேகமான நடிகருடன் இணைந்து நடிக்கக் கூடாது என்று சரண்யா நடிகைக்கு உத்தரவு போட்டாராம் மதுரையைச் நடிகர். இந்தாளோ படிப்பறிவு வேட்டுது. இதுல மக்களுக்கு கூட நடிக்க கூடாதுன்னு ஆட்டா வேற போடறாரு' என்று கேலி பேசுகிறாராம் நடிகை.

இளம் நாயகனுக்காக 'அலைபாயுதே' நாயகனின் மனைவிகள் பதில் எழுதுகிறாராம். பதில் எழுதும் போது என் கணவரின் தங்கைக்கு' என்று அடைகொடுத்துதான் எழுதுகிறாராம் நாயகனின் காதல் மனைவி.

மூன்றெழுத்து இளம் ஹீரோவை உயிர்த்துயிராகக் காதலிக்கு வருமாவில் தொடரும் தான்கெழுத்து நடிகை கைவசம் இருக்கும் படங்களை எல்லாம் அவசரமாக முடித்து வருகிறாராம். அத்துடன் புதிய படவாய்ப்புகளையும் மறுத்து விடுகிறாராம். காரணம் பிறகென்ன வினாவில் காதலியாவதாக எய்ப்பிக்கத்தானாம்.

ரோஜா
படம்: தான்தான்டா பிரகாஷ்

பிரபு நடிக்கும் 'பட்ஜெட் பத்மநாபன்'

'மின்சாரக்கண்ணா', 'சந்திரன்' உட்பட பல படங்களைத் தயாரித்த கே.ஆர்.முவிஸ் இண்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'பட்ஜெட் பத்மநாபன்'.

பிரபு கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடிகளாக ரம்யா கிருஷ்ணன் மற்றும் ரம்யா நடிக்கிறார்கள். இவர்களுடன் விவேக், வையாபுரி உட்பட முன்னணி நட்சத்திரங்கள் பலர் நடிக்கின்றனர்.

எஸ்.ராஜகுமார் இசையமைக்கும் இப்படத்தின் கதையை அருணாச்சலம் எழுத, பிரசன்னகுமார் வசனம் அமைக்கிறார். திரைக்கதை அமைத்து இயக்குகிறார் பூபதிசேதுராமன். இவர் பிரபு-ரம்யா கிருஷ்ணன் நடித்த 'நல்ல காலம் பொறந்தாச்சு' உட்பட 'மிஸ் மலைவி மக்கள்', 'பெண்களை விடுங்கள்' போன்ற படங்களை இயக்கியவர்.

சென்டிமென்ட் கலந்த கலகலப்பான குடும்பக்கதையாக உருவாகும் 'பட்ஜெட் பத்மநாபன்' ஒரு நடுத்தர குடும்பப்படமாம்.

விருதுக்காக 'நிலாக்காலம்'

அரவிந்தசாமி-மாதுரி டிக்ஷித் நடித்து பாலிவுட்டில் வெற்றி பெற்றிருக்கும் 'என்ரிஜியர்' படத்தை இயக்கினவர் சந்தோஷ் சிவன். இயக்குநர் ஆஷுதோஷிடம் உதவியாளராக இருந்த இவரது முதல் படமான 'என்ரிஜியர்' படம் வெளிவராத நிலையில் அடுத்த படத்தை இயக்க ஆரம்பித்து விட்டார்.

'நிலாக்காலம்' என்ற பெயரில் சந்தோஷ் சிவன் இயக்கும் இப்படம் விருதுக்காக உருவாகிறது. இதில் பிரபுதேவா-ரோஜா ஜோடியாக நடிக்கின்றனர். தமிழ் போலீஸ் அதிகாரியான ஏ.ஸ்.பி. தேவராக இப்படத்தில் ஒரு முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

மீரசாந்த்-லைலா
படம்: பார்த்தேன் ரசித்தேன்

திரையுலக மாமாங்கம் (153)

காதலுக்காக படவாய்ப்பை இழந்த நடிகை

தமிழில் அஜகான சாமி நடிகருக்கு ஜோடியாக 'பொக்கிஷம்' என்ற பொருள் வரும் படத்தில் அறிமுகமானார் இந்த வடநாட்டு இறக்குமதி நடிகை.

முதல் படம் தோல்வியடைந்தபோதும் நடிகையின் அழகு, நடிப்பு மற்றும் தாராளமாய் கொடுக்கக்கூடிய அங்கங்களுக்கு இரண்டாவது படவாய்ப்புகள் வந்தன.

இந்த நடிகையிடம் ஒரு குணம் உள்ளது. அகால கோடுகளை வரையறுக்கொண்டு நடிப்பவர்கள் இவர் தவிர்த்து மிகுதி நடிகைகள் தான் அப்படத்தில் நடிக்கச் சம்மதிப்பார். இல்லையேல் நடிக்க மாட்டார். முதல் படத்திற்கு பின் நான்கு நடிகர்களுக்கு ஜோடியாக நடிக்க ஒரு படத்தில் ஒப்பந்தமானார்.

இந்தக்கால அவர் தியாகராய மனிஷா என்று பத்திரிகைகளால் புகழப்பட்ட இவர், வெண்ணையால் வாய்க்கு பழமை போல் இருப்பார். நடிப்பு என்பது அவரிடமிருந்து கொஞ்சம் தூரமாகவே வரும் படப்பிடிப்புக்கு ஒழுங்காக வரமாட்டார்.

இவரிடம் சொல்லும் இயக்குநர்கள் இவரது முகபாவனைகளை விடக் கடுக்குக்கு மேலும் கால்கள் மேலும் உள்ள உறுப்புகளைக் கேமிரா வைக்கவே விரும்பினர்.

நான்கு நடிகருடன் அனாச்சாரமாக நடந்து கொண்டதால் அவர் காமுகமாக வரும் போதெல்லாம் நடிகரால் நடிகையைத் தட்டிக் கேட்க முடியவில்லை. அந்தப்படமும் தோல்வியைத் தழுவ நடிகை தெலுங்கிற்குப் பறந்தார்.

தெலுங்கில் நடிகையின் கட்டான உடலையும் கவர்ச்சியான தோற்றத்தையும் கண்டு. அங்குள்ள முன்னணி நாயகர்கள் தான், நீ என்று நடிகையைத் தமது ஜோடியாக படங்களில் நடிக்கச் சிபாரிசு செய்தனர்.

தெலுங்குத் திரையுலகம் வாய்ப்புகளை வாரி வழங்க அந்த முன்னணி நாயகியாக வலம் வந்தார் நடிகை. அத்துடன் அங்கு பெரிய பெரிய நடிகர்களின் அரவணைப்பும் நடிகைக்குப் பக்கபலமாக இருந்தது.

இந்தநேரத்தில் கோகுலத்தில் வாசம் செய்யுத மாயக்கண்ணனின் பெயரைக் கொண்ட முத்த தெலுங்கு நடிகரின் மகன் இளம் நாயகனாக தெலுங்கில் அறிமுகமானார். நடிகையுடன் ஏற்பட்ட பழக்கத்தால் மகனுடன் நெருங்கிய பழக ஆரம்பித்தார் நடிகை.

மகன் நடித்த அடுத்த தெலுங்கு படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க நடிகை ஒப்பந்தமாகி. இந்த வருகிடையிலான நெருக்கம் இன்னும் இறுக்கமானது.

நடிகையின் காதல் விஷயம் அந்த அரசியலிக் கொண்டிருந்த நேரத்தில். தமிழில் ஏழு நிறங்களை ஒன்றாகப் பார்க்கக் கூடிய படம் தொடங்கப்பட்டது. இதில் நடிக்க ஜோடியாக அந்த நடிகையைப் பேசியபடி கேட்டுக் கொண்டார் மகாபாரதக் கதையில் வரும் விஷ்ணுவும் பெயர் பொலவரில் நாமகரணம்கொண்ட நடிகர்.

நடிகையைத் தமிழில் நடிக்க இயக்குநர் அணுகினார். இதன் முன் தமிழில் மறுபடி வரமாட்டேன் என்று நடிகையும் முதலில் மறுத்துக்கொண்டார்.

தமிழில் நடிக்க வந்த நடிகைக்கு நடிகரின் அணுகுமுறைகளும் தெலுங்கில் காதலனை விட்டு பிரிந்து இருப்பதும் நடிகைக்குப் பிடிக்கவில்லை. உடனே நடிகை ஆந்திராவுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் பறந்து விட்டார்.

நடிகையின் குறுமுயற்சிகளைத் தெரிந்து கொண்ட இயக்குநர் எப்படியும் திருமணமாவார் என்று கொஞ்ச நாள் பொறுத்திருந்தார். இளம் நாயகனுடன் நடிகை கொட்டமடித்துக் கொண்டிருந்தால் அவர் திருமணமாட்டார் என்று இயக்குநருக்கு வேறுபடியாகக் கூறியுள்ளனர். உடனே அந்தத் தமிழ்ப்படத்தில் மலையாள நடிகை ஒருவரை நடிக்க வைத்து விட்டார்.

சின்னத்திரையில் வார்த்தைச்சித்தர்

அது அந்தக்காலம் படத்தை அடுத்து வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான் சின்னத்திரைத் தொடர் ஒன்றில் நடிக்கிறார். சகலகலாவல்லவரான ஜான் 'அம்மா' என்ற தொலைக்காட்சித் தொடரிலே வக்கீலாக நடிக்கிறார்.

சங்கீதா (ரசிகர்)
படம்: சென்ட் ஜேவியர்

பளுவேற்றப்பட்ட வாழ்க்கை

அமர்ந்து இளைப்பாறும்
நிலா முற்றங்களெல்லாம்
நிலைபெயர்ந்து போயின!
***
எனது துயரை நீ உணர்ந்து
துடிப்பதற்காகவோ,
எனது பெயர் சொல்லும் வேளை
துயரமிகு சிந்தனையுள்–நீ
சிக்கித் தவிப்பதற்காகவோ
நான் எழுதவில்லை!
***
தலைவிதியும், தொழிலிடமும்
வெப்பமும் தூசும் நிறைந்த
நகரத்தின்
நூற்றும் பிடித்த வீதிகளில்
எனைப் பயணிக்க வைத்துள்ளது!
***
தினமொரு காலைப்பொழுதில்
புறப்படும் போதும்
காணுகின்ற முகங்களிலிருந்தெல்லாம்
புன்னகை பறிக்கப்பட்டிருக்கும்;
எனைப் போல
எந்தத்துயரில்
அதிர்ந்த முகங்களோ அவை!
***
அங்கே நான் விட்டு வந்த வாழ்வின்
ஆனந்தங்கள் மேவிட
இங்கே வாழ முடியவில்லை!
நான் கூட வாழ்வின் அழுத்தங்களில்
புன்னகையை மறந்துபோனேன்!
***
உனது தேசத்தில்
பயமும் பீதியும்
புகைபோலக் கவிழ்ந்திருந்தபோதும்
உனது வாழிடங்கள்
எவ்வளவு அழகுமிக்கவை!
கிழக்கே,
வங்கக் கடலில் குளித்த சூரியன்
கதிர் வீசியெழும்;
மேற்கே,
மஞ்சள் வெயில்
இறங்கி விளையாடும்
வயல் வெளிகளில்
கவிதை எழுதியபடி
பொழுது சாயும்!
பளிங்கு போன்ற நீரருந்தி...
பூவாசம் சுமந்த காற்றை முகர்ந்து
வாழ்வை அணுவணுவாய்ச் சுகித்திட
வசந்தமும் மாரியும்.
தன் பாட்டில் வந்து போகும்!
***
இங்கே,
மனிதரல்லாத மனிதர்களோடும்
வாழ்தலுக்காய்ப் போராடி
அதனிடையே
காதலும், யுத்தமும்
களியாட்டங்களும் என
அன்றாடம் கதைபேசும்
அட்டுப் பிடித்த ஊடகங்களின்
கிரைச்சல்களிடையேயும்
எனது சுவாசம் அவதிப்பட்டாலும்
உன்னையும் சுவர்களையும்
மறக்காமல் நினைத்திருப்பேன்!
***
இந்தத் தலைதடுமாறிய
வாழ்வை விட்டு வெருண்டோட
எனக்கும் ஆசைதான்!
என்றாலும்
நான் வெளியேறத்துடிக்கும்
எல்லா வாயில்களின் பின்னாலும்
எத்தனையோ தடைகள்
காத்திருக்கின்றன!

பஹீமா ஜஹான்–மெல்சிரிபுர

கவிதை வரும்

ஆண் பெண்
காதலில்தான்
கவிதை வருமா?
கண்ணீர் வடித்துப்பாருங்கள்
கவிதை வரும்
காதலுக்காக அல்ல.....
***
தாய்நாட்டின்
தலைகீழ் நிலைக்காக
தனித்திருந்து
தவியுங்கள் .....
கவிதை வரும்!
***
வாழ்வா
சாவா–என்று
வான் வெறிக்கும்
வாலிபர்களுக்காக
வருந்துங்கள்.....
கவிதை வரும்!
***
ஏமாற்றமும்
எதிர்பார்ப்பும்
எதிர்காலமான
ஏழைகளை
எண்ணிப் பாருங்கள்....
கவிதை வரும்!
***
அறியாத பிஞ்சுகளை
அடிமைப்படுத்தும்
அடிமுட்டாள்களின்
அரக்கக் குணங்களுக்காக
அழுங்கள்.....
கவிதை வரும்!
அலைக்டலாக
ஆர்ப்பரிக்கும்
ஆசைகளை
அடக்கி வைத்து
மௌனங்களை
மொழிபெயர்க்கும்
ஜமைகளுக்காக
உருகுங்கள்....
கவிதை வரும்!
***
இன்னுமினனும்
என்னென்னவோ
அதற்கெல்லாம்
அகத்தில் ஈரம்
சொட்டுங்கள்....
கவிதை வரும்!
***
கவிதையின்
கரு காதல்–என்று
கருதினால்–அது
கழுதைக்குக் கூட
வரலாமே.....
***
எந்தன்
வாழ்வான வேதனை
யாருக்கும்
சோதனையாக
வேண்டாம்–என்று
பிரார்த்திப்பதால்
கவிதை வரும்
வலிழியை–நீங்கள்
யாருமே அறிந்து விட
வாய்ப்பேதுமில்லை!
காதலைத்தவிர.....

என்.பி.சி–உடப்பு.



தேன் கிண்ணம்

தினமுரசு தானழுமா?

காணிகிரண்டு விற்று
ஏழுலட்சம் ஏஜன்சிக்கு.
எட்டுமாதப் பயணத்தில்
நான் பட்ட அனுபவம்....
காடு மலையென்று
நடைபாதையாய் நடந்து....
பசி தாகம் என்று கேட்டால்
அடி தடி கத்திக்குத்து!
தண்ணிகுடிப்பதென்றால்
குளம் குட்டையில்குனிந்து
ஆடு மாடு குடிப்பதுபோல்
அடி கூட எடுத்துவைக்க
முடியாமல் ஒரு பிள்ளை
செத்து மடிந்ததையோ
யார் பெற்ற பெண்ணோ
சாக்கினால் மூடிவிட்டு
தொடர்ந்து சென்றோம் பயணத்தை!.
நம் தமிழனால் கூட
கொடுமையிலும் மிகக் கொடுமை.
அவன் பாவம் என் செய்வான்?
கை நீட்டி வேண்டியதோ
ஆகக்கூட ஏழுலட்சம்
என் பிள்ளை எங்கே என்றால்,
"அனுப்பிவிட்டேன்" என்று சொல்வான்.
இடையிலே நடந்ததை
அன்னைக்கு யார் சொல்வார்?
தங்க உறங்க வென்றால்
கோழிக்கூடு பன்றிக் கொட்டில்
எப்படியோ போய்ச் சேர்ந்தால்
போதுமடா என் செய்வோம்?
போலிஸ், வருகுதென்றால்
அவன் பாய்ந்து தப்பிக் கொள்வான்.
இரண்டு மூன்று மாதம்
ஜெயில் வாழ்க்கை போதுமடா.
வெளியிலே வந்து விட்டால்
எமக்கிங்கே யாருண்டு?.
எப்படியோ வந்து
ஜேர்மனியில் சேர்ந்துவிட்டோம்.
இடையிலே பட்ட பாட்டை
யாருக்கு யார் சொல்ல?
அங்கேயும் ஒரு வருடம்
நோர்வேயில் இருவருடம்
உடனடியாக வெளியேற உத்தரவு
இரவோடு இரவாக;
கொலண்ட் வந்த சோந்து விட்டேன்.
யார் முகமும் தெரியாமல்
அகதி முகாமிலே;
கால் மேலேகால் போட்டு,
"அம்மா பசிக்கு தென்!"பேன்
இப்போ,
ஒரு வேளை உணவுக்கு
கியூவிலே நிற்கிறேன்.
நான் படும் பாட்டை
என் அன்னை அறிய வேண்டாம்.
கொலண்டிவும் றிஜெக்ட் என்றால்,
நான் இனி எங்கு போவேன்?
ஏழு லட்சத்தை;
எப்படி நான்தேட?
எனக்காக யார் அழுவார்?
தினமுரசு தானழுமா?

(பாபு) சசிதானந்–நெதர்லாந்து.

என் கதி என்ன?

சிறு வயதில் என்னோடு சேர்ந்து
மணல் வீடு கட்டினாய்!
பாடசாலை செல்லும் போது
பராக்குக் காட்டினாய்!
நான் பருவமானதும் வீட்டிற்கு
வராமல் விட்டாய்!
நாட்கள் சில கழிய கடிதமும்
அனுப்பி வைத்தாய்!
நான் அதிர்ச்சியுற்ற போது
அது காதல் என்று தெரியவைத்தாய்!
நான் பெற்றோருக்குப் பயந்த போது
சாத்திரங்கள் பேசினாய்!
நான் மறுத்த போது விஷத்தைக்
காட்டி பயமுறுத்தினாய்!
மூன்றாம் நபருக்கும் தெரியாமல் நம்
காதலை வளர்த்து விட்டாய்!
படிப்பை முடித்து விட்டுப் பணந்தேடப்
பறந்து சென்றாய்!
தினம் தினம் உன்னையே நினைத்திருக்க
எனை வைத்தாய்!
வருடங்கள் செல்லச் செல்லப் பெண்
பார்க்க
பெற்றோருக்கு அறிவித்தாய்!
பண வசதி படைத்த அழகான பெண்
பார்க்கச் சொன்னாய்!
உன் எண்ணப்படி போடி மகள்
காஞ்சனாவை மணந்தாய்!
என்னிடம் பணம் இன்மையால்
என்னை தூக்கினாய்!
இத்தனை வருடம் உனக்காய்
காத்திருந்தேனே!
என் கதி என்ன?

க.பிரசனாதேவி–திருக்கோவில்.

ஊமை உள்ளம்

கண்களில் வலியிருந்தால்,
கனவுகள் வருவதில்லை;
காலங்கள் புரிவதில்லை;
காலை எழுந்தவுடன்–நாளைய
தேவைபற்றிச் சிந்திக்கும்,
மனித நெஞ்சங்களிற்காக,
காத்திருப்பதில் அர்த்தமில்லை.....!
***
காலம், நம் கண்முன்னே.
கதவு திறந்து, கம்பளம் விரித்துக்,
காத்திருந்தாலும்,
முன்னேற முடியாது தடுக்கிறது காதல்.....!
***
கேவிக்கேவி அழுது,
கேட்பாரற்ற கேணியானதால்,
வரண்டு போன கண்ணீர்பற்றியோ,
சுருண்டு போன வாழ்வு பற்றியோ,
இனிக்கவலை இல்லை.....!
***
கேவியழுவதால் மட்டும்
கேவல்கள் என் கேள்விக்கு, விடையாகுமா
என்ன?
நடந்தவை நடந்தவையாகவே
இருக்கட்டுமென்றாலும்,
இனி நடக்க இருப்பவை
நமக்குப் பயனறறவை.
கிடக்கட்டும்.....!
***
முயன்ற இறப்புகளே, முடிவு
தெரியாது சென்றால்,
இனி முடிந்த வாழ்வுக்காக
கவலை கொள்வதில்
அர்த்தமேயில்லை.....!

எல்.குமரன்–திருகோணமலை.

பேனா நண்பர்கள்

பெயர்: ஜே. சதாத்
வயது: 18
முகவரி: நொக்ஸ் வீதி,
மூதூர்–06
திருகோணமலை
பொழுது போக்கு:
கிரிக்கெட், வானொலி.

பெயர்: ரி.மஞ்களா.
வயது: 24
முகவரி: கலைவாணி
அரங்குவீதி, புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி

இந்தவாரம் உங்கள் பலன்

25.06.2000 முதல் 01.07.2000வரை

ஜோதிடர் 'கானா'

மேடம்:
நன்மையான திருப்பங்கள் ஏற்படும். பெரியார்களின் ஆசிர்வாதமும் உதவியும் கிட்டும். கல்வி முயற்சிகள் நன்றாக அமையும். தூரதேசத் தொடர்புகள் ஏற்படும். மகரராசிக்காரரால் நன்மையுண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 26, 28

இடபம்:
மந்தமான நிலை மாறும். உடல் நிலை பலசிக்கலில் மாட்டிக் கொள்ளப்பார்க்கும். மனைவி வழி உறவினர்களால் உதவிகள் கிட்டும். பெரிய இடத்து நன்மைகள் சில ஏற்படும். மீனராசிக்காரர் உதவிசெய்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 27, 30

மிதுனம்:
தொழில் தடைகள் விலகும். புதிய முயற்சிகள் தொடங்கும். திருமணப் பேச்சுக்கள் வந்து போகும். திருவாதிரைக்காரருக்கு ஏதேனும் நல்ல முடிவுகள் வரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 26, 1

கடகம்:
பொருள் பண வசதி உறவினர்களால் கிடைத்தபடி அமையும். முக்கிய நிகழ்ச்சிகளில் பங்களிப்பு செய்வது காணப்படும். இரும்புதுறை தொழில் செய்வோர் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 25, 27

சிம்மம்:
இடமாற்றங்கள், தொலைதூரப் பயண வெற்றிகள். தொழில் விடயங்கள் விரைவு பெறுதல் ஆகியவற்றுக்கு இடமுண்டு. காதல், திருமண விடயங்களில் ஒரு முடிவு எடுக்கப்படும். சிக்கல் நிலை விடுதலை கிடைக்கும். மகரநட்சத்திரருக்கு நன்று.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 28, 1

கன்னி:
குடும்பத்தில் கணவரின் உதவிகள் தொடரும். கல்வி பரீட்சை தொழில் இலாபமாக கிடைக்கும். சகோதரர்களின் உயர்வு நன்றாக இருக்கும். திடீர் பணவரவு அமையும். அத்த நட்சத்திரருக்கு நன்மையான பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05
அதிஷ்ட திகதிகள் : 26, 30

மகரம்:
கடன் பிரச்சனைகள் முடிவுறும். திடீர்ப் பயண முயற்சிகள் கைகூடும். கால கடந்த முடிவில்லாத பிரச்சனைகள் என்பன தீர்வுபெறும். ஸ்தலயாத்திரையும் தொழில் முயற்சியால் நல்லபலனும் கொடுக்கும். திருவோணக்காரருக்கு நல்லகாலம்.
அதிஷ்ட நாட்கள் : புதன் வியாழன்
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 27, 30

கும்பம்:
வெளியாட்களின் தலையீடுகள், பல்வேறுபட்டபிரச்சனைகளால், செலவுகள் வரும். மாறுபட்ட நிலையினால், கவனமாக கருமவிடயம் நிகழ இடமுள்ளது. உடற்பாதிப்பு மருந்துவச்செலவுகள் ஏற்படும். அவிட்டப் பெண்கள் கெட்டபெயர் கேட்பார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 25, 29

மீனம்:
கல்வி, ஊக்கமளிக்கும். வெளியிட மனிதர்களின் உதவி கிடைக்கும். பரீட்சை, எடுத்தமுயற்சி, நன்மையளிக்கும். வெளிநாட்டுப் பிரயாணம் வெற்றியாகும் கடன்பட்ட நிலை மாறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 26, 30

துலாம்:
இருக்கும் இடத்தில் கஷ்டங்கள், சோர்வுகள் வந்து போகும். குடும்பத்தில் பிரச்சனைகளை முகம் கொடுக்க வேண்டிய நிலைவரும். பண, கல்வி, தொழில்நிலைகளில் நெருக்கடிகள் தொடரப்பெறும். முன் ஏச்சரிக்கையாக இருக்கவும், விசாக ஆண்களுக்குப் பலன் நன்றல்ல.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 27, 29

விருட்சிகம்:
மாறுபட்ட நிலை விடுபெறும். பணபொருள் வசதிகள் விருத்தி பெறும். திருமண நிச்சயம் நடைபெறும். கடன் பிரச்சனைகள் பைசலாகும். திடீர்ப் பயணங்கள் வெற்றியைக் கொடுக்கும். கேட்டைக்காரருக்கு பயணவெற்றி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 24, 28

தனுசு:
காலபலன் மாற்றத்தினால் தடைகள் மாறி சிறு மாற்றத்துடன் செல்லும். பெண்களுக்கு செலவு நோய் துன்ப அமைப்பு வந்துபோகும். மாமன்வழி உதவிகள் வந்துசேரும். கடகராசிக்காரரால் நன்மைகள் சேரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 25, 28

நில்–கவனி–முன்னேறு



ஆர்வத்துடன் செயல்படாதவர்களுடைய வாழ்க்கை கோடை காலத்து வறட்சியைப் போன்று அமையும். அப்படிப்பட்டவர்கள் சுதந்திரம் சிறிதும் இல்லாத சிறைக் கைதிகளைப் போன்று அருவருக்கத்தக்க வாழ்க்கை வாழ்ந்து வருவார்கள். சூன்யத்தில் வாழ்ந்து வருவதைப் போன்றசலிப்பு நிறைந்த வாழ்க்கை தான் இவர்களுக்குக் கிட்டும்.

ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளாதவர்கள், பாசி நிறைந்த குட்டையில் ஊறிக் கிடக்கும் மட்டையைப் போன்று வாழ்ந்துவருவார்கள்.

ஆர்வத்துடன் வாழ்ந்து வருவதைப் பழக்கமாக ஏற்படுத்திக் கொண்டவர்கள் தாங்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலையிலேயே நிறைய மகிழ்ச்சியைக் கண்டு உயிரத் துடிப்புடன் வாழ்ந்து வருவார்கள்.

தங்களுடைய முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்த போதிலும் கூடமனம் தளராமல் ஆர்வத்துடன் உழைத்து, தாங்கள் கண்ட தோல்விகள் அனைத்தையும் வெற்றிகளாக மாற்றிக் காட்டுவார்கள்.

ஆர்வத்துடன் செயல்படாதவர்களுடைய வீடுகளின் கதவுகளை முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் வலிய வந்து தட்டிய போதிலும், அவர்கள் உடனடியாக ஓடி வந்து கதவைத் திறக்காமல் அவைகளை நழுவ விட்டு விடுவார்கள்.

ஆர்வம் மிகுந்தவர்கள் தாங்களாகவே முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடிச் சென்று அவைகளை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றவர்கள் மதித்து போற்றும்படி தங்களை உயர்த்திக் கொள்ளுவார்கள்.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

குழந்தை உணவுகள்

சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு திட காத்திரமான உணவு வகைகளை ஊட்டி விட்டால்தான் அவை கொழு கொழு வென்று ஆரோக்கியமாக வளரும்.

இதற்காக நீங்கள் பின்வருவனவற்றைக் கையாளலாம்.

★ பாலை நன்றாக கொதிக்க வைத்து பாலாடையாக்கிக் கொடுக்கலாம்.

★ முட்டையை அரைவேக்காட்டில் அரை அவியல் (ஹாவ் பொயில்) போட்டுக் கொடுக்கலாம்.

★ காய்கறிகளை சூப் செய்து குடிக்கக் கொடுக்கலாம்.

★ பழச்சாறு தயாரித்துக் கொடுக்கலாம்.

★ உருளைக் கிழங்கு, கொண்டக்கடலையை அவித்துக் கொடுக்கலாம்.

★ இறைச்சி வகைகளில் ஆட்டு ஈரலை வேக வைத்துக் கொடுக்கலாம்.

★ தேனில் பேரீச்சம்பழத்தை ஊற வைத்துக் கொடுக்கலாம்.

கண்களின் புருவங்களும் பெண்களின் குணங்களும்

கண்களின் புருவங்களை வைத்துப் பெண்களின் குணங்களைக் கூறியுள்ளார்கள் சோதிட வித்துவான்கள். அவர்கள் கூறியதை நீங்களும் தான் உங்கள் புருவங்களுடன் ஒத்துப் பாருங்களேன்.

★ அடர்ந்த புருவம் உள்ள பெண் மிகவும் சிக்கனக்காரி.

★ மெல்லிய புருவம் உள்ள பெண் வாழ்க்கையில் உற்சாகம் இழந்தவள்.

★ கோடுகள் வரைந்தது போல் உள்ள பெண் பகட்டாக வாழ்வாள். இவளது உள்ளத்தில் கருணை இருக்காது.

★ வளைந்து அலை போல் இருப்பவள் எதிலும் தீவிரமாக இருப்பாள்.

★ நீண்ட புருவம் உள்ள பெண் எதிலும் தனித்தன்மை பெற்றுத் திகழ்வாள்.

★ குறுகிய புருவம் உள்ள பெண் முடிவுகளை எடுப்பதில் சாமர்த்தியசாலி.

★ மேலெழுந்தவாரியாக புருவம் உள்ள பெண் தீர்க்க சிந்தனை உடையவள். எதையும் சாதிக்கக் கூடியவள்.

பப்பாளியின் பயன்கள்

★ பப்பாளிப்பழத்தைத் துண்டுகளாக்கித் தேனில் தோய்த்துச் சாப்பிட்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும்.

★ பப்பாளிக்காயை உணவில் சேர்த்து வந்தால் உடல் மெலியும்.

★ பப்பாளிப்பழத்தைக் கூழாக்கி, முகத்தில் பூசி, ஊறியபின் கழுவி வந்தால் தோல் மென்மையாகும்.

★ பப்பாளி இலையை அரைத்து உடம்பில் ஏற்படும் சூட்டுக் கட்டிகள் மேல் தடவி வர கட்டிகள் உடையும்.

★ பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், உடலில் ஏற்படும் புண்களின் மேல் தடவினால் புண்கள் விரைவில் ஆறும்.

★ உலர்ந்த பப்பாளிப்பழத்தைச் சாப்பிட்டால் கல்லீரல் வீக்கம் குறையும்.

★ ப்பாளிக்காயில் கறிசமைத்துப் பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வந்தால் பால் சுரப்பு அதிகரிக்கும்.

★ பப்பாளி விதையை அரைத்துத் தேள் கொட்டிய இடத்தில் பூசினால் வலி விஷம் இறங்கும்

பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை HT

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

கையொப்பம்:.....

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01.06.2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1773, கொழும்பு.

வழங்குவது 43 புவனா

மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரன் சற்றுத் தொலைவிலிருந்த வண்ணம் மோனிக்காவை அடிக்கடிப் பார்த்துச் செய்த சைகைகளையெல்லாம் அவளுடைய தாயார் பார்த்துக் கொண்டேயிருந்தாள். வேறு யாராவது இந்தக் காட்சியை அவதானிக்கிறார்களோ என்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள். அவ்வாறு எவர் பார்த்தாலும் தன்னுடைய மகளுக்குத்தான் அத்தகைய சமிஞ்ஞைகளைக் காட்டுகிறார் என்பதாக எவரும் கருத மாட்டார்கள் என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

அமெரிக்க நாட்டின் அதிபர்-உலகையே ஆட்டிப்படைக்கும் ஒரு பெருமகன் தன்னுடைய மகள் மீது இத்தகைய பிரியம் வைத்திருக்கிறாரே, என்று மார்சியா உள்ளூர மகிழ்ச்சியடைந்தாளெனினும் 'இத்தகைய உறவு வரவேற்கத் தக்கதல்ல என்றும் நீண்ட காலம் நீடிக்கப் போவதில்லை', என்றும் எண்ணியவராக மனம் வெதும்பினார்.

வாஷிங்டனிலுள்ள கென்னடி மையத்தில் 1997 ஜனவரி மாதம் 53வது ஜனாதிபதியாக கிளின்ரன் பதவியேற்பது தொடர்பாக ஒரு விழா நடைபெற்றது. இதற்கென பல்லாயிரக் கணக்கான பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கிளின்ரன் தனது மனைவியுடன் வந்து அமர்ந்திருப்பதற்காகப் போடப்பட்டிருந்த மேடையிலிருந்து வெகுதூரத்துக்கப்பால் பெண்டகன் ஊழியர்களுடன் ஒரு சிறு தடுப்பின் ஓரத்தில் மோனிக்கா நின்றிருந்தாள்.

இந்த வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே கிளின்ரனுக்குப் பிடித்தமான நீலவர்ண ஆடையினை புதிதாகத் தேர்ந்தெடுத்து அணிந்திருந்தாள். அமெரிக்காவின் முதல் பெண்மணியான ஹிலரியுடன், அங்கு திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கையொலி வானைப்பிளக்க மேடையில் வந்தமர்ந்தார். அவ்வாறு அவர் அமர்ந்து கொண்டதும் மீண்டும் ஒரு தரம் எழுந்து நின்று மேடையின் மூன்று பக்கமும் திரண்டிருந்த மக்களைப் பார்த்து இரு கைகளையும் அசைத்தார். மக்களும் ஜெயகோஷம் எழுப்பிய வண்ணம் தங்கள் கைகளையும் அசைத்தனர்.

இத்தனைக்கும் மத்தியில் கிளின்ரன் மோனிக்காவைக் காணத் தவறவில்லை. அவளுக்காகவே பிரத்தியேகமாக தனது கையை அசைத்துக் காட்டினார். அத்துடன் மோனிக்காவுக்கு மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதாக தனது வாயைக் குவித்து, "உன்னுடைய உடையலங்காரத்தை நான் பெரிதும் விரும்புகிறேன்!" என்று குறிப்பிட்டார்.

முன்பெல்லாம் தனது உடலமைப்பைப் பற்றியும், தான் அணியும் உடைகள் பற்றியும் அடிக்கடி கவலைப்படுவாய் மோனிக்கா. ஹவாயிலிருந்து உடல் சற்று மெலிவடைந்து திரும்பியதிலிருந்து அவள் இத்தகைய கவலையை விட்டொழித்தாள்.

அவள் மெலிவடைந்து, பொருத்தமான உடையும் அணிந்து இருப்பதை தொலைபேசி மூலம் ஏற்கனவே கிளின்ரன் பாராட்டி இருந்தார். இதன் பின்னர் இப்பொழுதும் தனது உடையலங்காரம் கிளின்ரனைக் கவர்ந்திருக்கிறது என்பதனால் திருப்தியடைந்தார்.

புது வருடம் பிறந்ததிலிருந்து மோனிக்காவைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சி தரும் சம்பவங்களே நடந்து கொண்டிருந்தன. மீண்டும் வெள்ளை மாளிகைக்கே பணி புரிய வாய்ப்புக் கிடைப்பதற்கான சூழ்நிலையும் உருவாகிக் கொண்டிருந்தது. வெள்ளை மாளிகையிலிருந்து மோனிக்காவை அப்புறப்படுத்துவதற்குக் காரணமாகவிருந்த எவலின் லைபர் மேன் என்றமாது வெள்ளை மாளிகைப் பதவிலிருந்து விலகி, நியூயோர்க்கிலுள்ள 'வொயிஸ் ஒ.ப் அமெரிக்கா' (அமெரிக்காவின் குரல்) என்ற வானொலி வலையமைப்பின் தலைவியாக பதவியுயர்வு பெற்று செல்கிறார் என்று செய்தி அறிந்து அவளுடைய உள்ளம் குதூகலமடைந்தது.

ஜனவரியிலும் பெப்ரவரியிலும் வெள்ளை மாளிகைக்கு வரும்படி மோனிக்காவை இருதடவைகள் கிளின்ரன் அழைத்திருந்தார்.

பதவியேற்ற ஓரிருவாரங்களில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றமையினால் அவர்கள் இருவரும் முன்பு போல அதிக நேரம் அளவளாவமுடியவில்லை.

கிளின்ரனைச் சந்திப்பதற்காக பல அரச அதிகாரிகளும் பிறநாட்டுத் தூதுவர்களும் பிரமுகர்களும் சாரிசாரியாக வந்து கொண்டிருந்தனர். கிளின்ரனின் அந்தரங்கச் செயலாளர் பெட்டி கியூரியிடம் மோனிக்கா வந்ததும், அவர் உடனே மோனிக்கா வந்திருப்பதை கிளின்ரனுக்குத் தெரியப்படுத்தினார். அவரைப் பார்ப்பதற்கு ஓவல் அறையில் அப்போதிருந்தவர்கள் வெளியேறியதும் மோனிக்காவை உடன் தன்னிடம் அனுப்பி வைக்குமாறு கூறினார். இரு நாட்களும் இதே சூழ்நிலைதான் இருந்தது.

இருவரும் சந்திக்கக் கிடைத்த சில நிமிடங்களுள், மோனிக்காவை மீண்டும் வெள்ளை மாளிகைக்கு அழைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கிளின்ரன் கூறினார். ஜனாதிபதியின் தனி விவகாரங்களுக்குப் பொறுப்பான இயக்குநர் பொப் நாஸ் என்பவரிடம் இதற்கான விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

மோசடியின் முழு உருவம்

இதனைத் தொடர்ந்து மோனிக்கா கிளின்ரனுக்கு சில பரிசுப் பொருட்களை கொடுப்பதற்காக பெட்டி கியூரியின் அலுவலகத்துக்கு வந்திருந்தாள். அப்போது கியூரி மோனிக்காவைப் பற்றி கிளின்ரன் தன்னிடம் கூறியதாகச் சொன்னார். "வெள்ளை மாளிகைக்கு மீண்டும் உன்னைத் தருவித்து நல்லதொரு பணியில் அமர்த்த வேண்டுமென்று ஜனாதிபதி என்னிடமும் பலதடவைகள் கூறியிருக்கிறார். நீயொரு கடமையுணர்ச்சியுள்ள நல்லபெண் என்றும் கூறியுள்ளார்."

இத்தகைய சாதகமான மாற்றங்கள் எல்லாம் நடைபெறுவதற்கு ஆதி காரணகர்த்தா லிண்டா ட்ரிப்தான் என்று மோனிக்கா பெரிதும் நம்பினாள். அவளைத் தனது தெய்வம் போல் கருதினாள். பிற்பட்ட காலத்தில் லிண்டா ட்ரிப்பைப் பற்றி மோனிக்கா கூறும்போது, "லிண்டா என்னுடைய அன்றாட நாட்குறிப்பாகவே(டயறி) மாறிவிட்டாள். என்னுடைய நடமாட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் லிண்டா ட்ரிப்பின் அங்கீகாரத்தையே எதிர்பார்த்தேன். என்னை முழுமையாக லிண்டா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாள். சில சந்தர்ப்பங்களில் கிளின்ரனுடனான எனது உறவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடப் போகிறேன் என்று அவளிடம் கூறியிருக்கிறேன்', லிண்டா 'அப்படியெல்லாம் செய்து விடாதே! இனிமேல் தான் பல நல்ல காரியங்கள்-உன் மனத்திருப்திக்கு ஏற்றவாறு நடைபெறப் போகின்றன' என்று என்னை உட்சாகப் படுத்துவாள்!" என்று குறிப்பிட்டாள்.

மோனிக்காவின் கருக் கலைப்பைத் தொடர்ந்து உளவள ரீதியில் அவள் ஓரளவு பாதிப்படைந்திருந்தாள். இக் காலகட்டத்தில் அவளுடைய தாயார், அவளுடைய சித்தி மற்றும் நெருக்கமான சிநேகிகள் அனைவரும், கிளின்ரனுடனான உறவினைக் கத்தரித்துவிட்டு வாஷிங்டன் நகரைவிட்டு வேறு எங்காவது சென்று புதிய வாழ்க்கையொன்றைத் தொடங்குமாறு நிர்ப்பந்தித்து வந்தனர். ஆனால் அவர்கள் எவருடைய புத்திமதியையும் கேட்டு நடப்பதற்கு மோனிக்கா தயாராயில்லை. லிண்டா ரிப்பினுடைய வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளே அவளுக்குத் தெய்வ வாக்காய் அமைந்திருந்தன.

லிண்டாவிடம் மோனிக்கா தனது பழைய கதைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் முழுமையாகத் தெரிவித்து வந்தாள். கிளின்ரனுடன் தான் நடத்திய காதல் களியாட்டங்கள் அனைத்தையும், திகதி-கால-நேரம் பிசகாமல் குறிப்பிட்டு வந்தாள். இந்த விவரங்கள் அனைத்தையும் லிண்டா ட்ரிப், குறிப்பெடுத்து வந்ததுடன், மோனிக்காவுக்கு தெரிந்தும் தெரியாமலும் ஒலி நாடாவில் பதிவு செய்தும் வந்தாள். இவ்வாறு மோனிக்கா தன்னிடம் கூறிய சம்பவங்களை காகிதத்திலும் ஒலி நாடாவிலும் பதிவு செய்வதற்கான காரணமொன்று இருப்பதாக லிண்டா மோனிக்காவிடம் கூறியிருந்தாள் கிளின்ரன் நடத்தைகளை அவதானமாக ஆராய்ந்து அவர் எப்போதும் மோனிக்காவுடன் காதல் உறவு மாறாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இப்பதிவுகளே தனக்குதவப் போகின்றன, என்று மோனிக்காவிடம் கூறி அவளை நம்பவைத்தாள். மோனிக்காவும் கிளின்ரனுடனான தனது காதல் உறவுகளை, மீட்டுக் கூறும் போது உணர்ச்சி வசப்பட்டும் அனுபவித்த வண்ணமும் கூறி வந்தாள்.

பெப்ரவரி மாதம் 14ம் திகதி காதலர்கள் தினம். அன்றைய தினம் 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற ஆங்கில நாளேட்டில் கிளின்ரன் மீது தனது காதலை வெளிப்படுத்தும் வகையில் ஷேக்ஸ்பியரின் நாடகமான 'ரொமியோ அன்ட் ஜூலியட்'டிலிருந்து சில வரிகளைக் குறிப்பிட்டிருந்தாள். அன்றைய தினம் அந்த வரிகளைப் படித்துப் பார்க்கும்படி தொலைபேசி மூலம் கிளின்ரனுக்குத் தெரியப்படுத்தியிருந்தாள்.

காதலின் மென்மையான இறகுகள்
உறுதியான கல் வேலிகளையும் தாண்டி
உரிய இடத்தில் உட்கார்ந்து விடும்;
காதலின் சக்தி எத்தகைய தடைகளையும்
தாண்டி துணிவுடன்-முன்னேறும்!

இந்த வரிகளை கிளின்ரன் படித்துவிட்டு அவளைப் பாராட்டினார்.

காதலர் தினத்தன்று கிளின்ரனை நேரடியாகச் சந்திக்க முடியாவிட்டாலும், தான் அவருக்காக எழுதிய வரிகள் அவரை ஈர்த்துள்ளதை, அவரே பாராட்டினாரே, என்ற திருப்தியில் மோனிக்கா இருந்தாள். ஆனால் காதலர் தினம் முடிந்ததும் மோனிக்காவின் உள்ளத்தை உடைக்கும் சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவளைத் தாக்க ஆரம்பித்தன.

காதலர் தினத்தன்று மோனிக்கா தனது தாயார் மார்சியாவுடன் இலண்டன் சென்று திரும்பினாள். அடுத்த நாள்தான், அவள் பத்திரிகையில் பொறித்திருந்த வார்த்தைகள் பற்றி கிளின்ரன் தனது பாராட்டைத் தெரிவித்திருந்தார். ஆனால் நன்றி என்றொரு வார்த்தையை அவர் உதிர்க்கவில்லை என்பது அவளுக்குச் சிறிது ஏமாற்றத்தையே தந்தது. அது மட்டுமல்லாமல் கிளின்ரனின் வார்த்தைகளில் ஒருவிதமான தடுமாற்றம் இருப்பதையும் மோனிக்காவால் அவதானிக்க முடிந்தது.

மீண்டும் வெள்ளை மாளிகைப் பணிக்குத் திரும்புவது தொடர்பாக அவள் கண்டு வந்த கனவுகள் மெல்லமெல்லக்கலைந்து போவதாக அவள் உணரத் தலைப்பட்டாள். பத்திரிகை வாசகங்களைப் பாராட்டிய கிளின்ரன் மோனிக்காவை பெட்டி கியூரியைச் சந்திக்கும் படியும் கூறினார்.

ஒரு நாள் வெள்ளை மாளிகை சென்ற மோனிக்கா, பெட்டி கியூரியின் அலுவலகத்துள் சென்றாள். அங்கு ஆல்டே டெவிஸ் என்ற மற்றுமொரு பெண் அதிகாரி கியூரியுடன் உரையாடிக் கொண்டிருந்ததை அவதானித்தாள். டெவிஸ், மோனிக்கா அங்கு வந்திருப்பதை அறிந்தும் அறியாததுபோல் கூறிய வார்த்தைகள் மோனிக்காவை நிலைதடுமா வைத்தன. அவளுடைய மனக்கோட்டை அப்படியே பூகம்பத்தில் உடைந்து நொருங்கு வது போலிருந்தது.

(வரு வாள்)

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் திருமதி வ.கந்தசாமி,

இல. 18, பயனியர் வீதி, மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பாப்பா முரசு சிறுகதை

பேரழகி இளவரசி

கருங்கர்நத்தம் என்ற நாட்டை சிம்மக்குரலோன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மகளான இளவரசி ஜிந்தா பேரழகி. அவளுக்கு மண்டைகனம் அதிகம். யாரையும் மதிக்கமாட்டாள். அழகற்றவர்களைக் கண்டால் கேவலமாகச் சிரிப்பாள். அவர்கள் மனம் புண்படும்படி பேசுவாள்.

ஒரு நாள் அரசவைக்கு வந்தாள் இளவரசி ஜிந்தா. அவையில் அமர்ந்திருந்து அரசின் அலுவல்களை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள்.

அரசர் சொல்லும் சிக்கலான பிரச்சனைகளுக்குகெல்லாம் அறிஞர் கரிபாலன் மிகத் தெளிவாக ஆலோசனை கூறிக் கொண்டிருந்தார். அவரது அறிவைக் கண்டு வியந்தாள் ஜிந்தா.

இருப்பினும், அவளது மண்டைகனம் அவளை விட்டுப் போகுமா என்ன? "என்ன அறிவு, என்ன அறிவு. ஆனாலும், இத்தனை அவலட்சணமான பாத்திரத்துக்குள் வைத்து விட்டானே. ஆண்டவன்?" என்று நக்கலா கப் பேசிவிட்டு உள்ளே போக திரும்பினாள்.

மன்னருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அறிஞர் கரிபாலன் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். ஆனாலும், தன் செல்ல மகளைக் கடிந்து கொள்ள முடியவில்லை.

கரிபாலன் சிறிதும் மனம் சுருங்காமல்,

"இளவரசி! விலை மதிப்பு மிக்க மதுபானங்களை எதில் வைத்திருக்கிறீர்கள்?" என்றார்.

"மண் பாத்திரத்தில்!" என்றாள் இளவரசி.

"ஏழைகள் தான் வேறு வழியில்லாமல் மண் பாத்திரத்தில் வைத்திருந்தால், சகல செல்வங்களும் பெற்ற நீங்களும் ஏன் மண் பாத்திரத்திலேயே வைக்க வேண் டும்?. விலையுயர்ந்த பாத்திரத்தில் ஊற்றி வையுங்கள், சில நாட்களை கழித்து உங்களை சந்திக்கிறேன்!," என்றார்.

"அதானே?," என்று யோசித்த இளவரசி உடனே அரண்மனைக்குள் சென்று அங்கிருந்த விலை உயர்ந்த மதுபானங்களை வெள்ளிப் பாத்திரத்திலும், தங்கப் பாத்திரத்திலும் ஊற்றி வைக்கச் சொன்னாள்.

ஒரு மாதத்திற்குப் பின் இளவரசியை சந்தித்தார் அறிஞர் கரிபாலன். "என்ன இளவரசியாரே... மதுபானங்கள் எந்த நிலையில் உள்ளது?" என்றார்.

"எல்லாம் கெட்டு விட்டது. என்ன காரணம் என்று தெரியவில்லை?" என்றாள் இளவரசி.

" இளவரசி... உயர்ந்த மது சாதாரண மண்பாண்டத்தில் இருக்கும் போது கெடாமல் இருப்பது போல், சிறந்த அறிவு அவலட்சணமான உருவத்திற்குள் இருக்கும் போது நிலையாக இருக்கும். அழகான உருவத்திற்குள் இருந்தால் இன்னும் பெருமை, தலைகனம் அதிகமாகி கெட்டு விடும் இளவரசியாரே. நீங்கள் மட்டும் அழகில் குறைந்தவராக இருந்தால் சிறந்த அறிவாளியாக இருந்திருப்பீர்கள்!," என்றார்.

அத்துடன் தன் அழகுபற்றிய பெருமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள் இளவரசி ஜிந்தா!





குளத்தில் இறங்கித் தண்ணீர் குடிக்கத் தவியாய்த் தவிக்கிறது இந்தப் பறவை. இதற்கு குளத்திற்குச் செல்ல சரியான வழியைக் காட்டுங்கள்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.07.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: 348
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 346

பரிசுக்குரியவர்:
ஐ.வனிதா,
கமு/கோ/வி/ம.வித்தியாலையம், அக்கரைப்பற்று.

பாராட்டுக்குரியவர்கள்:

கே.பஸ்மினா, ம.ம. கல்லூரி, மடவளை பஸார்.	எம்.மொகமட் சாகிப், ஒக்ஸ்.போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.
ரா.சரவணகீர்த்தி, பள்ளேகலை,குண்டசாலை, கண்டி.	ம.மலர்விழி , வெ/சைவமங்கையர் கழகம், கொழும்பு-06.
சாள்ஸ் சீவரட்ணம், பரி,தோமாவின் கல்லூரி, கல்கிசை.	எஸ்.எச்.பாத்திமா ருஸ்னா, முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு-04.
என்.எம்.நிஸாம், மட்/அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி 05.	தி.டெஸ்மன், பியந்தா சிறுவர் இல்லம், பாசிக்குடா, கல்குடா.
த.சுகந்தி, அயோனா தோட்டம், அக்கரபத்தனை.	சி.கமலரூபன், இ/மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா.

ஆர்ம் லில்லி தவளை

படத்தில் இருக்கும் பூவின் பெயர் 'ஆர்ம் லில்லி' இது ஒக்கிட் வகைப் பூக்குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தப் பூவினுள் ஒளிந்திருக்கும் தவளையாரின் பெயர் 'ஆர்ம் லில்லி தவளை'.

இந்தத் தவளை எப்போதுமே இந்தப் பூக்களின் உள்ளே அசையாமல் உட்கார்ந்திருக்கும். சின்னஞ்சிறு பூச்சிகள், தேனீக்கள் பூவினருகில் வந்தவுடன் அப்படியே அவற்றைப் பிடித்துக் கொள்ளும்.

நிலத்திலும் நீரிலும் வாழும் இந்தத் தவளை, சாதாரண தவளைகளைவிட அளவில் சிறிதாக இருக்கும். இவற்றின் நீளம் 2.5 சென்டி மீட்டர் மட்டுமே. இவை 45 சென்டி மீட்டர் உயரம் வரை தாவிக் குதிக்கும்.

'அ' முதல் 'ஔ' வரை பழமொழிகள்

★ அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
★ ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும்.
★ இமையின் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.
★ ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் வரை பாயும்.
★ உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குத்தான் மிஞ்சும்.
★ ஊசி போகும் வழியே தான் நூலும் போகும்.
★ எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்.
★ ஏறின ஏணியை எட்டி உதைப்பதா?
★ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
★ ஒடிந்த கோலானாலும் ஊன்று கோலாகும்.
★ ஓடம் ஒரு நாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்.

செய்து பாருங்கள்

தேவையானவை:

பூசணிக்காய் ஒன்று, இரண்டு வெள்ளரிக்காய், ஒரு முள்ளங்கி, இரண்டு மிளகு, ஒரு செத்தல் மிளகாய், ஒரு கத்தி மற்றும் சில பல்குத்தும் குச்சிகள்.

செய்முறை

1. வெள்ளரிக்காயை இரண்டு துண்டுகளாக வெட்டவும். முள்ளங்கியை இரண்டு பாதியாக வெட்டி, அதன் அடிப்பாகத்தை வட்டமாக வெட்டிக் கொள்ளவும்.

2. பூசணிக்காய்தான் முயலின் உடம்பு. இப்போது மிளகுகளை இரண்டு கண்களாகவும், செத்தல் மிளகாயை வாயாகவும் ஒட்ட வையுங்கள்.

3. வெட்டப்பட்ட வெள்ளரிக்காய், முள்ளங்கி ஆகியவற்றுள் பல் குத்தும் குச்சியைக் குத்தி, படத்தில் உள்ளது போல் கை, கால், காதுகளைச் செய்யவும்.

அப்போது பூசணிக்காய் முயலார் தயார்.

சீஸ்வீ சத்தி

01

172 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட-சமுதாயத்திற்கு உழைத்த நல்லவர்கள் பலர் சமாதிகளுக்குள்ளும் சிலைகளாகவும் நிரம்பியிருக்கும் நீளமான மெரீனா கடற்கரையைக் கொண்ட-பதினேழாம் நூற்றாண்டில் சென்னைப் பட்டணம் என்று அழைக்கப்பட்டு தற்போது சென்னை என்று அழைக்கப்படும் மாநில தலைநகரில்....

எரிக்கப்பட்ட வெள்ளைக் காகிதத்தின் நிறத்திற்கு வானம் ஸ்லோ மோஷனில் மாறிக் கொண்டிருந்த மாலையில்...

அந்த மூன்று நட்சத்திர ஹோட்டலின் நீச்சல் குளத்தில் நீந்திக் கொண்டிருந்தான் அவன்.

அவன்-ரஞ்சித், வயது-முப்பது. மாநிறம். ஒரு விளையாட்டு வீரனைப் போன்ற கச்சிதமான தேகம், மார்பில் ரோம சாம்ராஜ்யம். உதட்டுக்கு மேல் வடக்கத்திய நடிகர்களைப் போல பொட்டல் பூனைக் கண்கள்.

ரஞ்சித் படிகள் ஏறி கரையோரமாய் நடந்து படிகள் ஏறி டைவர்ஸ் போர்டுக்கு வந்தான், முனைக்கு வந்து நின்று கால்களைச் சேர்த்து வைத்து கைகளை தொடைகளைத் தொடும் படி வைத்து மூச்சை உள்ளிழுத்து ஒரு அம்பாக காற்றில் தன்னைச் செலுத்தினான்.

அந்த மனித அம்பு அந்தரத்தில் ஒரு முழு வட்டமடித்துவிட்டு நேர் கோட்டில் தலை கீழாக இறங்கி தண்ணீரைக் கிழித்துக் கொண்டு காணாமல் போனது.

ஹோட்டலின் அடித்தள பார்க்கிங் பகுதியில் கைனடிக் ஹோண்டாவை நிறுத்தி இறங்கின அப்ஸரா சரிந்த தன் துப்பட்டாவை சரியாகப் போட்டுக் கொண்டாள். லேசாகக் கலைந்திருந்த தன் கூந்தலை அரைவட்ட 'பவ்' நீக்கி விரல்களால் கோதி விட்டுக் கொண்டு மீண்டும் பவ் பொருத்திக் கொண்டாள். கறுப்பு லெதர் ஹேண்ட் பேகை தோளில் மாட்டிக் கொண்டு நடந்தாள்.

ஹோட்டலின் வரவேற்புப் பகுதியில் அங்கங்கே பதிக்கப்பட்டிருந்த கண்ணாடிகளில் அப்ஸராக்கள் நடந்தார்கள்.

செயற்கை நீரூற்று துள்ளிக் கொண்டிருந்தது. குளிரை குளிர் அணைத்துக் கொண்டிருந்தது. தரையின் கிரானைட் செவ்வகங்களுக்கிடையே பித்தளைக் கோடுகள் ஓடின. பத்தடிக்கு ஒரு தொட்டிவைத்து செயற்கைத் தாவரங்கள் கூழாங்கற்களுக்கு நடுவிலிருந்து முளைத்திருந்தன.

அப்ஸரா ஒரு சௌகரியமான ஸோபாவை தேர்வுசெய்து சென்று அமர்ந்தாள். வாட்ச் பார்த்துக் கொண்டாள்.

கைப்பையிலிருந்து ஒரு ஆங்கில நாவலும், சிக்லெட்டும் எடுத்தாள். வாயில் போட்டுக் கொண்டுமென்ற படி அடையாளம் வைத்திருந்த பக்கத்திலிருந்து நாவல் படிக்கத் துவங்கினாள்.

ஒரு பக்கம் தாண்டுவதற்குள் கைப்பைக்குள் ஸெல் ஃபோன் இரகசியமாகச் சிணுங்கியது. எடுத்து காதில் அணைத்துக் கொண்டாள்.

"ஹலோ-அப்ஸரா."

"ஹோய்! நான்தான் பவானி பேசறேன்."

"என்ன பவானி?"

"கவர் ஸ்டோரிக்காக எடிட்டர் ஓகே செஞ்சிருந்த கலர் ஸ்டில்லை எங்க வெச்சே?"

"என் டேபிள் மேலதான் வெச்சேன்."

"அரை மணி நேரமா தேடிட்டேன். கிடைக்கலை. ஸ்கேனிங்குக்கு அனுப்பணும்னு ஆர்.வி.கத்தறார். இப்ப எங்க இருக்கே? வந்து எடுத்துத் தர்றியா?"

"விளையாடறியா? ஹோட்டல் ஜெம் ரிசப்ஷன்ல ரவீந்தரதாசுக்காக வெய்ட் பண்ணிட்டிருக்கேன்."

"யார் அது?"

"கேரளாவில பாபுலர் எழுத்தாளர். இங்கே ஒரு ஃபங்ஷனுக்காக வந்திருக்கார். இங்கேதான் தங்கியிருக்கிறார். ஏழு மணிக்கு என்னை ரிசப்ஷன்ல வெய்ட் பண்ணச் சொல்லியிருக்கார். எக்ஸ்க்ளூசிவ் இண்ட்டெர்வியு!"

"இப்ப மணி சிக்ஸ் தர்ட்டிதான் ஆகுது? ஆபீசுக்கு வந்து எடுத்துக் கொடுத்துட்டுப்போயேன்."

"டைம் ஆயிடும். அவர் நைட்டே புறப்படறார். மிஸ் பண்ண முடியாது. நல்லா தேடிப் பாரு. என் மேசை மேலதான் வெச்சேன்."

"பார்த்துட்டேன்னு சொல்றேன்ல?"

"நான் இண்டடெர்வியு முடிச்சிட்டு வந்து எடுத்துத் தர்றேன். தொந்தரவு பண்ணாதே."

விறு விறு தொடர்

ஃபோனை பைக்குள் வைத்து தோளில் மாட்டிக் கொண்டு-மெதுவாக ஹோட்டலின் உள் வழிகளில் நடந்தாள் அப்ஸரா.

ஒரு கண்ணாடிச் சுவருக்கு அந்தப் பக்கம் நீச்சல் குளம் தெரிய, அங்கே வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்தாள்.

ரஞ்சித் மீண்டும் டைவிங் போர்டில் நின்றான். குதிப்பதற்கு தயாரானான்.

யதேச்சையாக அவனைப் பார்த்த அப்ஸராவுக்கு செதுக்கின உடலமைப்புடன், அவன் உயரத்தில் நின்ற போல் சட்டென்று மனதைக் கவ்வ, பத்திரிகைக்காரிக்கே உரிய ஆர்வத்தில் கைப்பைக்குள்ளிருந்து கேமிரா எடுத்து லென்ஸ் கவர் நீக்கி அவசரமாக கோணம் அமைத்தாள்.

க்ளிக்!

ரஞ்சித் தண்ணீர் தளத்தை நோக்கிப் பாய்ந்த கடைசி விநாடியில் தன்னை ஒளி கொத்தியதை உணர்ந்தான். நீரைக் குடைந்து கொண்டு உள்ளே சென்று திருப்பி மேலே வரும்போது தன்னை நேராக்கிக் கொண்டு விளிம்பைத் தொட்டதுமே தலையை சிலிர்த்துக் கொண்டு எல்லாத் திசைகளிலும் தேடினான்.

அப்ஸாரா தன் கேமிராவின் லென்சை கவர் போட்டு மூடுவதைக் கவனித்து விட்டான். முகம் அவசரமாக இரத்தப் பாய்ச்சல் ஏந்தி சிவந்து போனது.

வேகமாக நீந்தி மேலே வந்து அவளை அடைந்து சொட்டச் சொட்டநின்று, "நான் சென்ஸ்! எதுக்கு என்னை ஃபோட்டோ எடுத்தே?" என்று எகிறினான்.

"லெட் மி எக்ஸ்ப்ளெய்ன். நான் ஒரு ஜர்னலிஸ்ட் 'ஹலோ இந்தியா' இங்கிலிஷ் வீக்லில சப்-எடிட்டர். டைவிங் போர்டு மேல குதிக்கத் தயாரா நீங்க நின்ன போஸ் எனக்குப் பிடிச்சிருந்திச்சி, அதான் கிளிக் செஞ்சேன். உங்களைப் பத்தி ஏதாச்சும் சொல்லுங்க. எங்க இஷ்யூல உங்க ஃபோட்டோவோட மேட்டரும் போட்டுடறேன். பை தி பை, ஐ ம் அப்ஸரா."

புன்னகையுடன் அவள் கை நீட்ட...

ரஞ்சித் முகத்தில் கோபம் இறங்கவில்லை.

"எனக்கு ஒண்ணும் அவசியமில்லை. என்னைக் கேக்காம என்னை ஃபோட்டோ எடுத்தது தப்பு! நீ யாரா இருந்தாலும் தப்பு!"

"ஸாரி, நான் ஒரு ஆர்வத்திலே... எக்ஸ்ட்ரீம்லி ஸாரி, ஒரு கோக் வாங்கித் தந்தா உங்க கோபம் சரியாகிடுமா?"

ரஞ்சித் மௌனமாக கை நீட்டினான். பற்கள் நெறிபட்டன.

"என்ன?"

"என்னை ஃபோட்டோ எடுத்த நெகடிவைக் கொடுக்கிறியா?"

"ஓ! காட்! இந்த ஃபிலிம் ரோல்ல இது பதினாறாவது ஷாட்! ஏன் இவ்வளவு கடுமையா இருக்கீங்க? உங்க ஃபோட்டோ பத்திரிகைல வர்றது உங்களுக்குப் பிடிக்கலையா? சரி, போடலை. ஒண்ணு பண்ணலாம். உங்க அட்ரஸ் கொடுங்க. இந்த ரோல் முடிச்சி நான் டெவலப் செஞ்சதும் உங்க நெகடிவை பத்திரமா கூரியர்ல அனுப்பி வெச்சுடறேன். ஓகே?"

"இன்னொரு வழி இருக்கு!"

"இப்படி எடுத்து..." அவள் கையிலிருந்த கேமிராவை சட்டென்று பிடுங்கி அவள் பதறப் பதற... பின்புற மூடி திறந்து ஃபிலிம் ரோலை தனியாகக் கழற்றி எடுத்து, "இப்படி எக்ஸ்போஸ் செஞ்சிட்டாலும் பிரச்சனை தீர்ந்தது!" என்று கேமிராவை மறுபடி அவள் கையில் திணித்துவிட்டு வேகமாக உடை மாற்றும் பகுதிக்கு நடந்தான் ரஞ்சித்.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட அப்ஸராவின் உதடுகள் 'காட்டு மிராண்டி!' என்று உச்சரித்தன.

சற்றுத் தள்ளி அமர்ந்திருந்தவர்கள் இவளைப் பார்ப்பதை கவனித்து அங்கிருந்து விலகி மீண்டும் ரிசப்ஷன் பகுதிக்கு வந்து அமர்ந்து படபடப்பாக தன் நகம் கடித்துத் துப்பினாள்.

'நட்பும் நளினமும் கொஞ்சமும் இல்லாத இந்த இடியட் நேற்றும் இன்றும் வேறு சில பேட்டிகளில் எடுத்த புகைப்படங்களையும் சேர்த்து நாசம் செய்து விட்டானே... இப்படியா நாகரிகம் இல்லாமல் நடந்து கொள்வான்?

இவனை என்ன செய்யலாம்? ஏதாவது செய்ய வேண்டும்! ராஸ்கல்! முதலில் இவன் யாரென்று தெரிந்து கொள்ளவேண்டும்.'

அப்ஸரா எழுந்தாள்-ஒரு தீர்மானத்தோடு.

அறை எண் 517.

பொய்க் கூரைக்குள் புதைத்து வைக்கப்பட்ட விளக்குகள் - அறையை இதமான வெளிச்சத்தால் நனைத்துக் கொண்டிருந்தன.

ஒப்பனை மேசை முன்பாக அமர்ந்திருந்தான் ரஞ்சித் சூட்கோட்டில் இருந்தான்.

கிரீம் போட்ட தலையை சுத்தமாக வழித்து சீவிய பிறகு அருகில் இருந்த சூட்கேஸைத் திறந்து அந்த விக்கை எடுத்தான்.

லேசான பின் வழுக்கையுடன், அங்கங்கே நரை முடிகளுடனிருந்த அந்த விக்கை தலையில் பொருத்திக் கொண்டு அதே போல நரைமுடிகள் தலை நிட்டிய தாடியைக் கையில் எடுத்தான். அதன் உள்புறம் அதற்கென்று கோந்தை லேசாகத் தடவி தாடையில் பொருத்திக் கொண்டான்.

இப்போது மீசை. அடர்த்தியான புருவங்கள். பைஃபோகல் பட்டை ஃபிரேம் கண்ணாடி. ஒரு பைப் எடுத்து உதட்டில் வைத்துக்கொண்டு கண்ணாடியில் அப்படியும் இப்படியும் பார்த்துக் கொண்டான்.

சற்றுமுன் நீச்சல்குளத்தில் சந்தித்த முப்பது வயது ரஞ்சித் இந்தப் புதிய ஒப்பனையில் தொலைந்து போய், ஐம்பத்தைந்து வயது பெரிய மனிதர் உருவாகியிருந்தார்.

ரஞ்சித் எழுந்தான்.

கட்டிலின்மேல், உடம்பு முழுக்க 'With Wishes' என்று மறுபடி மறுபடி அச்சடித்திருந்த சிகப்பு நிற பூக்காகிதம் சுற்றின பரிசுப் பார்சல் ஒன்று தயாராகி இருந்தது.

அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

மேஜைமேல் இருந்த அகலமான, பொன் எழுத்துக்கள் மின்னும் அந்த திருமண அழைப்பிதழை எடுத்தான்.

'தீபிகா வெட்ஸ் ஆகாஷ்' என்ற மேல்வரியை மட்டும் படித்தான். புன்னகைத்துக் கொண்டான்.

புறப்படும் முன்பாக செண்ட் எடுத்து பீச்சிக்கொண்டான்.

லிஃப்ட் ஐந்தாம் மாடியில் நின்றதும் வெளிப்பட்டாள் அப்ஸரா.

அவன் பெயர் ரஞ்சித் என்றும் 517 எண் அறையில் தங்கியிருக்கிறான் என்றும் நீச்சல் குளம் அருகே ஒரு ஸ்டுவர்டிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்த அவள் அருகில் இருந்த அறைக் கதவில் பித்தளையில் 506 பார்த்துவிட்டு 517 நோக்கி வேகமாக நடந்தாள்.

அவனை விடக் கூடாது! அழைப்பு மணியை அழுத்தி, அவன் கதவைத் திறந்ததும் ஒத்திகை பார்த்தபடி சகட்டுமேனிக்கு ஆங்கிலத்தில் ஆத்திரம் தீர திட்டித் தீர்த்துவிட வேண்டும்.

போலீசில் புகார் கொடுக்கப் போவதாக மிரட்ட வேண்டும். அவனை எப்படியும் ஒரு சாரியாவது செல்ல வைத்து விட வேண்டும்.

517 வாசலில் வந்து நின்றாள். தொண்டையைச் செருமிக் கொண்டு மணி சுவிட்சை அழுத்தினாள்.

கையில் பரிசுப் பார்சலுடன் கதவைத் திறந்த, அடையாளம் மாறியிருந்த ரஞ்சித்தைப் பார்த்து இவள் தடுமாற-இவளை எதிர்பார்க்காத ரஞ்சித் அதிர்ந்தான். கோட் பாக்கெட்டுக்குள் இயல்பாகச் சென்ற அவன் கை ரிவால்வரைத் தொட்டது.

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

புகழ்பெற்ற வழக்குகள் 04

தான் பிறந்த நாட்டின் புகழை அகிலமே அறியச் செய்தவள் அந்த நங்கை. ஜெர்மன் நாட்டுப் பெண்ணான அவள் ஆடுகளம் வருகிறாள் என்றால் அகிலமே திரண்டு வருவது போல் மக்கள் கூட்டம் அலைமோதும்.

ஸ்டெபி கிராப், தன் 16 வயதில் டென்னிஸ் ஆட்டத்தில் தலைசிறந்து விளங்கினாள். கோடி கோடியாகப் பணம் குவிந்தது. ஆனால் அந்தப் பணத்தில் தனக்குச் சேரவேண்டிய தொகை எங்கே, என்று அவளுடைய தாய்நாடு கேட்டு ஸ்டெபியை நீதிமன்றத்துக்கு இழுத்தது. அவளுடைய தந்தையைச் சிறையிலிட்டு வாட்டியது.

விளையாட்டும் வேண்டாம் அதனால் வரும் வினையும் வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டாள் ஸ்டெபி கிராப்.

பிரபல டெனிஸ் வீராங்கனை ஸ்டெபிகிராப், தனது கடும் எதிரியாக யாரைக் கருதியிருப்பார்? மோனிக்கா செலஸ், மார்ட்டினா ஹிங்கிஸ், சான்செஸ் ஆகிய இவர்கள் அனைவரையும் விட ஸ்டெபிக்கு அதிக சோதனைகளைக் கொடுத்தது ஜெர்மன் அரசுதான்!

ஜெர்மன் நாட்டு அதிகாரிகள் ஆகஸ்ட் மாதம் 94ல் ஸ்டெபியின் தந்தை பீட்டரைக் கைது செய்தனர். தனது மகள் செலுத்த வேண்டிய வரிப் பணமான கோடிக்கணக்கான டொச் மார்க் தொகையைச் செலுத்தாமல் ஏய்த்ததற்காகத்தான் இந்தக் கைது. அதற்கு அடுத்த மாதமே ஸ்டெபியின் குடும்ப வரி ஆலோசகரும் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து எட்டு மணி நேரம் ஸ்டெபியையும் அதிகாரிகள் குடைந்தெடுத்தனர். 'வருமானவரி ஏய்ப்பு அவரது சம்மதத்தோடு நடந்ததா இல்லையா' என்பதை அறிந்து கொள்வதற்காக!

அந்த ஆண்டு வரை போட்டிகளில் விளையாடி ஸ்டெபி ஈட்டிய தொகை பதினெட்டு மில்லியன் டாலர்கள் என்றும், விளம்பரங்கள், முதலீடுகள் மூலம் பெற்ற வருமானம் ஆகியவற்றையும் சேர்த்தால் மொத்தம் 124 மில்லியன் டாலர்கள் என்றும் அவரது வருமானம் கணக்கிடப்பட்டது.

இதற்கு அவர் ஐம்பது மில்லியன் டாலருக்கும் மேல் வருமானவரி செலுத்தியிருக்க வேண்டும். ஆனால், ஸ்டெபியின் சார்பில் 1989லிருந்து 1992 வரை அவரது வருமானத்திலிருந்து ஐந்து முதல் பத்து சதவீதம் வரையே தோராயமான தொகை வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

ஸ்டெபி மீது ஜெர்மனியர்களுக்குப் பாசம் உண்டு. அதே நாட்டைச் சேர்ந்த போரிஸ் பெக்கர், மொனோகோவுக்குச் சென்று விட (அங்கு வரிவீதம் மிக மிகக் குறைவு) ஸ்டெபி மட்டும் தொடர்ந்து தாய்நாட்டிலேயே தங்கினார். ஆனால் இந்தக் காரணத்தினாலேயே சில அரசு அதிகாரிகளுக்கு சந்தேகம் வலுத்தது.

குறைவான வருமான வரியைச் செலுத்தினாலே போதும் என்பது போன்ற உறுதிமொழியை சில அரசியல்வாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டுதான் ஸ்டெபி தாய்நாட்டிலேயே இருந்தாரா?

ஸ்டெபியே கைது செய்யப்படலாம் என்ற சூழல் வந்ததும், அது பெரும் விவாதத்துக்கு வழி வகுத்தது.

'ஜெர்மனியின் புகழை சர்வதேச அரங்கில் நிலை நிறுத்திய ஒரு சாதனை பெண்ணுக்கா இந்த நிலை?' என்று கோபப்பட்டவர்கள் ஒருபுறமென்றால், ஜெர்மனியின் எக்கச்சக்கமான வரிவீதம் குறித்துக் கடிந்து கொண்டவர்களும் ஏராளம்.

'இவ்வளவு அநியாய வரி செலுத்த வேண்டுமென்றால் ஏய்க்கத் தோன்றுவது இயல்பு தானே' என்றனர்.

தம் வருமானத்தை அப்படியே தந்தையிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறெந்த விஷயமும் தனக்குத் தெரியாதென்றார் ஸ்டெபி. அது உண்மையாயிருக்க வாய்ப்பு உண்டு என்றே கருதியது, இந்தக் குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்றக் குழு. காரணம், தனது 16 வயதிலிருந்தே சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொண்டிருந்த ஸ்டெபி, வருடத்தின் பெரும்பாலான நாட்களை வெளி நாட்டு டூர்களில் தான் கழித்துக் கொண்டிருந்தார்.

பீட்டர் கிராபுக்கு நான்கு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. என்றாலும், அவரது நன்னடத்தை காரணமாகவும், திருப்திகரமான அளவுக்கு வரிப் பணத்தைச் செலுத்திய காரணத்தாலும், மக்களின் ஆதரவு ஸ்டெபிக்குப் பெருமளவு இருந்ததாலும், வெகுசீக்கிரமே அவரது சிறைவாசம் முடிந்தது.

எப்படியோ, விம்பிள்டனுக்கு முழுக்குப் போட்டு விட்ட ஸ்டெபி, டெனிஸ் வீரர் அகாசியுடன் நடத்தும் காதல் வாழ்வில் இன்பத்தில் முழ்கிக் கொண்டிருக்கிறார்.

(வழக்குகள் தொடரும்)

வருமானவரித் துறையால்

விளைக்கப்பட்ட வீராங்கனை!

ராம்ஜெகர்

ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 08

கணபதியைக் கிண்டல் செய்யலாமா?

இரா.பத்மநாதன்

இக் கட்டுரைத் தொடரில் 'என் புராணம்' என்ற உபதலைப்பைப் பார்த்ததும், 'இவருடைய புராணத்தை நாம் ஏன் அறிந்திருக்க வேண்டும்; அதனால் எமக்கு என்ன பயன் ஏற்படப் போகிறது, இவர் என்ன ஒரு வரலாற்று நாயகரா? 'என்று பலதரப்பட்ட வினாக்கள் வாசகர் மத்தியில் எழலாம். ஆகவே இதற்கான ஒரு விளக்கத்தைத் தர வேண்டியது என் பொறுப்பு.

மட்டக்களப்புத் தமிழகத்தின் பண்டைய வரலாறு, தனியான பண்பாடு பழக்க வழக்கங்கள் போன்ற அம்சங்களை 'மட்டக்களப்புத் தமிழகம்' என்ற தமது அருமையான நூலில் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் தெளிவாகத் தொகுத்துத் தந்தார்கள். இருப்பினும் மட்டக்களப்பு மாநிலத்தில் 1950ம் ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய அம்சங்களை இதுவரை எவரும் தொகுத்துத்தரவில்லை.

இம்மாநிலத்தின் சமூக மற்றும் அரசியல் தொடர்பான மாற்றங்களின் பின்னணியில் திரு.எஸ்.டி.சிவநாயகம், திரு.செல்லையா இராசதுரை ஆகியோருடன் நானும் என்னாலான சிறுபங்கினை அளிக்கும் ஒரு துரும்பாக இருந்திருக்கிறேன். ஆகவே எனக்குத் தெரிந்தவற்றை இக்கட்டுரையில் சேர்க்க வேண்டிய கடப்பாடு எனக்கிருக்கிறது.

1984ம் ஆண்டின் பின்னர் சுமார் எட்டு வருடங்கள் சென்னையில் வாழ்ந்தேன். 1987ல் சென்னை வந்திருந்த பரிஸ் நகரில் வாழ்ந்து வந்த நண்பர் ஒருவர், மட்டக்களப்பின் அரசியல்-சமூகமாற்றங்களில் நான் வகித்த பங்கினை எழுதுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். அவர் கோரிக்கையை ஏற்று அப்பணியைத் தொடங்கினேன். எனினும், அதனை நிறைவு செய்ய முடியாமற் போய்விட்டது. இடையில் திரு.சிவநாயகம் அவர்கள் சென்னை வந்திருந்தபோது, எனது விருப்பத்தை அவரிடம் தெரிவித்தேன், "பத்மன் இப்பணியைச் செய்ய மட்டக்களப்பில் உம்மை விட வேறு எவருமே இல்லை. ஆகவே எழுதும்!" என்று உற்சாகமளித்தார்.

திரு.சிவநாயகம் அவர்களை எனது ஆதர்ஷகுருவாகக் கொண்ட நான் அப்போது அப்பணியைத் தொடரமுடியாது போய்விட்டது. இன்று அவர் தெய்வீக நிலையிலிருந்து எனக்கு உறுதுணைபுரிந்து ஊக்கமளிக்கிறார்.

கம்யூனிஸ்ட் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பத்திலிருந்தே, அக்கட்சியின் உறுப்பினனாகச் சேர்ந்து தொண்டாற்றினேன். ஆங்கில உதவி ஆசிரியராக ஒரு வருடம் மெதடிஸ்து மிஷன் பாடசாலைகளில் பணி புரிந்து விட்டு, களுதாவளை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் மேலும் மூன்று வருடங்கள் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்தேன்.

இலங்கைப் பொதுவுடைமைக் கட்சியின் கூட்டம் ஒன்றை அவ்வூர் இளைஞர்கள் சிலர் சேர்ந்து ஏற்பாடு செய்திருந்தனர். கட்சித்தலைவர்கள் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா மற்றும் பீட்டர் கெனமன் போன்றவர்கள் கூட்டம் நடைபெறுவதாகவிருந்த கொம்புச் சந்திக்கு வந்து விட்டார்கள். ஆனால் அவர்களை வரவழைத்த இளைஞர்கள் அனைவரும் தலை மறைவாகி விட்டனர்.

பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக அப்போதிருந்த திரு.எஸ்.யூ. எதிர்மன்னசிங்கம் அவர்களின் ஆதரவாளர்களே அந்த இளைஞர்களை, கூட்டத்துக்குச் செல்லவிடாமல் தடுத்துவிட்டனர். கூட்டம் நடைபெறுவதாகவிருந்த கொம்புச் சந்தியடியின் முன்புறமாகவே நான் பணி புரியும் பாடசாலை இருந்தது. கூட்டத்துக்கு வந்திருந்த தலைவர்களை நானே முன் சென்று அழைத்து பள்ளிக்கூடத்தில் உபசரித்துவிட்டு, அவசரஅவசரமாக பாடசாலைத் தளபாடங்களைக் கொண்டு சிறு மேடை அமைத்து, கூட்டத்தை ஆரம்பித்து வைத்தேன். நான் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்த போதிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுவுடமைக் கொள்கையில் ஓரளவு பிடித்தமும் உள்ளவன், என்று கூறிக்கூட்டத்தை நடத்தி முடித்தேன். இதனால் சிலருடைய கடுங்கோபத்துக்கும் ஆளானேன் என்பதனையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

மூன்றாண்டுகளின் பின்னர் ஆங்கில உதவி ஆசிரியத் தொழிலின் ஒப்பந்த காலம் முடிவடைந்துவிடும். இதன் பின் மிஷன் நிர்வாகம் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டும். எனக்கு சில எதிர்ப்புக்களின் மத்தியில் ஆசிரியப் பணிதந்த ஸ்ரீமத் சுவாமி நடராஜாநந்தாஜி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று விட்டார். அவருடைய இடத்துக்கு வந்திருந்த சுவாமி கூடஸ்தானந்தாஜி அவர்கள் எனது ஒப்பந்த காலத்தைப் புதுப்பிக்க மறுத்துவிட்டார்.

தொழில் பறிபோனது

எனக்கு இசையிலும் நடனத்திலும் ஈடுபாடு இருக்கிறது என்று தெரிந்து கொண்ட சுவாமி அவர்கள், "உமது திறமை ஒரு பள்ளிக் கூடத்துடன் மட்டும் முடங்கி விடக் கூடாது. இ.கி.மி.பாடசாலைகள் அனைத்துக்கும் சென்று உமது கலையை மாணவர்களுக்கு நீர் பயிற்ற வேண்டும். இதற்காக மிஷனில் ஒரு இலிகிதர் பணியில் உம்மை நியமிக்கிறேன். ஆசிரியர் தொழிலில் உமக்குக் கிடைத்த அதே சம்பளம் (மாதச் சம்பளம் ரூ 60.00 மற்றும் அலவுன்ஸ் ரூ 60.00) மொத்தம் ரூ 120.00 மட்டும் மாதாந்தம் உமக்குத் தந்துவிடுகிறேன்!" என்று வாக்களித்தார். ஆனால் இவ்வாக்குறுதி நிறைவேற்றப்படவேயில்லை.

திரு.கங்கையா

1950ம் ஆண்டில் நான் முதன் முதலில் ஆங்கில ஆசிரியராகப் பணி ஏற்ற போது கோட்டைமுனையில் வெல்லிங்டன் புத்தக சாலை நிறுவப்பட்டது. இந்தியாவில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.கங்கையா என்பவர் இப்புத்தக சாலையின் நிர்வாகியாகப் பணி ஏற்றார். இவருடைய மனைவி திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

திரு.கங்கையா அவர்களுக்குத் துணையாக சிற்றாண்டியைச் சேர்ந்த திரு.எம்.பி. குமார் அவர்கள் வந்து சேர்ந்தார். திரு.சிவநாயகம் அவர்களால் நிறுவப்பட்ட சித்திரா ஸ்ரூடியோவில் இருவாரங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும் பகுத்தறிவு இயக்கக் கூட்டங்களில் இவர்கள் இருவரும் கலந்து கொள்வார்கள்.

திரு.குமார் அவர்கள் இயல்பாகவே ஒரு ஓவியக்கலைஞர் என்பதை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். சித்திரா ஸ்ரூடியோவில் ஓவியராக இணைந்திருந்த திரு.எம்.ஏ.ரஸாக் அவர்கள் திரு.குமாரின் ஓவியக்கலை ஆற்றலுக்கு மேலும் மெருகூட்டினார்.

1951ம் ஆண்டு தீபாவளிக்குச் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. கல்கி தீபாவளி மலர் வெளிவரவிருப்பதால், அதற்கான ஒரு விளம்பர அட்டையை எழுதி வெல்லிங்டன் புத்தக சாலையின் முன்புறம் குமார் வைத்திருந்தார். இந்த விளம்பரத்தைப் பார்த்த பல ஆஸ்திகர்கள் புத்தகக்கடையை அடித்து நொறுக்கி, திரு.குமார் அவர்களையும் ஒழித்துக்கட்டத் துணிந்துவிட்டனர்.

தீபாவளி மலர் பற்றிய விளம்பரத்தில் பிள்ளையார் கல்கி புத்தகத்தை விரித்துப் படித்தபடி ஒரு வீதியால் நடந்து செல்கிறார். 'கல்கிப் பத்திரிகை விளம்பரத்துக்காக, கடவுளென வணங்கப்படும் கணபதியின் படத்தைப் போட்டுக் களங்கப்படுத்தலாமா?' என்பதுதான் ஆஸ்திகர்களின் வாதம்.

சித்திரா ஸ்ரூடியோவின் அருகிலேயே சிங்கர் மெஷின் நிறுவனம் இருந்தது. இதன் உதவி நிர்வாகிகளாகவிருந்த எனது நண்பர்களும் உறவினர்களுமான காலஞ்சென்றவர்களான திரு.சிற்றம்பலம் மற்றும் 'சற்றர்டே கந்தசாமி' பின்னர் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினராகவிருந்த திரு. கணேசமூர்த்தி ஆகிய மூவருடன் நானும் இணைந்து, சில மாதங்களுக்கு முன்னர் வெளிவந்திருந்த கல்கி இதழ் ஒன்றைத் தேடி எடுத்தோம். அதில் ஒரு பக்கத்தில், குமார் அவர்களால் வரையப்பட்டிருந்த-'பிள்ளையார்' கையில் கல்கியை வாசித்துக் கொண்டு தெருவில் நடந்து போகும் காட்சி அச்சாகி இருந்தது. இதனைப் பல ஆஸ்தீக நண்பர்களிடம் காட்டினோம்.

கல்கியின் உரிமையாளர் திரு.சதாசிவம், ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பிராமணர்களாகவிருந்தும் பிள்ளையார் படத்தை விளம்பரத்துக்காகப் பயன்படுத்தி இருக்கும் போது, புத்தகம் விற்கும் கடையில் அதேபடத்தைப் பெரிதாக வரைந்து வைப்பதில் தவறு என்ன இருக்கிறது, என்று வாதிட்டோம்.

இந்த வாதத்துக்குத் துணைபுரிவது போல் அடுத்தவாரம் வெளிவந்த கல்கி வார இதழில் அதே பிள்ளையார் கல்கி வாசிக்கும் படம் தீபாவளி மலரின் வருகைக்குக் கட்டியம் கூறியது. இதனைத் தொடர்ந்து சண்டைபிடிக்க வரிந்து கட்டிய ஆஸ்திகர்கள் அடங்கி ஒடுங்கினர்.

'சற்றர்டே கந்தசாமி'

எவருக்காவது அவருடைய நண்பர்கள் ஏதாவது ஒரு அடைமொழியை பட்டமாகச் சூட்டுவார்கள். பொதுவாக அவ்வாறு சூட்டப்படும் பட்டம் அவரைக் கிண்டல் படுத்துவதாகவும் கேவலப்படுத்துவதாகவும் கருதப்படுவது வழக்கம்.

சில வருடங்களுக்கு முன்னர் காலமாகி விட்ட எனது பால்ய நண்பர் காலஞ்சென்ற திரு.க.கந்தசாமி அவர்களை 'சற்றர்டே' என்ற பட்டத்துடன் குறிப்பிடப்பட்டால் மட்டுமே அனைவருக்கும் தெரியும். இவருடைய உயரம் சற்றுக் குறைவானது. இத்துடன் சியாமள வண்ணன் என்று குறிப்பிட்டக் கூடிய வகையில் கருமை நிறமுடையவர். இவருடைய வாயிலிருந்து ஆற்றொழுக்குப் போல் தமிழ் பாய்ந்தோடும். இவருடைய எழுத்துக்களும் எப்போதும் எதுகை மோனையுடன் கவிதை நடையில் அமைந்திருக்கும் தமிழ் இலக்கியத்தில் ஓரளவு பரிச்சயமும் இருந்தமையினால் தமிழரசுக் கட்சியால் நடத்தப்படும் பொதுக் கூட்டங்களில் 'சற்றர்டே' கந்தசாமி பேசுகிறார் என்றால் அதற்கு ஒரு தனி மவுசு இருந்தது.

திரு. கந்தசாமியை 'சற்றர்டே' என்று மக்கள் கூட்டத்தின் மத்தியில் அழைத்தாலும் அவர் அதனை பெருமையுடனும் பெரு மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொள்வார்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு புதிய ஆடைகளையோ அல்லது தோய்த் தெடுத்த நல்ல ஆடைகளையோ தான் தெரிவு செய்து அணிவார். தான் பிறந் ததே ஒரு சனிக்கிழமையில் தான் என்று பெருமையுடன் கூறும் அவர் 'சற்றர்டே' என்பதை தனக்கு பெருமையளிக்கும் பட்டப் பெயராகவே கருதினார்.

இத்தொடரில் 'சற்றர்டே கந்தசாமி' என்று நான் குறிப்பிடுவதை திரு.கந்தசாமி அவர்களின் குடும்பத்தவர்கள் எவரும் தப்பாகக் கருதமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

மேடைப் பேச்சுகள் மட்டுமன்றி சாதாரணமாக நண்பர்களுடன் உறவாடும் போதும் எல்லோரையும் வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை பொதிந்த பேச்சுக்களையே பேசுவார்.

எங்களுடன் நெருங்கி உறவாடிய மற்றுமொரு நகைச்சுவையாளர் திரு. கணேசமூர்த்தி அவர்கள். இவர் மட்டக்களப்பு மாநகர சபைக்கான முதலாவது தேர்தலில் மோர்சாப்பிட்டித் தொகுதியில் போட்டி போட்டு வெற்றியீட்டியவர். மட்டக்களப்பு விஜயா திரையரங்கில் 'சினிமா புரோஜேக்டர் ஒப்பரேட்டராகக் கடமை பார்த்தார். பின்னர் திரு.கே.குணரத்னம் அவர்கள் ஹெந்தளையில் நிறுவிய விஜயா ஸ்டுடியோவிலும் பணிபுரிந்தார்.

தனது மாணவப் பருவத்திலேயே மரணமடைந்த, எங்கள் குழுவைச் சேர்ந்த மற்றுமொருவர் ஆரோக்கியநாதன் அவர்கள். இவருடைய சிரிப்பைப் பார்த்து இர சிப்பதற்காகவே திரு சந்தசாமி அவர்களையும் எப்போதும் எம்முடன் இணைத்துக் கொள்வோம். கந்தசாமி அவர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு நகைச் சுவைத் துணுக்குக்கும் ஆரோக்கிய நாதன் பலத்த சத்தத்துடன் வெடிச் சிரிப்பை உதிர்ப்பார்.

மாணவப் பருவத்திலேயே அரசியலிலும் பகுத்தறிவு இயக்கக் கொள்கையிலும் ஈடுபாடு கொண்டு இணைந்த மேற் கூறப்பட்டவர்களுடன் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய மற்றுமொருவர், 1990ம் ஆண்டு இன மோதல்களின் போது காணாமல் போய்விட்ட திரு ஆனந்தராஜா அவர்களும் ஒருவர். இவர் எப்போதும் அமைதியாகவே இருந்து ஆணித்தரமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் கூறுவதில் வல்லவராக விருந்தார்.

(இன்னும் வரும்)

அரங்கம் அந்தரங்கம்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 62

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

"அரேபிய நாடுகளில் இருந்து பெருமளவு தங்கம் கடத்துவது அவரது தொழில். அதில் எங்களையும் ஈடுபடுத்தினார். என் சகோதரியின் பெயர் இந்திரபுஷ்கரணி. ஒரு முறை கள்ளக் கப்பலில் துபாய்க்குப் போய் திரும்பும்போதே என் சகோதரிக்கும் அவருக்கும் காதலேற்பட்டு விட்டது. அவளை மதம் மாற்றி அவர் மணந்து கொண்டார். என்னை விமான சர்வீசில் பணிப்பெண்ணாக சேர்த்து விட்டார். அதோடு பெரிய மனிதர்கள் வரும்போது, அவர்களை உபசரிக்க என்னைத்தான் அனுப்புவார். விமானத்திலேயே பெரிய மனிதர்களை நான் சிநேகம் பிடித்துக் கொள்வேன். உங்கள் எழுத்துக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால்தான் ரிட்ஸ் ஓட்டலுக்கு அத்தனை நாட்கள் நான் தொடர்ந்து வந்தேன். ஒரு நாள் கூட நீங்கள் என்னைத் தொடவே இல்லையே...!" என்றாள் அவள்.

'ஓ! இவளும் அப்படிப்பட்டவளா...!' என்று எனக்கு அப்போதுதான் தோன்றிற்று.

கறி சாப்பிடுவது என்று ஆரம்பித்து விட்டால் மாட்டுக் கறியும், பன்றிக் கறியும் என்ன மரத்தால் செய்தவையா, அவற்றையும் சாப்பிட்டு விட வேண்டியது தானே!

"உனக்கு இதுவரை யார் யாரிடம் தொடர்பு உண்டு...?" என்று நான் கேட்டேன்.

"பட்டியல் தேவையா? ஏன், ஏதாவது பத்திரிகையில் போடவேண்டுமா?" என்றாள் அவள்.

"இல்லை, சுயசரிதம் எழுதும் போது இது மாதிரி விஷயங்களை நிறைய எழுதினால்தான் ஜனங்கள் படிக்கிறார்கள்!" என்றேன்.

"அப்படியென்றால் இப்போது நாம் சந்தோஷமாக இருக்கப் போகிறோமா..." என்றாள் அவள்.

"என்ன கெட்டுப் போய்விட்டது!" அவள் என்னை நெருங்கினாள், அவளை நான் தொடவில்லை என்று எழுதினால் ஏய்க்கிறான் என்பார்கள், "அதற்காகவாவது...?" என்றேன் நான்.

அவள் என்னை முத்தமிட்டாள். ஒரு காகிதப்பூ உடம்பில் படுவது போலிருந்தது.

'நம்மைத் தவிர வேறு யாரும் தீண்டாத உதடு' என்றிருந்தால் தானே நமக்குச் சந்தோஷமாக இருக்கும்!

"வரலாமா...?" என்று கேட்டுக் கொண்டே கற்பகம் உள்ளே நுழைந்தாள்.

"வந்த பிற்பாடு வரலாமா என்ன வரலாமா...!" என்றேன் நான். எரிச்சலோடு.

"உங்கள் ரசனைக்கு நான் குறுக்கே நிற்கிறேனோ...?" என்றாள், அவள்

"ரசனை என்ன, கருமாதி ரசனை? தாயின் கருவில் இருந்து வெளிவரும் போதே மனிதன் கண்கள் திறந்திருந்து, புத்தியும் வேலை செய்து கொண்டிருந்தால், இந்த ரசனைக்கே வந்திருக்க மாட்டான்!" என்றேன், நான்.

"எல்லோரும் அப்படி ஆகிவிட்டால் உலகம்தான் இயங்குவது எப்படி?" என்றாள் கற்பகம்.

"என்ன கற்பகம் உலக இயக்கம் நின்று விடுமே என்று கவலைப்படுகிறாயா? இல்லை ஆடவர்கள் பிறக்காமல் போய் விடுவார்கள் என்று கவலைப்படுகிறாயா?" என்றேன், நான்.

கற்பகம் அதற்குப் பதில் சொல்லாமல் எனது இடது புறம் அமர்ந்தபடி ஒரு தோளில் கைவைத்து, "அவள் போகட்டும்; நான் இங்கு இருக்கிறேன்...!" என்றாள்.

"ஏன்...?" என்று கேட்டேன்.

"திடீரென்று சந்திரசூரியன் வந்திருக்கிறாராம்; அரசாங்க விருந்தினர் விடுதியில் தங்கியிருக்கிறாராம். அவருக்கு சந்திரபுஷ்கரணி வேண்டுமாம்!" என்றாள் கற்பகம்.

கள்ளக் கடத்தல் ஒரு நாட்டுக்கு விரோதமாக இருக்கலாம்; சட்டப்படி குற்றமாக இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு அதனால் விளையும் சாதக பாதகங்கள் என்ன?

வெளிநாட்டுப் பொருள்களின் கள்ள இறக்குமதி உள் நாட்டுத் தொழில்களைப் பாதிக்கும் என்பது உண்மையே.

ஆனால் வெளி நாட்டில் இருந்து வருகின்ற தங்கம் உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துமா. பலவீனப்படுத்துமா?

மாபெரிய சீன தேசத்தில் கல்கத்தாவைப் போல ஒரு நகரம்தான், ஹாங்காங் என்பது. அது இன்னும் காலனியாக இருந்து வருகிறது. சீனா நினைத்தால் ஒரு மணி நேரத்தில் காலனி ஆதிக்கத்தை அகற்றிவிட முடியும், அது நினைக்க வில்லை; விரும்பவும் இல்லை.

காரணம் என்ன?

அங்கிருந்து தங்கம் ஏராளமாக சீனாவுக்குள் வருவதை அது வரவேற்கிறது.

மேலை நாட்டில் புதிதாகச் செய்யப்பட்ட எந்தப் பொருள் ஹாங்காங்கிற்கு வந்தாலும், அது சீனாவின் உட்பகுதிக்கு நுழைகிறது. சீனத்து நிபுணர்கள் அதை உடைத்துப் பார்த்து அது போன்ற பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு தாங்களே தயாரித்து விடுகிறார்கள்.

ஆகவே கள்ளக் கடத்தலில் நன்மையும் இருக்கிறது; தீமையும் இருக்கிறது.

கடத்தல்காரர்கள் என்று முத்திரை குத்திப் பல பேர்களை நாம் கைது செய்தோம். சொல்லப் போனால் அவர்களைவிட மோசமானவர்கள் தான் அவர்களைக் கைது செய்ய உத்தரவிட்டார்கள்.

கவியரசு கண்ணதாசன்

இந்திய கடத்தல்காரர்களில் பூலர் மற்ற தொழில் பணக்காரர்களைவிட உத்தமர்கள்; யோக்கியர்கள்; கருணையுள்ளவர்கள்; வள்ளல்கள்.

இந்த நாட்டு அரசியல்வாதிகளை விட, அவர்கள் ஒன்றும் மோசமானவர்கள் அல்ல.

(அந்தரங்கம் வரும்)

மேல்நாட்டு மருமகள்

அல்வையூர் காந்தி அருணாசலம் – கனடா

என்னை உங்களுக்குத் தெரியுமோ, என்னவோ? என்ரை ஆத்தை, அப்பு எனக்கு மீனாட்சி எண்டு நல்ல பெயர் தான் வைச்சவை. ஆனால் இப்ப இந்த இரண்டும் கெட்டான் வயசில் வாலுகள் இருக்குதுகளே, அதுகள் "மீனாப்பாட்டி!" எண்டு கூப்பிடுதுகள். அவள் ஆரோ நடிக்கிறவளாம். அவளை மாதிரி மீன் போலை வடிவான கண்ணாம் எனக்கு. நக்கலடிக்குதுகள். எனக்கு விளங்காதே என்ன? ம்..... காவோலை விழக் குருத்தோலை சிரிக்கிறது தானே?

எல்லாம் போக எதையோ சொல்ல வந்திட்டு என்னன்னவோ கதைக்கிறன். உப்புடித்தான் இப்ப எல்லாம் ஒரே மறதி. வாற ஆடி வந்துதெண்டால் எனக்கு எண்பத்தெட்டு வயசு. கண்ணும் காதும் நல்ல கூர்மை. ஒருத்தருக்கும் சொல்லிப் போடாதையுங்கோ மோனை நாவூறு பொல்லாத சாமான். உடம்புதான் ஓடி ஆடித் திரிய முடியேல்லை முச்சிறைக்குது.

இவரும் என்ரை மனுசனைத் தான் சொல்லுறன். முண்டு வருசத்துக்கு முந்தி என்னை விட்டிட்டுப் போட்டார். அவரிருக்கும் மட்டும் எனக்கு ஒரு குறை வைக்கேல்லை. மீனாட்சி, மீனாட்சி எண்டு என்னோடை ரொம்பவும் பட்சமாயிருந்தார். இவன் இளையவன் செய்த வேலையாலை திடீரெண்டு நெஞ்சைப் பிடிச்ச மனுசன் பொட்டெண்டு போய்ச் சேர்ந்திட்டார்.

எனக்கு முத்துப் போலை ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள் கலியாணம் கட்டுமட்டும் நல்லமாதிரித்தானிருந்தவங்கள். முத்தவன் சந்திரன் கொழும்பிலை வேலை. இளையவன் ராசன் கனடாவிலை. அவன் அங்கை போனாப்போலை பேரையும் ராஜா எண்டு மாத்தி ஒரு வெள்ளைக்காரியையும் கட்டியிட்டான். அந்த வெக்கக்கேட்டைத் தாங்காமல் தான் இந்த மனுசன் படுத்த படுக்கையாகி என்னை விட்டிட்டுப் போனவர். என்ன செய்தாலும் வெள்ளைக்காரியை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமே? அதோடை வேதக்காறப் பொடிச்சியாம். இனி என்ன செய்யிறதெண்டு எல்லாருந்தான் எங்களைச் சமாதானப்படுத்தப் பாத்தினம். நாங்கள் இடம் குடுக்கேல்லை உவன் செத்த பிள்ளைக்குச் சமனெண்டு இவர் சொல்லிப் போட்டார். அவர் சீறின கோட்டை நான் மட்டும் தாண்டிப்போடுவனே?

இப்ப நாலு வரியமாச்சு இவர் போனாப் போலையும் நான் கடிதம், பேச்சு ஒண்டுமில்லை. ஆனால் பொடியனும் அவன்ரை மனுசி நாஞ்சியோ என்ன நாசமோ, வாய்க்குள்ளையும் வராதாம் அந்த வெள்ளைக்காரியும் மாதம் ஒரு கடிதம் தவறாமல் போடுவினம். உதைக் கொண்டுபோய் குப்பைக்கை போடடா, எண்டு முத்தவனிட்டைச் சொல்லுவன். எண்டாலும் உங்களுக்குச் சொன்னாப் போலை என்ன, இந்தப் பெத்த வயிறு கேக்குதே? ஒருத்தரும் இல்லாத நேரம் இரகசியமாக் கடிதத்தை வாசிச்சுப் பாப்பன். பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு எண்டு சும்மாவே அந்தக் காலத்திலை சொன்னவை. என்னை வந்து தங்களோடை கனடாவிலை இருக்கட்டாம். அவள் இங்கிலிசிலை எழுத இவன் மொழிபெயர்த்திருக்கிறான். என்ன குடும்பமோ? உதுக்குள்ளை நானும் போய்.... நல்ல கூத்துத்தான். வெள்ளைக்காரியோடை போய் மாரடிக்க எனக்கென்ன தலையெழுத்தே?

இஞ்சை என்ரை மூத்தவன் என்ரை அண்ணன்ரை பொடிச்சியைத்தான் கட்டி நான் அவையோடதானிருக்கிறன். முந்தி அவள் ஒரு மாதிரிப் பிழையில்லாமல் இருந்தவள். இப்ப நானும் வேலை செய்ய முடியாமல் ஓரிடமாயிருக்க என்ரை காதுபடவே புறுபுறுக்கிறாள். எப்ப மாமியெண்டதை மாத்திக் கிழவியெண்டு கூப்பிட்டாள் எண்டு எனக்கு மறந்து போச்சு. இப்ப பேரப்பொடியளும் கிழவி எண்டு தான் கூப்பிடுதுகள். சாப்பாடும் வேண்டாவெறுப்பாத்தான். கடைசியாக் கிடக்கிற மிச்சச் சொச்சத்தோட வரும். இவன் பொடியனும் ஒண்டும் சொல்லக் காணேல்லை. இவரும் போய்ச் சேந்திட்டார். எனக்கு ஆரிருக்கினம்? மனசுக்குள்ளை வேதனைதான்.

இளையவன் இருந்திருந்து பாத்திட்டுக் கனடாவாலை வந்தவன், என்ரை நிலையைப் பாத்துப் போட்டு கையோட கூட்டிக் கொண்டு கனடாவுக்கு வந்திட்டான். சொந்த மருமேளே பாக்கேல்லை. இந்த வெள்ளைக்காரி என்ன கிழிக்கப் போறாளோ? அங்கை அந்த மருமகள் படுத்தின பாட்டிலை ஓமெண்டு வந்திட்டன். எண்டாலும் நெஞ்சுக்கை திக்குத்திக்கெண்டு அடிக்குது. என்ரை மனுசன் போகேக்கை நானும் போயிருந்தால் ஒரு தொல்லையுமில்லை.

இவள் வெள்ளைக்காரியின்ரை கதை ஒண்டும் எனக்கு விளங்கேல்லை. கண்ணைக் கூசுற மாதி உடுப்பு கையையும் காணேல்லை, கழுத்தும் சீழே இறங்கிக் கிடக்கு துடையெல்லாம் தெரியுது. உடம்பை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு.... உவ்வே எனக்கு பாக்கவே வாந்தி வருது துப்பரவாய் பிடிக்கேல்லை. உவன் பொடியன் ஒண்டும் சொல்லுறேல்லைப் போலை. ஆனால் மாமி எண்டு இரண்டு சொல்லைத் தமிழிலை தெரிஞ்சு வைச்சு எனக்குத் தலைக்கு மேலை வைச்சுப் பாக்கிறாள். நான் ஒண்டும் செய்யத் தேவையில்லை எல்லாம் இருக்கிற இடத்தை வருகுது. கண்களை அகல விரிச்சு சிரிச்சபடி அடிக்கடி வந்து எட்டிப் பாக்கிறாள். எத்தினை நாளைக்கு இந்தக் கவனிப்பு எண்டு நினைச்சன் ரெண்டு வருசம் ஓடிப் போட்டுது? கவனிப்பிலை மாற்றமில்லை.

நேற்று ஃப்ளூ எண்டு இஞ்சை ஒரு காய்ச்சல் மருமகள் நான்சி லீவு போட்டிட்டு நிண்டு என்னைக் கவனிக்கிறாள். எனக்கு ஒரே ஆச்சரியம் கண் முழிக்க முடியாமல் அப்பிடியொரு காய்ச்சலில் நான் கிடக்க, என்ரை தலையை இழுத்து, தண்ணி பருக்கி, சீலை மாத்தி எல்லாத்தையும் நான்சியே செய்கிறாள். மகனும் வேலையாலை வந்தவுடன் அம்மா எண்டு என்னை வந்து பாத்த பிறகு தான் உடுப்பே கழட்டப் போகிறான். அது சரி வெள்ளைக்காரியள் பொல்லாதவளவையெண்டு தானே சொல்லுறவை. என்ரை சொந்த இரத்தமுமில்லை. சாதி சனமுமில்லை. அட அதுதான் போச்செண்டால் வேதக்காரி. என்ரை சமயமுமில்லை. பெத்த தாயைப் பாக்கிற மாதிரியல்லோ இந்த நான்சி என்னைப் பாக்கிறாள். நான் நான்சியெண்டு என்ரை மருமகளின்ரை பேரை வடிவாச் சொல்லுறன் எண்டு உங்களுக்கு அதிசயமாயிருக்கும். இப்ப எனக்கு... ஹி..! ஹி..... கொஞ்சம் இங்கிலீசும், மருமகளுக்கு நிறைய தமிழும் தெரியும். இந்த வெள்ளைக்கார மருமகளை பாத்தாப் போலைதான் எனக்கு ஒண்டு விளங்குது. சாதி, மதம், மொழிக்கு மேலாலை மனுசர் எண்டு சிலர் எங்கையோ வாழ்ந்து கொண்டு தானிருக்கினம். இல்லையா? உங்களையும் கனநேரமா மினைக்கடுத்திப் போட்டான் சரி, வரட்டா?

தாலிக் கொடி

ரூபராணி

ஒழுங்கையைத் தாண்டி அந்தச் சின்னஞ்சிறு வீட்டுக்கு வந்து விட்டான் கண்ணன். அக்கம் பக்கமெல்லாம் சந்தடியின்றி அமைதியாக இருந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அம்மா, அப்பா!"

அறைக் கதவைத் தட்டினான் கண்ணன். பதில் இல்லை பின்பக்க வழியாகச் சென்று குசினிப்பக்கமாக இருந்த யன்னல் தகடை நீக்கிப் பார்த்தான். எல்லாம் போட்டது போட்டபடி கிடந்தது. யாரும் இல்லையே. 'எங்கே போனார்கள்?' எண்ணிய வேகத்தில் கண்ணன் சொர்ணம் அக்காவின் வீட்டை நோக்கி ஓடினான். "அக்கா அம்மாவையும் அப்பாவையும் காணல்லியே? எங்க போனாங்க? உங்களிட்ட சொன்னாங்களா?" கண்ணன் படபடப்புடன் கேட்டான்.

"டேய் கண்ணா, நீ வெசாக்கூடுபாக்கக் கேட்டியாமே?"

"ஓமக்கா கேட்டன். அவ அதப்பாத்து நமக்கென்னவரப் போகுது. போகாத எண்டு சொன்னா நான் முரளி வீட்டபோனன் இப்ப அவங்க பொயிற்றாங்களா வெசாக் பாக்க?" கண்ணன் கேட்டுமுடிவதற்கிடையில் சொர்ணம் அவசரப்பட்டாள்.

"டேய் இதக்கேளு, வெசாக்குக் காட்ற இடத்தில பெரிய பிரச்சினையாம் குண்டு வெடிப்பு, துவக்குச் சூடெண்டு சனம் கல வரப்பட்டு ஓடுதுகள். அம்புலன்ஸ் வண்டிகள் அலறிக்கொண்டு ஓடுது என்னவெண்டு தெரியல்ல. உன்ர அம்மாவும் அப்பனும் உன்னத்தேடிப் போனாங்க. நீ வெசாக் கூடுபாக்க ஆசப்பட்டு அங்க போயிருப்பியோண்டு. போய் வெகுநேரம் இன்னமும் காணல்லியே!" சொர்ணம் கவலையை, வெளிப்படுத்தினாள். கண்ணன் முகத்திலும் கவலை தொற்றிக் கொண்டது.

"அக்கா நான் போய் பார்க்கப்போறன்!"

"டேய், நீ சின்னப் பொடியன். நீ எப்படிப்போற, ஊர் இருக்கிற நிலைமையில எல்லாம் பயங்கரமாக்கிடக்கு உன்ரை அம்மாவும் அப்பனும் வந்து உன்னைக் கேட்டா நான் என்ன சொல்ற? பேசாமப் போய் புளியமரத்தடியில சிட்டி விளையாடுற பொடியனுகளோட நீயும் விளையாடு. நான் முத்தையாப் பெரியப்பாவைப் போய்ப் பாக்கச் சொல்றன்!" சொர்ணம் அக்கா சொன்னதும் கண்ணன் புளியமரத்தடியை நோக்கிச் சிட்டாகப் பறந்தான். திடீரென்று சொர்ணம் நாக்கைக் கடித்தாள். 'என்னமறதி எனக்கு, கண்ணன்ர அப்பா வேலுப்பிள்ளை வெள்ளாம வெட்டிய காசில அவர்ர பெண்டாட்டிர தாலிக்கொடி அடகுவச்சத எடுக்கப்போறன் எண்டு சொன்னது மறந்திட்டனே' என்ற யோசனையில் ஆழ்ந்தபோது முத்தையா வந்து சேர்ந்தார். வந்ததும் வராததுமாக சொர்ணக்கா! விஷயத்தைச் சொல்ல முத்தையா முகத்தில் உருண்ட வேர்வையைச் சால்வையால் துடைத்தபடி வீதிக்கு வந்து விட்டார். எங்கும் மயான அமைதி. இனம் தெரியாத பயம் அவரைப் பற்றிக் கொண்டது நடையின் வேகத்தைக் கூட்டியபோது நல்லதம்பி மாஸ்டர் குறுக்கறுத்தார்.

"மாஸ்டர், வெசாக் பாக்கப்போன வேலுப்பிள்ளையையும் அவர்ர பொஞ்சாதி பூரணியையுங்காணல்ல நான் எங்கபோய்த் தேடுற?" முத்தையா பரிதாபமாகச் சொன்ன கதையைக் கேட்ட நல்லதம்பி மாஸ்டர் பதைபதைத்துப்போனார். "அடக்கடவுளே, உனக்கு விஷயமே, தெரியாதா? புதினம் பாக்கப் போன ஆக்களுக்கு என்ன நடந்ததெண்டு ஆஸ்பத்திரில போய்ப் பாத்தாதெரியும். நாடு கிடக்கிற கிடையில என்ன புதினம் வேண்டிக்கிடக்கு!" மாஸ்டர் முணுமுணுத்தபடி சென்றார்.

முத்தையாவுக்குப் பகீரென்றது. கணப் பொழுதில் அவருடைய மனம் எதையெதையோ கற்பனை செய்தது. முருகப்பெருமான் கை விடமாட்டார் என்று தனக்குள்ளே வேண்டியபடி ஓட்டமும் நடையுமாகச் சென்று ஆஸ்பத்திரிக்குள் வந்து விட்டார். அங்கு அவர் கண்டகாட்சி அவரை நிலைகுலைய வைத்து விட்டது. வரிசையில் விறகுக் கட்டைகள் போல் கிடக்கும் சடலங்கள். பூமியை நனைக்கும் சிவப்பு இரத்தம். சன்னம் துளைத்த முகங்கள். மூளைகள், உறவுகளின் அலறல் கதறல். முத்தையாவுக்குத் தலை சுற்றியது. "மாமாங்கப் புள்ளையாரப்பா!" என்று சொல்லயபடி ஒவ்வொரு சடலமாக உற்று நோக்கிய முத்தையாவுக்கு மூச்சுநின்று விடும் போலிருந்தது. குருதி வடிந்தமுகத்துடன் கிடந்த கடைசிச் சடலம் வேலுப்பிள்ளையினுடையது. முத்தையாவின் கண்களில் நீர் அருவியாய் ஓடியது. 'இன்று உலகச்சந்தையில் மலிவுப் பண்டம் மனித உயிர்தான்' என்று எண்ணிப் பெருமூச்சுவிட்டார். கூடவே பூரணியின் ஞாபகம் அவர்நெஞ்சைத் துளைத்தது. கண்ணீரைச் சுண்டிஎறிந்து விட்டு ஆஸ்பத்திரியின் உள்ளும்புறமும் பூரணியைத் தேடினார். அவரால் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

மாலை மயங்கி இருள் பரவத் தொடங்கியது 'என்னசெய்வது? கண்ணனுக்கு என்ன பதில் சொல்வது?' என்று குழம்பினார் முத்தையா. 'இனி நிற்பதில் பிரயோசனமில்லை!' என்று எண்ணி அவர் நெஞ்சில் பாறாங்கல்லைச் சுமந்த உணர்வுடன் வீடு நோக்கி நடந்தார். வரும்போதிருந்த வேகம் இப்போது அவர்கால்களுக்கு இல்லை.

இழுத்துப் பறித்து மெதுவாக நடந்து வீடு வந்து சேர்ந்த முத்தையாவை அதிர்ச்சி கௌவியது. அவரால் நம்பமுடியவில்லை. கண்ணாடியை கழற்றிச் சால்வையால் நன்றாகத் துடைத்து விட்டுப் பார்த்தார். பூரணியும் கண்ணனும் சொர்ணக்காவின் வாசலில் புன்னகைத்தபடி நின்றனர். முத்தையாவுக்கு வைற்றைப்பிசைந்தது.

"பூரணி நீ புதினம் பாக்கப் போகல்லியா? வேலுவைக்காணல்லியா?" முத்தையா எங்கோ பார்த்தபடி கேட்டார்.

"இல்ல அண்ணே போறவழியில கணபதிமச்சானுக்கு புடையன் கொத்தின தகக் கேள்விப்பட்டன். இவர் என்ன நாவக் குடாக்குப் போகச் சொன்னார். தான் கண்ணனக் கூட்டிக்கொண்டு அங்க வருவனெண்டார்.

எங்களத் தேடி நீங்க போனதா சொர்ணக்கா சொன்னா. கண்ணன்ர அப்பாவக்கண்டீங்களா?" பூரணி ஏதுமறியாதவளாய்க் கேட்டாள். முத்தையாவுக்கு உடல் ஜில்லிட்டது. ஆயிரம்தோள் ஒருமித்துக் கொட்டியவலி அவருக்கு. "நான் காணல்லப் பூரணி!" என்றார் சோர்வுடன். மெய்யை முந்திக் கொண்டு பொய்வெளியேவந்ததை அவரால் தடுக்கமுடியவில்லை.

"அவர் என்னைத்தேடி நாவக்குடாவுக்குப் போயிருப்பார். அதவிடுங்க அண்ணே என்ர தாலிக்கொடிய மீட்டிட்டீங்களா நாளைக்கி கந்தப்பர்ர மகன்ற கலியாணம்!" பூரணி கேட்டவுடன் முத்தையாவுக்கு வேட்டித் தலைப்பில் முடிந்துவைத்த தாலிக் கொடியின் ஞாபகம் வந்தது. அவருடைய கைகளுக்கு என்றுமில்லாத நடுக்கம் முடிச்சை அவிழ்த்து தாலிக்கொடியைப் பூரணியிடம் நீட்டினார். பூரணி சட்டென்று அதை வாங்கித்தன் கருகமணி மாலையில் தொங்கிய தாலியை அதில் போட்டுக் கழுத்திலணிந்தாள். முத்தையா அவசரமாகத் தன் கண்ணீரை மறைப்பதற்கு இடந்தேடிச் சென்றார்.

பூரணி தன் கணவனுக்காக ஆவலுடன் காத்து நிற்கிறாள்.

வாழ்க்கையென்பது

இளையவன் -திருகோணமலை

கடற்கரைப்பக்கமாகவுள்ள பழைய கட்டத்திலிருந்து புதிய கட்டிடத்திற்குள் பிரவேசித்தான். அன்று திங்கட்கிழமையாக இருந்தமையினால், மருந்தெடுக்க ஏகப்பட்ட வெளிநோயாளர்கள் நீண்ட வரிசையில். சாதாரண மாக வந்து கொண்டிருக்கும்போதே தற்செயலாக அவன் பார்வையில் அவள். நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

'அவளாக இருக்குமோ...?'

மீண்டுமொரு தடவைசென்று திருப்திகாகப் பார்த்து அறிந்து கொள்ள மனசு இஷ்டப்பட்டுக் கொண்டாலும், பதவியும் பண்பாட்டு வழக்கமும் தடைக்கல்லாகின.

'இன்றைக்கு நாமும்தானே டியூட்டி!' என்ற எண்ணமேலீட்டினால் பொறுமையைக் கைக்கொண்டான்.

எவ்வளவுகூட்டமானாலும் மருந்தெடுக்கவென அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு 12.30 மணிக்குள்ளாக நன்றாகப் பரிசோதித்து சிறப்பான மருந்துகளைக் கொடுத்து அனுப்பி வைக்கக்கூடிய வல்லமை அந்த தள வைத்திய சாலைக்குண்டு. எல்லோருக்கும் மருந்துக்கான சீட்டுக்கள் எழுதிக்கொடுக்கப்பட்டு முடிவடைந்தும் இன்னும் அவளைக்காணோம்.

'ஒருவேளை பக்கத்து அறை மருத்துவரிடம் சென்றிருந்தால்...?'

வெளியே வந்தான். தூரத்தில் அவள்! அவள்தான் கைக் குழந்தையுடன்.

"அம்மா! உங்களை டாக்டர் ஐயா வரச்சொன்னார்!" ஆஸ்பத்திரி ஊழியன்.

"உள்ளே வாங்க!"

தயக்கத்துடன் அவன் மேசைக்கு எதிரே நின்று கொண்டாள்.

"உட்காருங்க...!"

அவன் சொன்னதைச் செய்தாள்.

அவனுக்குத்தெரியும் 12.30 மணிக்குப் பின்னர் மருந்தெடுப்பதற்கு அனுமதியில்லை என்று.

"சொல்லுங்க...!"

"மூணுநாளாகவே சோர்ந்த மாதிரியிருக்கு ராத்திரியில லேசான காய்ச்சலும். கண்சரியில்லை. போசாக்குக் குறைபாட்டினால் ஏதும்...?"

சட்டென்று நிமிர்ந்து முகத்திற்கு நேரே அவளை நோட்டமிட்டான். பின்னர்,

"சோதித்துப்பார்த்து முடிவாக்குவோம்!"

அவமானத்தினால் தலை கவிழ்ந்து வெட்கப்பட்டாள்.

"அப்பிடித்தான் இருக்கு. கொஞ்சம் பின்னாடி திருப்புங்க...!"

குழந்தையைத்திருப்பிக் கொண்டே,

"நான் மல்ட்டி விட்டமின் ட்ரொப்ஸ் எல்லாம் கொடுத்தும்...!"

கையை உதறிக்கொண்டு ஆட்காட்டி விரலை வாயில்கடித்து, மீண்டும் வெட்கப்பட்டாள். ரசிக்கக்கூடியதாக இருந்தமையினால் ரசித்தான்.

"நல்லது! தொடர்ந்து அதையே கொடுங்க. கூட சில மருந்துகளும் எழுதித்தாறன் சேர்த்துக் கொடுங்க. எல்லாம் சரியாகிடும்."

எழுதிக்கொடுத்த மருந்துத்துண்டைப் பெற்றுக்கொண்டு அவள் எழும்போது,

"கொஞ்சம் இருக்க முடியுமா..?" உடன் கட்டுண்டாள்.

"உங்களுக்கு என்னைத் தெரியுமா...?"

பளிச்சென்ற வார்த்தைகளினால் பளபளப்பாகவே அவள் கண்கள். குறுகிய நொடிக்குள்ளாக வேகமாகவே இடம் வலமாக ஓடின.

"நீங்க...!"

"ம். நான்தான். நீங்க ஒருவேளை மறந்திருப்பீர்களென்றுதான்...."

அவனது முகத்திற்கு நேரே மீண்டும் ஏறிட்டுக்கொண்டாள். அவனுக்கு மறக்கக் கூடிய முகமா அது....?

சிறப்பான ஆசிரியர்களினால் நடத்தப்பட்டதாலா அல்லது பிரபல்ய பெண்கள் பாடசாலைகளிலிருந்து அதிகளவானவர்கள் கல்வி கற்றுக்கொண்டதனாலா என்று தெரியவில்லை அவ்வளவு பிரபல்யம் அந்த தனியார் கல்வி நிறுவனம்.

மாணவர்களின் தொகை என்னவோ குறைவாக இருந்தாலும், பெரும்பான்மையானவர்களின் கவனமும் அவள் பார்வைக்காகவே.

அப்போது அவள் பலரின் உள்ளங்களிலும் சிறகடித்துக் கொண்டிருந்தாள். பெரிதாக அழகென்று சொல்வதற் கில்லை. றோஸ் கலந்த பொதுவான நிறம். ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவுகளைக் கொண்ட அங்கங்கள். பளிச்சென்ற வசீகரமான கண்கள். இன்னும் நிமிர்ந்த நடை எல்லாமே பலரின் பார்வைக்கான தகமைகள்.

படிப்பில் அவள் விலங்கியல் பாடத்தில் சிறப்பாக இருந்தாலும், இரசாயனவியல் மற்றும் பௌதீகம் இரண்டிலும் அவளே திறமைசாலி, எல்லோரையும் விட. விளங்கிகொள்ள வேண்டுமென்பதிலும் பார்க்க விளக்கம் கொடுப்பதனூடாக தம்மோடு பேசிக்கொள்கின்றாள் என்ற ஆவலில் எப்பவும் சக மாணவர்கள் முந்திக்கொண்டவர்கள், அன்றைய நாயகர்கள் என்ற பட்டம் பெற்றவர்களாவர். அது அவர்களுக்குள் ஓர் ஆறுதல் திருபதி.

தாவரவியல் பாடத்தில் அவளைவிட அவன் சற்றுத் திறமையாக இருந்தமையினால அவனிடம் அவளாக சிலசந்தேகங்களைக் கேட்டுக் கொள்வதுண்டு. தொடர்புகள் என்ற வட்டத்திற்குள் மற்றையவர்களைவிட அவன் அதிகமாகக்காணப்பட்டான். அந்த அனுபவங்கள், சுகந்தமான வாழ்வு, மனதைச்சுத்தப்படுத்திக் கொண்டிருந்த எண்ணங்கள் எல்லாமே காலத்தினால் அழித்துவிட முடியாத வயதின் சாட்சிகள்.

காதல் கசிவுகளைக்காட்டிக் கொள்ள பெற்றவர்கள் வழக்கமான தொனியில் தடுப்பாகிக் கொண்டாலும், படித்தவள் என்ற காரணத்தினால் அவன் பெற்றவர்கள் பெரியதான எதிர்ப்பைக் காட்டவில்லை. இருந்தும் அவள் வறுமை தடைக்கல்லானது.

அவன் ஒரு முடிவுக்கு வந்தான்

தற்போதைய அலைபாயுதே கருவுக்கு வித்திட்டவன் அவனே. கேட்டதும் அவள் சட்டென மறுத்துவிட்டாள். கற்றதைக் கொண்டு எங்காவது சென்று கஷ்டமில்லாது வாழ்ந்து விடலாம் என்ற அவன் வாதத்தை அவள் பொருட்படுத்தவில்லை. முடிவாக எதற்கும் அவள் உடன்பாடாக இல்லை. தன்னுடைய எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், ஆசைகள் எல்லாமே வீணாகிப்போன விரக்திக்குள் அவன். சோகத்தைச் சொந்தமாக்கிக் கொண்டு தூரவாகிக்கொண்டான் அவளை விட்டு.

ஆரம்பித்தது அவர்கள் வாழ்வில் ஒரு மாற்றம் புயலாக.

அவனுக்குக் சுகப்பாகிப் போன வாழ்வு அவளுக்கு நெருப்பாக சுட்டெரித்துக் கொண்டிருந்தது. காலத்திற்காகக் காத்திருங்கள் என்றவன், தன் கால்போன போக்கில் கலவரத்தினால் கடத்தப்பட்டாள்.

அவள் வடக்கு நோக்கி நகர, அதற்கு முன்னர் அவன் தெற்கு நோக்கி.

'தன்னைவிட 23 அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தும் ஏன்..?' விடைகண்டிட அவளைக் குடைந்து கொண்டிருந்தது ஒரு குழப்பம்.

"நீங்க கெம்பஸ் போகவில்லையா...?" முதலில் சிரித்துக் கொண்டாள்.

"வவுனியா, முல்லைத்தீவு, இந்தியா என்று பெரிய சுற்றாக சுற்றிவரவே காலம் சரியாக இருந்தது?" மீண்டும் சிரித்துக் கொண்டாள். அது திருப்தியாகப் படவில்லை. அவளைக் கீறிக்காயப்படுத்தும் எண்ணம் அவனுக்கிருக்கவில்லை.

"உங்கள் வீட்டுக்காரர் என்ன செய்கிறார்..?"

அதற்கும் புன்னகைதாள். பதில் சொல்வதற்குப் பதிலாக குழந்தையின் கையை எடுத்து முத்தமிட்டு எங்கோ வெறித்தாள். எதுவும் அவனுக்குப் புரியவில்லை. அவள் இஷ்டப்படவில்லை என்பதனால் அவன் கஷ்டப்படுத்தவில்லை.

'அப்பவே என்னுடன் வந்திருந்தால்...' ஒரு டாக்டரை இல்லாமற் செய்துவிட்டது பாழாய்ப்போன பிரச்சனை....' ஏக்கப்பெருமூச்சுடன் அவளைப்பார்த்துப் புன்னகைத்தான் வரட்சியாக.

'அப்பவே என் கூட வந்திருந்தால்... ஒரு டாக்டர் கிடைத்திருக்கவே மாட்டார்' அவள் மனதிற்குள் புழுங்கிக்கொண்டாலும் சாதித்ததானதொரு திருப்தி. அவள் அவனை ஏறிட்டு கடமைக்குப் புன்னகைத்து விடைபெற்றுக்கொண்டு,

பிரச்சனையினால் தாய் தகப்பனை இழந்து அநாதையாக நிற்கும் அவள் தனது அண்ணனின் முன்றாவது மகளைத் தூக்கி தோளில் சுமந்தவாறு அந்தத்தள வைத்தியசாலையை விட்டு வெளியாகிக்கொண்டிருந்தாள்.

மாறுபாடுடைய மனப்பான்மை

இலக்கிய நயம்

கைவிரல்களைக் கோர்த்துப் பிடரிக்கு வைத்தபடி மல்லாக்காக வெறுந்தரையில் படுத்திருந்தான் வேலன்.

வானத்தைப் பார்த்தபடி இருந்தான்.

எத்தனை வண்ணங்கள்!

மேகங்கள் கலைந்து கலைந்து ஒன்று சேர்ந்து பல்வேறு உருவங்கள்காட்டி ஓடிக் கொண்டிருந்தன.

யானைமீது அம்பாரியில் அமர்ந்தபடி ஒருவன் போனது தெரிந்தது.

அதன்பிறகு அது கலைந்து குதிரை ஒன்று பாய்ந்தது, முதுகில் முட்டை சுமந்தபடி முதியவன் ஒருவன் போவது போல் இருந்தது.

சற்று நேரம் கழித்து அந்த வடிவமும் கலைந்து, மேகம் ஒரு குடிசையாகத் தோற்றம் கொண்டது.

அதைத் துரத்திவந்த மற்றொரு பஞ்சுப் பொதி, பருவக் குமரியாகப் பின்னலைப் பின்னால் பறக்க விட்டபடி விரைந்தது.

வேலன் உள்ளத்தில் களி நிரம்பியது. வானில் நகரும் மற்றைய வெண்ணுருவங்களைத் தேடி அவன் கண்கள் அலைந்தன.

"என்ன வேலா, வானில் ஆராய்ச்சி?"

குரல் கேட்டுத் திரும்பிய வேலன், "வா சமரா, வா!" என்று சிரித்தபடி வரவேற்றான்.

அருகில் வந்தமர்ந்தான் சமரன்.

"என்ன வேலா, பகலிலேயே நட்சத்திரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறாயா? வானத்தைப் பார்த்தபடி என்னடா படுக்கை?"

"ஒன்றுமில்லை சமரா, இங்கே வா, வந்து பார். எத்தனை உருவங்கள். பஞ்சிலே செய்துவைத்த பொம்மைகள் அழித்து அழித்து மீண்டும் மீண்டும் வெவ்வேறு வடிவங்கள். வா, வந்து இந்த அழகைப் பார்!"

"ம்..ம்... அதெல்லாம் நீ உன் மனதிலே உருவாக்கிக் கொள்கிற வடிவங்கள். என் பார்வைக்கு அங்கே மேகங்கள் ஓடுகின்றன; அவ்வளவுதான்."

"டே..டே... இப்ப அங்கே... அதோ பார். போர்வையைப் போர்த்தபடி குந்தியிருக்கும் ஒரு கிழவன் நகர்ந்து கொண்டிருக்கிறானே... அது உனக்குத் தெரியவில்லையா? அங்கே பார் சமரா... கலைந்துவிடப் போகிறது. சீக்கிரம் பார்..."

"போடா, நீயும் உன் பித்தும்... ஒன்றுமில்லாததுக்கெல்லாம் உருவம் கொடுத்துப் பார்த்தது போதும் எழும்பு...!" கைலாகு கொடுத்து அவனை நிமிர்த்தி உட்கார வைத்தான் சமரன்.

"வெளிக் கண்ணுக்குத்தானேடா நன்றாகத் தெரிகிறது. பிறகென்ன, ஒன்றுமில்லாததைப் பார்க்கிறேன் என்று கேலி செய்கிறாய்...?"

"ம்..ம்... எல்லாக் கண்களும் பார்க்கின்றனதான். ஆனால் காட்சிகள் எல்லாம் அவரவர் மனதைப் பொறுத்ததுதான். உன் மாதிரி ஆட்களுக்கெல்லாம் சுவரில் சுண்ணாம்பு உதிர்ந்து கிடப்பது கூடச் சித்திரமாகத் தெரியும். அதேதான் எனக்கும் தெரிய வேண்டுமென்று நீ சொல்ல முடியாது."

"போடா, நீ கூர்ந்து பார்ப்பதில்லை. அவ்வளவு தான்!"

சமரன் சிரித்தான்.

"அப்படனே! இதெல்லாம் கூர்மை, ஆழம் என்று சடைகிற விஷயம் இல்லை. அவரவர் மனநிலையைப் பொறுத்தது, தென்றலில் நிற்கிறவனுக்கும் தீயில் கால் வைத்து நிற்கிறவனுக்கும் நேரம் ஒரேமாதிரி ஓடுவதில்லைத்தானே... அது போலத்தான்... காதலிக்காகக் காத்து, பூங்காவில் இருக்கிறவனும், இறந்த தந்தையின் சடலத்துக்கு மாலை வாங்கப் போகிறவனும் பூவை ஒரே போலப் பார்க்க முடியாது. அவரவர் உள்ள நிலையை ஒட்டியவைதான் காணும் காட்சிகளும்!"

"ஓ... நீ அங்கே வருகிறாயா? இன்னாத காடு இனிய ஆவதற்கும் இனிய வீடு இன்னாமை ஆவதற்கும் 'கானமும் இனியவாம் நும்மொடு வரினே' என்னும் காதலியின் மனநிலையே காரணமாகும் என்கிறாய். நான் சொல்வது அதுவல்ல. அதோ, அது புன்னை மரம் என்றால் உனக்கும் அது புன்னை மரமாகத் தானே தெரிகிறது. எனக்குப் புன்னைப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்றா சொல்வாய்?"

"ஆமாம், புன்னை மரம் உனக்கும் எனக்கும் ஒன்றுதான். ஆனால் உனக்கும் எனக்கும் அது ஒரே மாதிரியான புன்னை மரமுமல்ல..."

"குழப்ப ஆரம்பித்துவிட்டாயா?"

"இல்லை, பார்க்கும் மனங்களைப் பொறுத்து அது வேறுபடுகிறது என்கிறேன். இப்போ சுலபமாய் விளங்கிக் கொள்வதற்காகச் சொல்வதென்றால், தீயைப் பார்க்கும் போது நமக்கு என்ன உணர்வுகள்

தருவது முழுதில்லான்

தோன்றுகின்றன? அந்தீயைச் சுட்டெரிக்கும் தீ, முப்புரம் எரித்த கடவுள், மதுரையை எரித்த கற்புக்கரசி, மணமக்கள் வலம் வரும் தீ, அக்கினிக் குஞ்சில் வெந்து தணியும் காடு, பல நூற்றாண்டுகளாக பலிகளை வாங்கிக் கொண்டு தூய்மையை நிறுவுவதற்காகக் கனன்று வரும் விஷயம் என்றெல்லாம் நமக்குள் இருக்கிறது நெருப்பு. இதுவே மேற்கு நாட்டவர்களுக்கும் தீயைப் பற்றியதான உணர்வாக இருக்க முடியும் என்று சொல்லலாமா? நமக்குள் இருக்கும் நெருப்புதான் நமக்கு. அவர்களுக்குள் இருக்கும் நெருப்புதான் அவர்களுக்கு.... நீ சொன்னது போல இருவருக்குமே நெருப்பு ஒன்றாக இருந்தாலும், இருவருக்கும் அது வேறுவேறாகவும் இருக்கும்... சரிதானே?"

"புரிகிறது. சிலருக்குத் தீ கூடப் பொய்கையாகத் தோன்றும் நேரம் இருக்கிறது. கணவன் இறந்தமையால் நெருப்பில் பாய்ந்து உயிர்விடத் தீர்மானிக்கும் பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு 'வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை நள்ளிரும் பொய்கையும் தீயுமோர் அற்றே' என்று கூறுகிற மனநிலை போல..."

"ஆமாம். ஓர் இடத்தைப் பற்றிய இன்ப, துன்ப உணர்வுகள் அந்த இடத்தையொட்டி மட்டும் அமைவதில்லை. வேலா, அந்த இடத்தோடு தொடர்பு கொள்ளும் மனத்தையும் ஒட்டியே அமைகின்றன. ஊரூராகச் சென்று நிகழ்ச்சிகள் நடத்தும் நடனக் கலைஞர்கள் தங்கிப் பிரிந்து சென்ற பின், ஊரில் சிலருக்கு வெறுமை சூழ்ந்து விடுகிறது. ஆனால் இந்த ஆரவாரங்களில் வெறுப்புக் கொண்டோருக்கு, அவர்கள் நீங்கிய பின் உண்டாகும் அமைதியிலேயே மன நிம்மதியும் மகிழ்வும் தோன்றலாம். ஒரே நிகழ்வு இருவேறு மன உணர்வுகளைத் தோற்றுவிப்பது வெவ்வேறு மனிதர்களைப் பொறுத்தவரை சகஜம் தானே...!" அதியன் விண்ணத்தனார் என்ற புலவர் பாடுகிறார்:

இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த
புன்றலை மனறங் காணின் வழிநாள்
அழுங்கல் மூதூர்க் கின்னா தாகும்.

(அகம். 301 23-25)

ஸ்போர்ட்ஸ்

பின்வாங்கினார் பிந்த்ரா

1994ம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒரு குறிப்பிட்ட ஆட்டத்தில் மோசமாக விளையாட வேண்டும் என்று மனோஜ் பிரபாகருக்கு 25 இலட்ச ரூபாய் கொடுக்க கபில்தேவ் முன்வந்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது பழைய கதை.

கபில்தேவ் பிந்த்ரா

இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் பிந்த்ரா என்பவர் இந்தக் குற்றச்சாட்டை நேரடியாக கபில் தேவ் மீது சுமத்தியதும் பிரச்சனை பெரிதானது.

"இலஞ்சம் வாங்குவதை விடத் தற்கொலை செய்வதே மேல். இப்படியெல்லாம் வீண்பழி வரும் என்று தெரிந்திருந்தால் கிரிக்கெட் விளையாடவே வந்திருக்க மாட்டேன்!" என்று பேட்டியொன்றில் அழுதபடி கூறினார் கபில்தேவ்.

தன் மீது வீண் குற்றச்சாட்டுக் கூறிய பிந்த்ராவை "சும்மா விடமாட்டேன்!" என்று பொங்கி எழுந்த கபில்தேவ், தன் மீது பழிசுமத்திய பிந்த்ரா மீது மனநஷ்ட வழக்குத் தொடர்வேன் என்று பொங்கி எழுந்தார். இரசிகர்கள் பலரும் பிந்த்ராவுக்கு எதிராகக் கிளர்ந்தனர்.

இதைக் கண்டு பயந்த பிந்த்ரா இப்போது,

"கிரிக்கெட் சூதாட்டத்தில் கபில்தேவுக்கு தொடர்பு உண்டு என்பதற்கு என்னிடம் எதுவும் ஆதாரம் இல்லை!" என்று குட்டிக் கரணம் அடித்துள்ளார்.

300 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் வக்கார் யூனுஸ் டெஸ்ட் போட்டிகளில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இச் சாதனையைப் புரிந்தார். இதன் மூலம் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய-14வது வீரராக இவர் திகழ்கிறார். இவர் 300வது விக்கெட்டைத் தனது 65வது டெஸ்ட் போட்டியில் வீழ்த்தினார்.

பாகிஸ்தான் அணி சார்பாக வாஸிம் அக்ரம், இம்ரான் கான் ஆகிய இருவருமே 300க்கும் அதிகமான டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் யூனுஸ் இடம்பெறுகின்றார்.

அத்துடன் இலங்கைக் கெதிரான இதே டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் வாஸிம் அக்ரம் தனது 400வது டெஸ்ட் விக்கெட்டை கைப்பற்றினார்.

இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுக்களை வீழ்த்திய 4வது வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார். 450 விக்கெட்டுக்களுடன் கொட்னி -வோல்ஷ் முதலிடத்திலும், 434 விக்கெட்டுக்களுடன் கபில் தேவ் இரண்டாவது இடத்திலும் 431 விக்கெட்டுக்களுடன் றிச்சாட் ஹட்லி 3வது இடத்திலும் உள்ளனர்.

சிந்தியா பதில்கள்

★ அன்பின் சிந்தியா, கௌசல்யாவைப் போல பெண்ணை இலங்கையில் தேடிக் கொண்டிருக்கிறேன். கிடைப்பாளா?

ராஜி பிரேமநாதன், தலவாக்கலை.

கிடைப்பாள். ஆனால் அவள் விஜயைப் போல ஓர் ஆளையல்லவா தேடிக்கொண்டிருக்கிறாள்.

❑❑

★ நீங்கள் யாருக்காவது அட்வைஸ் பண்ணியதுண்டா?

எச்.எம்.நிபாஜி, திருகோணமலை.

ம். பிறரை ஆக்கிரமித்து நம்முடைய எல்லைக்குள் கொண்டு வந்துவிட யாருக்குத் தான் விரும்பமில்லை.

❑❑

★ கடவுள் இருக்கின்றார் என்று ஒரு பக்கமும், கடவுள் இல்லை என்று ஒரு பக்கமும் மக்கள் போர்க்கொடி பூண்டுச் சென்றால் நீங்கள் எந்தப் பக்கம் செல்வீர்கள்?

த.நிசாந்தன், பட்டாணிச்சூர்.

அப்பாடா! இப்படி ஆளுக்கொரு பக்கமாக இவர்கள் சென்று விட்டால் நமக்கேது தொல்லை? நிம்மதியாக இருந்து விடலாம்.

❑❑

★ சிந்தியாவுக்குப் பிடித்த நடிகை யார்?

வி.ஸ்கந்தரூபன், கொட்டகல.

அது காலத்துக்குக் காலம் மாறி வருகிற விஷயம் அதை விடுங்கள். சமீபத்தில் சக்தி ரீ.வி.யில் 'ஜானி' படம் பார்த்தேன். ஒரு நல்ல இயக்குநரான மகேந்திரன், ரஜினியையும் ஸ்ரீதேவியையும் நடிக்க வைத்து தந்த தோல்விப் படம் அது.

ஆனால், அந்த ஆரம்ப காலத்திலேயே ஸ்ரீதேவியின் நடிப்பும் அழகும்.... அடடா! திருடனான ரஜினியிடம் அதுபற்றித் தெரியாமலே "என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?" என்று கேட்பதும், " நானெல்லாம் உங்க பாட்டைக் கேட்கலாமே தவிர உங்களையே கேட்கக் கூடாது!" என்று ரஜினிமறுப்பதும், "நாலுபேருக்கு முன்னால் பாடுகிறவள் என்று என் கரெக்டரைப் பிடிக்காமல் தானே மறுக்கிறீர்கள்" என்று அழுகையை விழுங்கிக் கொள்வதுமாக, அந்த ஓரிரு நிமிடங்களில் அவர் காட்டும் முகபாவங்களை இன்று எந்த நடிகையிடமும் நாம் காண முடியாது என்று தோன்றியது.

இன்னுமொன்று, அறுவைச்சிகிச்சையினால் மூக்கைச் சரிசெய்துகொள்ளும் முன்பே அவர் நடித்த படம் அது. குழந்தைக் குறுகுறுப்பும், கொஞ்சல் மொழியும் அழகு முகபாவங்களுமாக என்னமாய்க் கிள்ளுகிறார் மனதை! ம்... தேவையில்லாமல் ஏன் மூக்கைத் திருத்திக் கொண்டார் ஸ்ரீதேவி?

❑❑

★ ஆண்கள் காதலில் தோல்வியுற்றபின் தாடி வைத்துக் கொண்டு அலைகிறார்கள். இந்தத் தாடிக்குக் காரணம்?

கே.எம்.அனீஸ், புதிய காத்தான்குடி-06.

தாடி என்பது தானாக வளர்வது. இதை வழிப்பதற்குக் கூட அடிக்கடி ஒருத்தி பக்கத்தில் இருந்து சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் அவளில்லாவிட்டால் தாடி வளர்கிறது. 'ஆடிக்குப் பின்னால் ஆவணி. தாடிக்குப் பின்னால் தாவணி!'

❑❑

'குபேரன்' படத்தில் கார்த்திக்-மந்த்ரா

★ எந்தக் காலகட்டத்திலும் 'நவரசநாயகன்' கார்த்திக்கால் மட்டும் எப்படித் தாக்குப் பிடிக்க முடிகிறது?

எம்.தௌபீக், கணேசபுரம்.

தாத்தாவான பிறகும் காதல் புரிந்து நடித்துக்கொண்டிருந்த அவரது அப்பா 'நவரசத் திலகத்தை' விடவா?

❑❑

★ 'முள்ளை முள்ளால்தான் எடுக்கணும்' விளக்கத்துடன் பதில் தரவும்?

எஸ்.இந்திராணி, பின்னோயா.

நீங்கள் தயார் என்றால் விளக்கமளிக்க எனக்கு என்ன தயக்கம். முள் என்பது கூரான ஒரு சிறு சமாச்சாரம். பெரும்பாலும் உள்ளங்காலில் தைக்கிறது. முனை கூராகவும் உருவத்தில் சிறிதாகவும் இருப்பதால் 'சரக்' கென்று உள்ளே புகுந்து, நுழைந்த அடையாளமும் தெரியாதவாறு தசைக்குள் மறைந்து விடுகிறது. எனவே, அதுபோன்ற கூரான ஒரு சிறிய பொருளால்தான் உள்ளே நுழைந்து அதைத் தொட முடியும். ஆனால் பழமொழியை நம்பி அதேவகை முள்ளால் உள்ளே துளைத்துத் தேட ஆரம்பித்தால், அதுவும் முறிந்து 'முள்ளுக்குத் துணை மற்றுமொரு முள்தான்' என்று புதுமொழி உருவாக நேரும். எனவே பின்னால் செல்லும் முள் முதலில் சென்ற முள்ளைவிட வலியதாக இருக்க வேண்டியது அவசியம். இன்றைய காலத்தில் (அதாவது இரும்புக் காலத்திற்குப் பிறகு) இரும்பினாலான முள்ளைப் போலவே கூரியதான ஊசிகள் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு முயலலாம். 'சேஃப்டி பின்' என்று சொல்லப்படும் சட்டை ஊசிகள் கையில் பிடித்து முள்ளை எடுப்பதற்கு வாகாக இருக்கும். முள் போன்ற கட்டைகள் ஏதாவது தசைக்குள் ஏறி இறுகிவிட்டிருந்தால், அவற்றைப் பிடித்து இழுப்பதற்கு சாவணத்தின் உதவியும் தேவைப்படும். எப்படியிருந்தாலும், முள்ளை எடுக்க மிக அவசியமானவை சட்டை ஊசிகள்தான் என்பது என் கருத்து. அதாவது முள்ளை எடுக்க அதைவிட வலிய முள். அறுவையைச் சமாளிக்க அதைவிட வலிய அறுவை.

❑❑

★ பத்திரிகைப் படிப்பவர்களை 'வாசகர்கள்' என்று அழைக்கிறோம். வானொலி கேட்பவர்களை 'நேயர்கள்' என்று அழைக்கிறோம். தொலைக்காட்சி பார்ப்பவர்களை எப்படி அழைப்பது?

எம்.ஐ.எம்.இல்ஹாம், ஹெம்மாதகம.

வாசிப்பதால் வாசகர்கள் சரி. கேட்பவர்களை கேளுநர்கள் என்றிருக்கலாம். ஆனால் அதைவிட நெருக்கமாக நேயத்துக்குரியவர்கள் என்ற பொருளில் 'நேயர்கள்' என்றழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் readers, listeners, Viewers என்பதற்கெல்லாம் பொதுவாக தமிழில் 'நேயர்கள்' என்றழைப்பது இனிமையாக இருக்கிறது. விரும்பிப் படிப்பவர்கள், விரும்பிக் கேட்பவர்கள், விரும்பிப்பார்ப்பவர்கள் விரும்பி இரசிப்பவர்கள் எல்லோரும் நேயர்களே!

❑❑

★ சிந்தியாவை யாராவது புகழ்ந்தால் என்ன நினைப்பீர்கள்?

எஸ்.மதிவதனி, கொழும்பு 13.

அத்துடன் எத்தனை கேள்விகள் வந்திருக்கின்றன என்று பார்ப்பேன்.

❑❑

வேதாளம் சொன்ன மூன்று கதைகள்

பத்மாவதியை நாட்டை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்று அமைச்சர் கூறிய வார்த்தையைக் கேட்டு அரசன் அவளை நாட்டை விட்டுத் துரத்தி விட்டான். இருப்பினும் அரசனுக்கும் மகாராணிக்கும் மகளை விட்டுப் பிரிந்த துயரம் அதிகமாகியது. இருவரும் நோய் வாய்ப்பட்டு சிறிது நாட்களில் உயிர்துறந்தனர். தாய் தந்தையரை இழந்த பத்மாவதியும் இறந்து விட்டாள்.

விக்கிரமாதித்தனிடம் இவ்வாறு கதையைக் கூறிய வேதாளம், "அரசனும் அரசியும் மகள் பத்மாவதியும் இறந்தது யாருடைய குற்றம்?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன், "அரசன் காலியங்கராயன் தன் அமைச்சர் கூறிய முடிவையிட்டு நீர் ஆராய்ந்து பார்க்காமல் அமைச்சர் சொன்ன கதையைக் கேட்டு பத்மாவதியை நாட்டை விட்டுத் துரத்தினான். ஆகவே, பத்மாவதியை நாட்டை விட்டுத் துரத்திய அமைச்சரே குற்றவாளி!" என்று கூறினார்.

விக்கிரமாதித்தன் கூறிய முடிவைக் கேட்ட வேதாளம், விக்கிரமாதித்தனின் தோழிலிருந்து குதித்து மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறிக்கொண்டது.

வேதாளத்தின் பின்னால் ஓடிச் சென்ற விக்கிரமாதித்தன் மரத்தின் மீதேறி வேதாளத்தைப் பிடித்து தனது தோழில் சுமந்த வண்ணம் நடக்கலானார்.

வேதாளம் முன்னர் கூறியது போல மீண்டும் ஒரு புதிர்க் கதையை விக்கிரமாதித்தனிடம் கூறத் தொடங்கியது.

சடகோபன் என்ற பிராமணனுக்கு அழகான ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பெயர் சின்னி. இவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள மூன்று பிராமண இளைஞர்கள் தனித்தனியாகத் திட்டமிட்டனர்.

சின்னியின் அண்ணனை அணுகி ஓர் இளைஞன் அவளைத் தனக்குத் திருமணம் செய்து தரும்படி கேட்டான். அவனும் அதற்கு ஒப்புக் கொண்டான். அடுத்த இளைஞன் சின்னியின் தாயிடம் போய், சின்னியைத் தனக்கு மணம்முடித்து வைக்குமாறு கேட்டான். சின்னியின் அண்ணன் முதல் இளைஞனுக்கு அளித்த வாக்குப் பற்றி அறியாதவளான அப்பெண் இரண்டாவது இளைஞனுக்கு தன் மகளைத் தருவதாக வாக்களித்தாள்.

இந்த இரு சம்பவங்களும் தெரியாத சின்னியின் தகப்பனான சடகோபனிடம் மூன்றாவது இளைஞன் சென்றான். சின்னியைத் தனக்கு மணம்முடித்துத் தரும்படி கேட்டதும் சடகோபன் சம்மதமளித்தார்.

ஒரு நாள் மூன்று இளைஞர்களும் சடகோபன் வீட்டுக்கு ஒரே வேளையில் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் சின்னியைத் தாங்களே திருமணம் செய்யப் போவதாக வாதிட்டனர்.

இதனைத் தொடர்ந்து அந்தச் சூழ்நிலையைப் பார்த்துச் சகிக்க முடியாத சின்னி கேணியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். அவளுடைய உடலை எடுத்துக் கொண்டு போய் சுடலையில் எரித்தனர். அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிய இந்த மூன்று இளைஞர்களாலும் சின்னியின் பிரிவைத் தாங்க முடியவில்லை. மூவரும் சுடலையிலேயே போய்க் காத்திருந்தனர்.

சிதைக்கு வைக்கப்பட்ட தீ அணைந்ததும் ஓர் இளைஞன் சின்னியின் எலும்புகளைப் பொறுக்கி ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு கங்கையில் கொண்டு போய் போடப் போவதாகக் கூறிக் கொண்டு புறப்பட்டான். இரண்டாமவன் அவளுடைய சாம்பலை ஒன்றாகச் சேர்த்துக் குவித்து வைத்துக் கொண்டு அங்கேயே காவல் காத்திருந்தான்.

மூன்றாவது இளைஞன் உலகத்தையே வெறுத்து துறவியானான். இந்தத் துறவி ஓர் ஊருக்குச் சென்று ஒரு வீட்டின் வாயிலில் நின்ற வண்ணம் பிச்சை கேட்டான். வீட்டினுள்ளிருந்து வெளிவந்த பெண், ஓர் இளம் பிராமணன் பிச்சை கேட்டு நிற்பதைக் கண்டாள். அவனை இருக்கச் சொல்லி விட்டு உள்ளே சென்றாள். அவளுடைய குழந்தை உள்ளே அழுதவண்ணம் எதற்கோ அடம் பிடித்துக் கொண்டிருந்தது.

அப்பெண் குழந்தையைத் தூக்கி எரிந்து கொண்டிருந்த நெருப்பினுள் போட்டு விட்டாள். இந்தக் காட்சியை பிச்சைக்கு வந்த பிராமண இளைஞன் பார்த்து அதிர்ச்சியுற்றான். "உனவு ஆயத்தமாகி விட்டது உண்ணவாருங்கள்!" என்று அப்பெண் இளைஞனை அழைத்தாள். வெருண்டு போயிருந்த துறவி, "பிள்ளையைக் கொன்று நெருப்பில் வீசிய உன் வீட்டில் நான் உண்ணமாட்டேன்!" என்று கூறிவிட்டு அவ்விடம்விட்டு அகல முற்பட்டான். அவனைப் போகவிடாமல் தடுத்த அப்பெண், அவனைப் போக வேண்டாம் என்று கூறிவிட்டு உள்ளே சென்று, தன் பிள்ளையின் எலும்புகளையும் சாம்பலையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து அதன் மீது சஞ்சீவி மந்திரத்தைக் கூறி, ஒரு செம்பிலிருந்த தீர்த்தத்தையும் தெளித்து விட்டாள்.

இச்செய்கை முடிவடைந்ததும் தீயினுள் போடப்பட்ட அக்குழந்தை உயிர் பெற்று எழுந்தது. இந்த அதிசயத்தைப் பார்த்த இளந்துறவி ஓடிச் சென்று அந்தப் பெண்ணுடைய கால்களைப் பிடித்த வண்ணம் எப்படியாவது அந்த மந்திரத்தை தனக்குச் சொல்லித் தரும்படி கெஞ்சிக் கேட்டான். அந்தப்பெண்ணும் சம்மதித்து- இளந்துறவிக்கு சஞ்சீவி மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தாள்.

சஞ்சீவி மந்திரத்தைக் கற்றுக் கொண்டதும் துறவு பூணுவதற்காக போட்டிருந்த காவி உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு ஓட்டமும் நடையுமாக தான் விரும்பிய பெண் அக்கினியுடன் சங்கமமாக்கப்பட்ட சுடலையை நோக்கிச் சென்றான். இந்தச் சுடலையில் சின்னியின் சாம்பலை காவல் காத்துக் கொண்டிருந்த இளைஞன் அங்கேயே காணப்பட்டான். இதே சந்தர்ப்பத்தில் சின்னியின் எலும்புகளுடன் கங்கையை நோக்கிச் சென்ற இளைஞனும் அதே எலும்புகளுடன் சுடலைக்கு வந்து சேர்ந்தான்.

துறவியாகச் சென்றவன் தான் கற்று வந்த சஞ்சீவி மந்திரத்தின் மகிமையை ஏனைய இருவரிடமும் எடுத்துச் சொன்னான். மூவருமாகச் சேர்ந்து சாம்பலையும் எலும்புகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்தார்கள்.

துறவியாக மாறியவன் சஞ்சீவி மந்திரத்தை உச்சாடனம் செய்து, தன்னுடன் கொண்டு வந்திருந்த கமண்டலத்திலிருந்து தீர்த்தத்தையெடுத்துத் தெளித்தான். உடனடியாக சின்னி உயிருடன் எழுந்து உட்கார்ந்தாள். சின்னி உயிருடன் எழுந்ததும் மூன்று இளைஞர்களுக்கும் பழையபடி மோதல்கள் தொடங்கின. அந்தப் பெண்ணை தான் தான் மணமுடிக்க உரித்துடையவன் என்று மூவரும் சண்டையிட்டனர்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திக் கொண்ட வேதாளம் விக்கிரமாதித்தனைப் பார்த்து, "மன்னவனே! இந்த மூன்று இளைஞர்களில் இந்தப் பெண் சின்னியை தனது மனைவியாக்கிக் கொள்ள யார் உரித்துடையவர்கள், என்று கேட்டது.

இவ்வினாவுக்கு பதிலளித்த விக்கிரமாதித்தன், "சின்னியின் எலும்புகளை கங்கையில் வீசுவதற்குச் சென்றவன் அப்பெண்ணுக்கு மகனாவான். மந்திரத்தைக் கூறி அவளுக்கு உயிர் கொடுத்தவன் தந்தை முறையாவான்!" என்று கூறிவிட்டு "அவளுடைய சாம்பலை காத்துக் கொண்டிருந்தானே அந்த இளைஞன் தான் சின்னியை மணக்கத் தகுதியுடையவன்!" என்று கூறி முடித்தார். இம்முடிவைக் கேட்ட வேதாளம் விக்கிரமாதித்தன் தோளிலிருந்து பாய்ந்து ஓடிச் சென்று மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

விக்கிரமாதித்தன் வேதாளத்தின் பின்னோடிச் சென்று மரத்திலிருந்து அதனை கீழே இறக்கி தோளில் சுமந்த வண்ணம் நடக்கலானார்.

வேதாளம் இப்பொழுது விக்கிரமாதித்தனிடம் தனது மூன்றாவது கதையை சொல்லத் தொடங்கியது.

அங்க தேசத்தில் ஆதிவிஷ்ணு என்ற பெயருடைய ஒரு பிராமணன் இருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்ற அம்மூவரும் அந்த நாட்டு மன்னன் யோகதானனிடம் சென்று தங்களுக்கு வேலை தரும்படி கேட்டுக் கொண்டனர்.

மன்னன், அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவர்கள் பெற்ற தேர்ச்சிகளையும் எந்தெந்த துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று விசாரித்தான்.

ஒருவன் "நான் உனவு உண்பதில் தேர்ச்சி பெற்று இருக்கிறேன்!" என்றான்.

மன்னாதி மன்னன் 11

இரண்டாமவன், "நான் நன்றாகத் தூங்குவேன்.!" என்றான்.

மூன்றாமவனோ, "நான் பெண்களிடத்தில் உரையாடுவதில் கெட்டிக்காரன்!" என்றான்.

இம்மூவருடைய ஆற்றலையும் பரிசோதித்துப் பார்க்க அரசன் விரும்பினான். உணவில் நாட்டமுள்ளவனை ஒரு பிராமணனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அடுத்தவனை ஒரு நல்ல பஞ்சணை மெத்தையில் மலர்களைத் தூவி அதில் படுக்க வைக்கும்படி காவலர்களுக்கு மன்னன் கட்டளை இட்டான்.

மூன்றாவது இளைஞனை ஒரு நடனமாதிடம் ஒரு நாள் முழுவதும் இருந்து உறவாடிவிட்டு வரும்படி கூறி அனுப்பி விட்டான்.

அடுத்தநாள் பொழுது புலர்ந்ததும் மூன்று இளைஞர்களையும் அரசன் அரண்மனைக்கு அழைத்தார். அவர்களுடைய அனுபவங்களை விவரமாகக் கூறுமாறு பணித்தார்.

உணவுப்பிரியன், "நான் உண்ட உணவில், சுடு காட்டு நாற்றம் அடித்தது!" என்றான். அடுத்தவன், தான் உறங்கும் போது தேகம் முழுவதும் தாங்கமுடியாத வலி எடுத்தது!" என்று கூறினான்.

பெண்களிடம் உரையாடுவதில் வல்லவன் என்று தன்னைத்தானே கூறிக் கொண்டவனிடம் விசாரித்தான். "நான் உரையாடிக் கொண்டிருந்த பெண்ணிடம் பால் வாடை வீசியது!" என்றான்.

அரசன் முதலில் உணவுப் பிரியனுக்கு உணவளித்த பிராமணனை விசாரித்தான். அதற்கு அந்த பிராமணன் "நான் சமைத்த அரிசி சுடுகாட்டுச் சாம்பலை உரமாகப் பவித்து உற்பத்தி செய்யப்பட்ட நெல்லிலிருந்து பெறப்பட்டதாகும்!" என்றான்.

இராஜகுமாரன்

இரண்டாமவன் படுத்துறங்கிய பஞ்சணையைத் தயாரித்தவனை விசாரித்ததில் "அப்பஞ்சணையில் ஒரு மயிர் கிடந்தது!" என்று கூறினான்.

மூன்றாவது இளைஞன் உறவாடிய நடனமாதை விசாரித்தபோது, தான் ஓர் இடையர் குலப்பெண் என்று கூறினாள்.

அரசனைப் பொறுத்தவரையில் அம்மூவருக்கும் வைத்த பரீட்சையில் சித்தியடைந்து விட்டனர் என்றே தோன்றியது. அவர்கள் மூவருக்கும் அரண்மனையில் வேலை கொடுத்தார்.

இவ்வாறு கதையைக் கூறி முடித்த வேதாளம் "இந்த மூவரில் யார் திறமைசாலி?" என்று கேட்டது. இதற்குப் பதிலளித்த விக்கிரமாதித்தன்,

"உணவு உண்பதில் வல்லவனும், பெண்ணிடம் பேசுவதில் வல்லவனும் விழித்திருக்கும் நிலையிலேயே தங்கள் சுகத்தைச் சிந்தித்தனர். இருப்பினும் தூங்கும் போது சுகத்தை உணர்ந்தவன் தான் உண்மையான திறமைசாலி!" என்று புதிரை விடுவித்தார்.

விக்கிரமாதித்தனின் விடையைக் கேட்ட வேதாளம், அவருடைய தோளில் இருந்து இறங்கி ஓடிச் சென்று முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது.

(மன்னன் வருவான்..)

சர்தார்ஜி ஜோக்ஸ்

ஒரு சர்தார்ஜி கோயிலில் மிக பயபக்தியுடன் குனிந்து வளைந்து நீண்ட நேரமாகக் கடவுளை வேண்டிக் கொண்டிருந்தார். இதைக் கவனித்துக் கொண்டிருந்த சர்தாஜியின் நண்பர் ஒருவர் சர்தார்ஜியிடம் வந்து,

"என்ன விசேஷம் சர்தார்ஜி? நீண்ட நேரமாகக் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறீர்களே?" என்றார்.

"ஆமாம். நான் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் சர்தார்ஜி.

"நன்றியா? எதற்கு?" என்று கேட்டார் நண்பர்.

"என்னுடைய கழுதை காணாமல் போய் விட்டது. அதற்காகத் தான் கடவுளுக்கு நன்றி கூறிக்கொண்டிருந்தேன்!" என்ற சர்தார்ஜியைப் பார்த்து அதிர்ச்சியுடன்,

"கழுதை காணாமல் போனதற்கு கடவுளுக்கு ஏன் நன்றி சொல்ல வேண்டும்?" என்று கேட்டார்.

"என்ன நீங்கள் முட்டாள்தனமாகக் கேள்வி கேட்கிறீர்கள்? அந்தக் கழுதையின் மேல் நான் சவாரி செய்து கொண்டிருக்கும் போது, அது காணாமல் போயிருந்தால், நானும் சேர்ந்தல்லவா கழுதையுடன் காணாமல் போயிருப்பேன்.

நல்ல வேளையாக கழுதை காணாமல் போகும்போது நான் அதன் மேல் சவாரி செய்யாமல் இருந்தேனே..... அதற்காகத்தான் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்!" என்றார் சர்தார்ஜி.

ஒரு சர்தார்ஜியைப் பார்த்து மற்ற சர்தார்ஜி கேட்டார்.

"ஏன் இன்று காலையில் நான் கூப்பிடக் கூப்பிட நிற்காமல் அவ்வளவு வேகமாக ஓடினீர்கள்?" என்றார்.

உடனே மற்ற சர்தார்ஜி,

"நீங்கள் கூப்பிட்டது எனக்குக் கேட்டது. ஆனால் நான் ஒரு பெரிய சண்டையை நிறுத்துவதற்காகத்தான் அவ்வளவு வேகமாக ஓடினேன்!" என்றார்.

உடனே முதல் சர்தார்ஜி,

"சண்டையா? யாருக்கு யாருடன் சண்டை?" என்று கேட்க, அதற்கு இரண்டாவது சர்தார்ஜி,

"எனக்கும் இன்னொருவருக்கும்!"

என்று கூலாக தான் அடிபடாமல் தப்பி ஓடியதைச் சமாளித்தார்.

வயிற்றுப்போக்கினால் அவதிப்பட்ட ஒருவர் பல மருத்துவர்களிடமும் சென்று வைத்தியம் பார்த்தார். ஆனால் வயிற்றுப் போக்கு நிற்கவில்லை. இரண்டு நாட்களாகியும் வயிற்றுப்போக்கு நிற்காததால் மிகவும் சோர்வுடன் ஒரு சர்தார்ஜி டாக்டரிடம் சென்றார்.

நோயாளியைப் பரிசோதித்த சர்தார்ஜி டாக்டர்,

"இது ஒரு சாதாரண விஷயம். உடனே நீங்கள் கடைக்குச் சென்று ஒரு சிவப்புக் கலர் உள்ளாடையை வாங்கிப் போட்டுக் கொள்ளுங்கள்!" என்றார்.

அதற்கு நோயாளி,

"என்ன டாக்டர் இது? இரண்டு நாட்களாக நிற்காத வயிற்றுப் போக்கு மருந்து, மாத்திரை எதுவும் இல்லாமல் வெறும் சிவப்புக் கலர் உள்ளாடையை வாங்கிப் போட்டால் எப்படி நிற்கும்?" என்றார்.

அதற்கு சர்தார்ஜி டாக்டர்,

"என்ன நீங்க இப்படிக் கேட்டுட்டீங்க. சிவப்புக்கலர் துணியைக் காட்டினால் அவ் வளவு பெரிய ரயிலே நிற்குது. சிவப்புக்கலர் உள்ளாடை அணிந்தால் சாதாரண வயிற்றுப் போக்கு நிற்காதா?" என்று சொன்னார்.

ஃபேன் கீழே உட்கார்ந்துகிட்டே விசிறி எடுத்துட்டு வரச் சொல்றாரே.. எதுக்கு?

Regd. as a News Paper at the G.P.O. (QD/63/NEWS/2000)

சுவாரசிய

நிறை குறைப்பு

➡ நன்னீர் நிலைய பாதுகாப்புக்காக நிதி சேகரிக்க 1997 மே 26ல் பிரிட்டனில் ஒரு புதுவகையான போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிளாஸ்டிக்கில் உருவாக்கப்பட்ட வாத்து பொம்மைகளுக்கான இட்டப்போட்டிதான் அது. இதற்கென ஒரு இலட்சம் பிளாஸ்டிக் வாத்துக்களை உருவாக்கினார்கள். இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எண் பொறிக்கப்பட்டது.

இவற்றை ஒவ்வொன்றும் ஒரு பவுண்ட் விலை ஆதரவாளர்களுக்கு விற்கப்பட்டன. வாத்துக்கள் எல்லாவற்றையும் ஒரு சொல்லலில் போட்டு, எனவ ஆற்றுக்குள் எடுத்துச் சென்றனர். மதியம் சரியாக 2.00 மணிக்கு ஒரு சமிஞ்ஞையுடன் வாத்துகள் ஆற்றில் கொட்டப்பட்டன. இவை அனைத்தும் நீரோட்டத்துக்கு ஏற்ப இழுத்துச் செல்லப்பட்டன. சரியாக ஒரு மைல் தூரம் வாத்துக்கள் பயணித்தன. குறிப்பிட்ட முடிவு எல்லையை 2 மணி 15 நிமிடம் ஓடிச் சென்று முதலாவது இடத்தைப் பெற்றது. லிஸ்ன டெவன்சேயைச் சேர்ந்த கிரின் கிரின் எனபவருடைய 21, 159வ இலக்கம் பொறிக்கப்பட்ட வாத்து.

இப்போட்டியின் மூலம் நன்னீர் பாதுகாப்பு அமைப்புக்கு 8 இலட்சத்து 910 டொலர் கிடைத்தது.

➡ ஒருவருடைய உடல் பருமனாவதுடன் எடை அதிகரிப்பதற்கும் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அந்தப் அதிகமாக உட் கொள்ளுவதுதான் முக்கிய காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். உடலிலுள்ள சுரப்பிகள் சில சாக்கும் நீரவங்களும் இதற்குக் காரணம் என்றும் கூறுகின்றனர்.

உல்லாச சவாரி

உலகையில் உடலின் எடை அதிகரிப்பதற்கு உணவு மட்டுமே ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆராய்ச்சி மிருகங்கள் என்ற இந்த யாத்ரா கலாசாரி குழந்தைகளை மிரளிக்கத்தக்க மலைவென்று வதிப்பதற்கு ஆரம்பித்துவிட்டார். 1987 ஜனவரியில் இவருடைய எடை 511 கிலோ கிராமாக இருந்ததால் இவர் எந்த வகையிலும் நடமாட முடியாதவராகிவிட்டார். முச்சேதுபாடு கவலைமாகிவிட்டது. உடனடியாக மருத்துவ சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய எடையைக் குறைப்பதற்கான சிகிச்சை அளிக்கப்படுவதையே பத்திரிகைகள் கவனிக்கின்றன.

ஆரம்பத்தில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு, பாரம் தூக்கி ஒருவரை பயன்படுத்தப்பட்டது என்ற செய்தியும் பரவி ஏற்கனவே முரசு பிரசுரிக்கப் பட்டிருந்தன. தேவைக்கு அரிவார்கள்.

1வது பிறந்தநாள் வாழ்த்து 27.05.2000

செல்வன் முதுவை புனிர்

அநுராதபுரத்தில் உள்ள பிரி-தாரான் நிலா தயாதிகளின் செல்வ புதுவன் முவைட் புனிர் தனது முதலாவது பிறந்த நாளை 27.05.2000 அன்று அநுராதபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் பிரமாண்டமாக கொண்டாடினார். இவனை அநுராதபுரத்தில் உள்ள உம்மா, வாப்பா, மாப்பிள்ளை, மாப்பிள்ளை, பெரியம்மாமா, பெரியம்மாமா, மாமியார், மாமனார், சாச்சாமார், ஒட்டமாவடியில் உள்ள உம்மாமா, பெரியம்மாமா, பெரியம்மாமா, மாமாமார், மாமியார், அமெரிக்காவில் உள்ள மாமா, மாமி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புனிர் குட்டியை அல்லாஹுவின் அருளால் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: ஒட்டமாவடி-அநுராதபுரம்

ஓய்வு

⬆ பக்கிங் இவர்கள் உல்லாசமாகக் சவாரி செய்யும் இந்த குதிரைகளை அமெரிக்காவில் தயாரிக்கப்படுகின்றன.

எந்தவொரு சாலை, ஓடை போன்ற தரைக் கூட இவர்கள் வாகனங்களில் செல்வார்கள். ஒரு மாதத்துக்கு மணிக்கு மாவை தேர்களில் இந்த வாகனங்களில் குதிரையாக செல்வார்கள்.

இவரைப் பரிசோதனை செய்ய வந்தபோது, அந்த இயந்திரமாக இந்த குதிரை வாகனங்களில் செல்வார்கள் அதில் பயணம் செய்வார்களுக்கு நல்ல உடற்பயிற்சி.

➡ கிரிக்கெட் வீரர்கள் ஓய்வு நேரங்களை விளையாடி வருவது அவர்களுக்கு நல்லதல்ல. அவர்கள் சார்ந்த அணிக்கு நல்லதல்ல. பிரபல வீரர்கள் கிடைத்த ஓய்வை சரியாகப்பயன்படுத்தாமல் பயத்திற்காக இங்கிலாந்து கவுண்டி அணிகளில் சேர்ந்து விளையாடுவார்கள்.

தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்டுக்கு அடிக்கடி ஓய்வு கொடுத்து. அவரது உடல் நலம் பாதிக்காத போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்து கொண்டிருந்தது தென்னாபிரிக்கா.

ஆனால் டொனால்ட் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு இங்கிலாந்து கவுண்டி அணிகளில் ஒன்றான வோர்விக்ஷையர் அணிக்காக விளையாடுவார்.

அங்கமையில் ஹாம்ப்ஷையர் அணிக்கெதிராக வோர்விக்ஷையர் விளையாடியது. இதில் ஹாம்ப்ஷையர் அணியில் இடம்பெற்றிருந்த அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோர்ன் தூக்கி அடித்த பந்தை எல்லைக்கோட்டுக்கு அருகே களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த டொனால்ட் கவிழ்ந்து பிடித்தார்.

ஆனால் நிலை தடுமாறி எல்லைக் கோட்டுக்கு வெளியே விழப்போய் பலமாக மோதி விழுந்து விட்டார். இதனால் வோர்ன் அவுட் இல்லை என அறிவிக்கப்பட்டது.

மீண்டும் விழுந்த டொனால்டுக்கு வலது முழங்கை முறிவு ஏற்பட்டது. 6 வாரங்கள் ஓய்வு எடுக்க வேண்டுமென்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். கிடைத்த ஓய்வைப் புறக்கணித்து விட்டு விளையாடியதால், கடைசியில் படுக்கையில் ஓய்வெடுக்கிறார் டொனால்ட்.

இதில் டொனால்டுக்கு ஓர் ஆறுதலான விஷயம் அவரது அணி 97 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. மேலும் 3 விக்கெட்டுக்கள் வீழ்த்திய டொனால்ட் அட்டாயனாகத் தெரிவானார்.